
கல்கி



KALKI
27-10-1968

40
காசு



பரிபூரண அழகு பராமரிப்பு–

எவ்வேளையிலும் எங்குமே

க்ருக்ஸ் லாக்டோ-காலமைன் துணையுடன். கோல்ட் க்ரீமாக உபயோகியுங்கள்.

ஏனெனில், லாக்டோ-காலமைன் ஒரு உயர்ந்த கோல்ட் க்ரீம் போலவே, உங்கள் சருமத்தை சுத்தீகரித்து, இயற்கையான ஈரத் தன்மையை அளிக்கிறது. சருமம் வறட்சியடையாமல், மிருதுவாக வும் மென்மையாகவும் இருக்க உதவுகிறது.

ஆனால்... இதுமட்டுமல்ல... காலமைன் மற்றும் விட்ச்ஹேஸல் சேர்ந்திருப்பதினால், லாக்டோ-காலமைன் உங்கள் சருமத்தை இதமாக பேணி அழகூட்டுகிறது... மேலும் இரவு, பகல்-எந்நேரத்திற்கும் உகந்த மேக்-அப் சாதனமான லாக்டோ-காலமைன் ஒப்பனையின் 'அடிப்படை' யாக விளங்குகிறது.

உங்கள் முக எழிலுக்கு உண்மையில் லாக்டோ-காலமைன் தவிர வேறு எதுவுமே வேண்டாம்.

க்ருக்ஸ்
லாக்டோ-காலமைன்
மாசில்லா அழகுக்கு!



க்ருக்ஸ் இன்டர்ப்ரான் லிமிடெட்,
பம்பாய்-25.

TAM

கல்கி

பொருளடக்கம்

கீலக ஐப்பசி 11 :: அக்டோபர் 27

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

பனீர் - கனீர்!

ஜாக்விலைன் கென்னடி அரிஸ்டாட்டில் ஸாக்ரட்டீஸ் ஓனேஸிஸ் என்ற கோடீசுவரரை மறுமணம் செய்து கொள்வார்.

''ஜாதகப் பொருத்தத்துடன் இவரை விடத் தகுதியான மாப்பிள்ளையைப் பிடிக்கக் கொண்டுவந்து விடுவேன். ஆனால் இப்படி ஒரு பெயருக்கு எங்கே போகிறது? அரிஸ்டாட்டில் ஸாக்ரட்டீஸ் அடேயப்பா!'' என்று மிரளுகிறுர் கல்யாணத் தரகர் பஞ்சாமி.

★

இந்தியரான ஓர் அமெரிக்கப் பிரஜைக்கு நோபல் பரிசு கிடைத்ததை யொட்டி பாரத அரசாங்க உயர் அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்திருக்கிறுர்கள்.

முதிர்ச்சி அடைந்த மூளைகள் அயல் நாடுகளுக்குப் போய்விடுவதை உணர்ந்து தானே இந்த அதிர்ச்சி '


நிஜலிங்கப்பா
நாகர்கோயில் தேர்தல்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 □ இதழ் 13

இந்தியா அணுகுண்டு செய்யலாமா?

இந்தியா அணு குண்டு உற்பத்தி செய்ய வேண்டும் என்று யோசனை சொல்பவர்கள், இந்த சர்வ நாச ஆயுதத்தின் தன்மையைப் புரிந்து கொள்ளவில்லை. அணு குண்டுகள் தற்காப்பு ஆயுதங்கள் அல்ல. அவற்றை ஒரு நாடு வைத்திருந்தால் அதன் மீது மற்றெந்த தேசமும் அணு குண்டு வீசத் துணியாது என்பதே இவ்வாயுதங்களின் உபயோகம். இவ்வாறுதான் ருஷியாவும் அமெரிக்காவும் பரஸ்பரம் அச்சுறுத்தப்பட்டு, அணுகுண்டைப் பிரயோகித்துக் கொள்ளாமல் இருக்கின்றன. தற்காப்பு வேறு; அச்சுறுத்தலினால் தடுப்பது வேறு. ஆனால் சீனம் இந்தியாவுக்கு எதிராக சர்வ நாச ஆயுதத்தைப் பிரயோகிக்க முடிவு செய்து விட்டால், அதை அச்சுறுத்தித் தடுத்து நிறுத்த முடியாது. ஆயினும் இந்திய மக்களை யெல்லாம் அழிந்துவிட்டு இந்நாட்டை ஆளுவதற்குச் சீனம் எண்ண முடியாது. ஆனபடியால், எப்படிப் பார்த்தாலும் நமக்கு அணு குண்டு தேவையில்லை. இந்தியா அணு குண்டு தயாரித்தாலும் கூட, அதற்காக நம் நாடு ஒருபோதும் சீனத்தின் மீது ஆக்கிரமிப்பு நடத்தி அணுகுண்டைப் பிரயோகிக்கப் போவதில்லை. அதாவது, நாமாக முதற்கண் சீனத்தைத் தாக்கப் போவதில்லை; சீனம் நம்மை அணு குண்டால் தாக்கி நாசமாக்கினால் அதன் பின் நாம் அதற்குப் பதிலடி கொடுக்கவும் இடமில்லை. இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாததால் தான் இந்தியாவும் அணுகுண்டு தயாரிக்க வேண்டும் என்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க, அணு குண்டுத் தயாரிப்புக்குத் தேவைப்படும் ஏராளமான பொருட் செலவு நம்மை நாமே தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பாகும். அணு குண்டுக்கான தளவாட உற்பத்திக்கும் துணைக் கருவிகளின் தயாரிப்புக்கும் நம் நாட்டால் தாங்க முடியாத பொருட் செலவு தேவைப்படும். எனவே செலவையும் பொருட்படுத்தாமல், பயனையும் பொருட்படுத்தாமல், ஏதோ சாகஸம் செய்ய இந்தியா நினைத்தால்தான் அணு குண்டு உற்பத்தி குறித்து எண்ண முடியும்.

உலக நாடுகள் யாவும் அணு ஆயுதங்களைத் துறக்க வேண்டும் என்பதற்கே நாம் உழைக்க வேண்டும். இந்த இலட்சியம் பூர்த்தியாவதற்குள் இடைக் காலத்தில் புதிதாகச் சில நாடுகளில் அணு குண்டு உற்பத்தி பரவுவதை நாம் தடுக்க வேண்டும். அமெரிக்காவும் ருஷியாவும் தாங்களே உண்டாக்கிக் கொண்ட சிக்கலிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கின்றன. ஆயினும் ஒரு காலத்தில் அவை இவ்வாயுதங்களை முற்றிலும் துறந்துவிடும் என நம்புவோம். இப்போது அவற்றுக்குள்ள சிரமத்தை அணு ஆயுதப் பரவல் மூலம் நாம் அதிகமாக்கக் கூடாது.

அணு ஆயுதங்களை ஏராளமாக வைத்திருப்பதால் சக்தி கூடிவிடவில்லை என்பதை அமெரிக்கா நிரூபித்துவிட்டது. அணு ஆயுதக் குவியல் என்பது உபயோகமற்ற பாரம். அதைப் பிரயோசனப்படுத்திக் கொள்ள இடமில்லை. 'நம் சொத்து' என்று வெறுமே வைத்திருக்க வேண்டியதுதான். அணு குண்டை ஆக்கிரமிப்புக்காக உபயோகிப்பதை எந்த வல்லரசுமே சிந்திக்கவில்லை. எதிராளி அணு குண்டால் ஆக்கிரமிப்புச் செய்யும் பொழுது பதிலடி கொடுக்கலாமென்றாலோ, இந்த தகைய அணு ஆக்கிரமிப்புக்கும் இடமில்லை. அமெரிக்கா—ருஷியாவுக்கிடை நாம் காணும் இந்த நிலை, எந்த நாட்டுக்கும் பொருந்தும். எதிராளியைப் புண்படுத்தி அடிபணிய வைக்கும் ஆயுதம் அதைப் பிரயோகிப்பவருக்கு எதிராளியின் மீது ஆதிக்க சக்தி தரும். ஆனால் எதிராளியை அடியோடு கொன்றுவிடுகிற ஆயுதம் இத்தகைய சக்தியைத் தர முடியாது. இப்படிப்பட்ட அணு ஆயுதத்துக்குப் பயன் எப்படி இருக்க முடியும்?

எனவே பயனற்ற அணு ஆயுத உற்பத்தியில் இறங்கி அபாய வாய்ப்பை அதிகமாக்குவது உலக சமாதானத்துக்கு இழைக்கும் மகத்தான தீங்காகும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

காச்மீர மகாநாட்டில் ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணர் நிகழ்த்திய உரையின் அதிகார பூர்வமான நகலை இப்போது நான் படித்து விட்டேன். இருபதாண்டுகளின் ஓட்டத்தில் சூழ்நிலை மாறிவிட்டது என்பதை அவர் மிகவும் வலியுறுத்தியுள்ளார். இந்திய யூனியனுக்கு உட்பட்டு, அதிகபட்சமாக எவ்வளவு சுயாதீனம் பெறலாமோ அவ்வளவைக் காச்மீரம் பெறுவதற்கு மகாநாடு ஒப்ப வேண்டும் என்று அவர் கூறுவதாகக் காண்கிறேன். இந்த ஏற்பாட்டை காச்மீர மக்கள் ஏற்கு மாறு மகாநாடு செய்ய வேண்டும் என்றும், இதுவே காச்மீர மக்களின் விருப்பம் என பாகிஸ்தானுக்கும், உலக நாடுகளுக்கும் பிரகடனம் செய்ய வேண்டுமென்றும் ஜயப்பிரகாசர் சொல்கிறார். இந்தியாவிலுள்ள மற்ற ராஜ்யங்களுக்கு எவ்வளவு சுயாதீன உரிமை உள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளாமல், காச்மீரத்துக்கு மட்டும் அதிக பட்ச சுயாதீனம் தரவேண்டுமென காச்மீரத் தலைவர்கள் இந்திய சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என யோசனை கூறுகிறார். காச்மீர மக்களின் கருத்தை முடிவானதாக ஏற்கப் பாகிஸ்தான் இணங்கியிருப்பதால், மேற்கண்டவாறு செய்தால் பாகிஸ்தான் ஒப்புக் கொள்வதன்றி வேறு வழியில்லை என்கிறார்.

ஃஃஃ

ராஜ்யங்கள் நடத்தும் லாட்டரிகள் சட்டப்படி முறையானவை அல்ல என்ற என் கருத்தை யூனியன் சட்ட மந்திராலயம் உறுதி செய்துள்ளது. இதில் எனக்கு ஆச்சரியமில்லை. முன்பே ராஜ்யங்களின் அட்வகேட்—ஜெனரல்கள் உஷாராக இருந்து, லாட்டரி நடத்துவது சரியல்ல என்று ராஜ்ய அரசாங்கங்களுக்கு யோசனை சொல்லாததுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

எவ்வித உழைப்பும் இன்றி, வெறும் அதிருஷ்டத்தால் பிறர் பணத்தைப் பெறக் கோடிக்கணக்கான மக்களைத் தூண்டிவிடுவதன் தீய விளைவே நான் மிகவும் கவலைப்படும் அம்சம். இந்த அம்சம் லாட்டரி பற்றிய சட்ட மந்திராலய ஆராய்ச்சிக்குள் வரவில்லை. இவ்விஷயமாக தில்லி சர்க்காரும், ராஜ்ய அரசாங்கங்களும் தீர்க்காலோசனை செய்ய வேண்டும்.

சூதாட்டத்தில் பரிசுபெற்ற அதிருஷ்டசாலிகளைப் பற்றிப் பத்திரிகைகளில் பெரிதாக எழுதப்பட்டு, அதனூடே பாராட்டும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மக்களின் தரும உணர்வு நலிவதை இது அதிகமாக்குகிறது. பிரிட்டிஷ் பார்லிமெண்ட் செய்தது போல், லாட்டரி நடத்துவது அகௌரவமானது என்று எவ்வளவுக் கெவ்வளவு விரைவாக நமது அரசாங்கங்கள் தெளிவு பெறுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது.

கடும் உழைப்பையும், கூட்டுறவையும் ஊக்க எவ்வளவு உற்சாகம் தர வேண்டுமோ அவ்வளவும் தர வேண்டிய தருணம் இது. இச்சமயத்தில் லாட்டரியினால் லட்சம் ரூபாய் பெறும் வாய்ப்பில் மக்கள் சிந்தனையைத் திருப்பக் கூடாது. லட்சோப லட்சம் மக்கள் போட்ட பணத்தை எவ்விதப் பிரதியுமின்றி இழக்கும் போது, ஒருவித உழைப்புமின்றி யாரோ சிலர் 'பரிசு' பெறுகின்றனர். பரிசுத் தொகையும் லாட்டரி நடத்துவதற்கான நிருவாகச் செலவும் மக்களின் சேமிப்பை வெட்டுகின்றன. வரி போட்டு எரிச்சலை உண்டாக்கக் கூடாது என்பதற்காக இவ்விதம் சபலம் காட்டுவது நெறியற்ற, கண்ணியமற்ற செய்கை.

ஃஃஃ

ஸ்ரீமதி இந்திரா காந்தி ஐ. நா. சபையில் நிகழ்த்திய உரைக்குப் பத்திரிகைகள் மிகுந்த



மகாத்மா மணிமொழி

சத்தியத்தைத் தேடிச் செல்பவன் தன்னைப் பற்றி நினைப்பவனாக இருக்கவே முடியாது. பிறருக்காகத் தன் வாழ்வைத் தியாகம் செய்ய வேண்டியவன் சத்திய உபாஸகன். தனக்கென மட்டும் இந்தப் புவியில் எதையோ ஒன்றைத் தேடிக் கொள்வதற்கு அவனுக்கு அவகாசமே இராது.

ஒரு தனி மனிதனின் ஆற்றலுக்கு எல்லை உண்டு. தன்னால் எதையும் செய்ய முடியும் என்று எப்போது ஒருவன் தன்னையே ஏமாற்றிக் கொள்கிறானோ, அந்த விநாடியிலேயே ஆண்டவன் அவனது செருக்கை அடக்குகிறான். என்னைப் பொறுத்த மட்டில் பச்சிளம் குழந்தைகளிடமும், தாய்ப் பால் குடிக்கும் பாலகர்களிடமும்கூட உதவிகோரும் எளிமையை வரப்பிரசாதமாகப் பெற்றிருக்கிறேன்.

முக்கியத்துவம் தந்திருப்பது நியாயம். உரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அம்மையாரது தந்தையார் அடிக்கடி வெளியிட்டவையே. ஸ்ரீ நேரு அவர்கள் தார்மிகப் பெருமையும் உலக சமாதான ஆர்வமும் சேர்ந்த உன்னத பீடத்திலிருந்து பேசினார். அவர் உலக நாடுகளுக்கு அறிவுரை தந்த போது இந்தியாவின் நிலை இவ்வளவு படுமோசமாக இல்லை.

அதே கருத்துக்களை ஸ்ரீமதி இந்திரா காந்தி வெளியிடும் போது, ஒரு பெண் குரலும், பெண் உருவமும் சேர்ந்து அவற்றை உயர்த்திக் காட்டுகின்றன. இருப்பினும், இப்போது இந்தியாவின் நிலை இவ்வளவு ஒழுங்கீனமாக இராமலிருந்தால்தான், அவர் மற்ற உலக நாடுகளுக்கு அறிவுரை தருவதற்குகந்த தார்மிக சக்தி அவருக்குப் பின்னணியில் இருக்கும்.

நேருஜியின் கொள்கைகளை பிதுரார்ஜிதமாகப் பெற்று, இன்று அவற்றையே ஸ்ரீமதி இந்திராகாந்தி விசுவாசத்துடன் பின்பற்றுவதால் பொருளாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது. இதற்குச் சமீப காலமாகச் சர்க்காருக்கும் அதன் சிப்பந்திகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள பிணக்கே சான்று. இந்தப் பின்னணியில்தான் ஸ்ரீமதி இந்திராகாந்தி மற்ற நாடுகளுக்குப் பிரமாதமான அறிவுரை தந்திருக்கிறார்!

மேற்சொன்ன பிணக்கு அசாதாரணமானது. அது எவ்வளவு பரிகாசத்துக்குரியதோ, அந்த அளவுக்கு நிருவாகத் திறனுக்குச் சவாலும் ஆகும். முன் கிரீடம் தரித்துள்ள பிரதமரவர்கள்தான் இந்நிலைக்குக் காரணம் என்று சொல்வதற்கில்லை. ஆயினும் இந்நிலையைச் சமாளிக்க வேண்டியவர் அவரே. இந்த முழுப் பொறுப்பையும் அவர் ஏற்க முடியாதாகையாலேயே, அவர் கட்சிப் பற்றற்ற, அநுபவஸ்தர்களான அறிஞர்கள் கொண்ட குழுவை நிறுவி அதனிடம் நிருவாகப் பொறுப்பைத் தர வேண்டும் என்றும், இந்த நடவடிக்கைகளுக்குப் பார்லிமெண்ட் சம்மதிக்குமாறு செய்ய வேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் மனப்பூர்வமாகக் கூறிவருகிறேன்.

ஃஃஃ

ஸ்ரீ விநோபா பாவே அவர்களின் யோசனையைக் கேட்டு, இந்திய அரசாங்கம் ஓர் உயர் பொறுப்புள்ள ஆலோசனைக் குழுவை நியமித்து, அதன் மூலம் காந்திஜியின் நூற்றாண்டைக் கொண்டாடுமாக! இதை என் யோசனையாகக் குறிப்பிடாமல் ஸ்ரீ விநோபா பாவே அவர்களின் யோசனையாகவே குறிப்பிடுமாக!

ஃஃஃ

சுதேச உணர்ச்சி உலகெங்கும் பரவி வருகிறது. எனவே ஐரோப்பிய நாடுகள் யாவும் ஓர் ஐக்கிய அமைப்பாக ஒன்று கூடும்வாய்ப்பு இல்லை. இதே போல் ஐக்கிய நாடுகள் சபை உலகத்தின் சட்ட சபையாக வளர்ந்து, சமாதானத்தைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையும் மடிந்துவிட்டது. உலக அரசியல் பார்வையாளர் யாவரும் இதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். உலக நாடுகள் ஒன்று சேருவதற்குப் பதில் விலகி விலகிச் செல்கின்றன. எல்லாத் தேசத்தினரின் அரசியல் அறிவிலும் தனித்திருக்கும் உணர்ச்சி புத்துயிர் பெற்று இருக்கிறது.

இந்த நிலை தெளிவாகத் தெரிகிறது; தெளிவாகத் தெரியாதது யாதெனில் இதற்கான பரிகாரமே! சுதேச உணர்ச்சியின் கிளர்ச்சியும், பிரதேசப் பற்றின் எழுச்சியும் சர்வதேச மனப்பான்மையால் வெல்லப்பட வேண்டும். குறுகிய விசுவாசங்களை அகற்றுவதற்கான தியாகங்களைச் செய்தாலே உலக சர்க்கார் உருவாகி, சமாதானத்துக்கும் சட்டத்துக்கும் சக்தி வாய்ந்த முறையில் உழைக்க முடியும்.



அமெரிக்காவிலிருந்து தமிழக முதன் மந்திரி திரு அண்ணாதுரை அவர்கள் தமது கைப்படத் தலைவர் ராஜாஜிக்கு எழுதிய அன்பொழுகும் ஆங்கிலக் கடிதத்தையும் அதன் தமிழாக்கத்தையும் நம்வாசகர் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் வழங்குகிறோம்.

நியூயார்க்
11—10—68

மதிப்புக்குரிய ராஜாஜி,

மருத்துவ மனையிலிருந்து வெளி வந்த அன்றே தங்களுக்கு எழுத விரும்பினேன். ஆனால் அப்போது மிக்க பலவீனமாயிருந்தேன். அதோடு, டாக்டர் மில்லர் மேற்கொண்டு தெரிவிக்கும் அபிப்பிராயத்துக்காகவும் காத்திருந்தேன். 10-ந் தேதி டாக்டர் மில்லர் என்னை மீண்டும் பரிசோதித்துப் பார்த்துப் பூரண திருப்தி தெரிவித்தார். ஆயினும் நான் இம்மாத இறுதிவரை இங்கு நீடித்துத் தங்கவேண்டும் என்று கூறினார். மீண்டும் இம் மாதம் 14-ந் தேதி நான் டாக்டர் மில்லரைச் சந்திக்கிறேன். தங்களது கடிதத்தில் தாங்கள் பேரன்புடன் குறிப்பிட்டது போல், புதிய சாப்பாட்டு முறைக்கு நான் எந்த அளவுக்கு

New York
11/10/68

Revered Rajaji,

I wanted to write to you the day I was discharged from the Hospital — but I was too weak. Moreover I was awaiting Dr. Miller's further opinion. Dr. Miller examined me again on the 10th and expressed complete satisfaction. But he also asked me to prolong my stay here till the end of the month. I am meeting Dr. Miller again on the 24th of this month. As you have so kindly referred in your letter, the problem now is how best to acclimatise myself to the new food policy. As yet I am not in a position to take a full meal! But on that account I do not feel fatigue or weakness. Your good wishes acted as the best tonic to me and I shall ever remember the kind words from you. I do not know how to express my heartfelt thanks to C.P. our

என்னைச் சரிப்படுத்திக் கொள்ளப் போகிறேன் என்பதே பிரச்னை. இதுவரையில் நான் முழுச் சாப்பாடு உட்கொள்ளும் நிலையில் இல்லை. இருப்பினும் அதனால் நான் அயர்வாகவோ, பலவீனமாகவோ உணரவில்லை. தங்களது நல்லெண்ணம் எனக்குத் தலைசிறந்த ஔஷதமாக வேலை செய்தது. தங்களிடமிருந்து வந்த அன்பு மொழிகளை நான் என்றென்றும் நினைவில் வைத்திருப்பேன். இங்குள்ள நமது தூதர் ஜீ. பி.க்கு எனது இதயபூர்வமான நன்றிகளை எப்படி வெளியிட்டுச் சொல்வது என்றே தெரியவில்லை. எனக்கு ஒரு சகோதரராக அவர் இருக்கிறார். அவரைவிட அன்பான ஓர் ஆன்மாவை, பண்பான ஓர் ஆன்மாவை நான் கண்டதில்லை. மூக்குப் பொடி போடும் விஷயமாகத் தங்களது அறிவுரைப்படி நடக்க எல்லா முயற்சியும் எடுத்திருக்கிறேன். சிறிது காலத்திலேயே இம் முயற்சியில் வெற்றி காண முடியும் என நம்புகிறேன். நம் நாட்டு அரசியல் நிலை பற்றி அவ்வப்போது நான் கவலைகொண்டாலும், என் சகாக்களுக்கு வழி காட்டவும், மக்களை முன்னின்று நடத்திச் செல்லவும் தாங்கள் அங்கு இருக்கிறீர்கள் என்பதிலிருந்து நம்பிக்கையும் உற்சாகமும் பெறுகிறேன். திரு சதாசிவத்துக்கும் அவர்தம் மனைவிக்கும் எனது வணக்கத்தைத் தயவு செய்து தெரிவிக்கவும். சென்ற மாதத்து 'ஸ்வராஜ்யா' இதழ்களை இங்கு அனுப்பி வைத்தால் மிக்க மகிழ்ச்சி அடைவேன். காந்தி ஜயந்தி பற்றிய தங்கள் கட்டுரையைக் 'கல்கி'யில் படித்தேன். அதில் பொதிந்திருந்த தங்களது ஆழ்ந்த தாபத்தை உணர்ந்தேன். சில ஆண்டுகளுக்கு முன் சென்னை மாநகராட்சியின் வரவேற்பில் தாங்கள் நிகழ்த்திய உரை என் நினைவுக்கு வந்தது. ஆயினும், தாங்கள் பொறுமையுடன் விதைத்துக் கொண்டிருக்கும் சிந்தனைகள் களர் நிலத்தில் விழுந்துவிடவில்லை என்று திண்ணமாக நம்புகிறேன். எதிர்காலத்தில் பசும் பயிர்கள் எழும்புமென நம்புகிறேன்.

அன்பு வணக்கங்கள்,

Ambassador here. He is unto me a brother and I have never met a kinder soul or gentler spirit. I am making all efforts to act up to your advice – the snuff habit! I hope to succeed in that effort ere long. Though from time to time I feel the anxiety about the political situation in our country, I get confidence and encouragement from the fact that you are there to guide my colleagues and lead our people. Please convey my regards to Mr & Mrs. Sadasivam. I would be happy indeed if the issues of 'Swarajya' of last month are sent here. I read your note about Gandhi-Jayanthi in Kalki and felt the poignant feelings couched therein and was reminded about your address some years ago in the Madras Corporation reception. But I am quite confident that the thoughts you are so patiently sowing has not fallen on barren land and I am hopeful of the greens to come. With kind regards,

I remain

Yours sincerely

G.N. Annadurai

தெய்வப் பெண்ணிவளைப் போற்றிடுவோம்!

மேலையோர் நாட்டில் இவள் பிறந்தாள் - பலர்
மெச்சும் நற்பண்புடனே வளர்ந்தாள்
வாலைப் பருவ மடைந்தவுடன் - உயர்
வாழ்க்கையில் நாட்டத்தையும் அடைந்தாள்.

ஆத்தும தாகம் மிகவும் கொண்டாள் - அதை
ஆற்றிடு வாரையே பார்த்து நின்றாள்
காத்துக் கிடந்த அவ்வேளை வந்த - விவே
கானந்தன் சொல்லமுதைக் குடித்தாள்.

கீழ்த்திசையி லெழும் ஞானரவி - போலும்
கீதைசொன்ன கண்ணன் போலும் துயர்
வீழ்த்திடும் வீரன் விவேகானந்தன் - துணை
வேண்டித்தன் ஞானகுருவாய்க் கொண்டாள்.



நாடெங்கிலும்
நிவேதிதையின்
நூற்றாண்டு
கொண்டாடப்படுகிறது.

சிந்தையின் சந்தேகம் தீர்த்துக் கொண்டாள் - அருள்
ஜோதிஇறை அனு பூதி கண்டாள்
விந்தைநிறை சொந்த மண்ணை விட்டிந்த - தொல்
வேதமண்ணைத் தொடக் காதல் கொண்டாள்.

ஒன்றில்லை இரண்டில்லை ஓராயிரந் துன்பம்
உண்டிந்த நாட்டிலென அறிந்தும்
அன்றில்லை இன்றில்லை என்றுமிதற்கே - என்
ஆவியுடல் பொருள் யாவுமென்றாள்.

இன்னொரு நாட்டினள் இந்நாட்டிற்காய் - தன்னை
ஈந்து நிவேதிதை யாகிவிட்டாள்
இன்ன லுற்றோரையே கண்டுருகி - மிக
இங்கிதமாய் ஜனசேவை செய்தாள்.

மாதருயர்ந்திட மக்களுயர்ந்திட
மண்ணுயரும் என்ற மர்மம் கண்டாள்.
ஓதியுணர்ந்திடப் பெண்களுக்காய் - ஒரு
உன்னதப் பல்கலைக் கோயில் கண்டாள்.

பாரதப் பண்பாடு பாழடைந்தால் - இந்தப்
பாருக்கெல்லாம் கேடு சூழுமென்றே
ஆரிய மக்களை வீரியம் கொண்டெழ
ஆன முயற்சிகள் யாவும் செய்தாள்.

நம்முடை நாட்டையே நாடியவள் - என்றும்
நம் துயர் தீர்த்திட வாடியவள்
நம்மை எழுப்பப் பண் பாடியவள் - தெய்வ
நாடிதன் மண்ணில் கண்மூடியவள்.

போற்றிடுவோம் தெய்வப் பெண்ணிவளை - பணி
ஆற்றிடுவோம் இவள் சொன்னபடி
போற்றிடுவோம் நம் சகோதரியை - முன்போல்
மாற்றிடுவோம் புகழ் மண்ணிதனை.






1. இந்த இதழ் அச்சாகிக் கொண்டிருக்கும்போது விண்வெளிக் கப்பலில் உலகைச் சுற்றி வந்து கொண்டிருக்கும் அமெரிக்க விண்வெளி வீரர்கள் இவர்கள் தான். இடமிருந்து வலமாக: டான் ஐஸிலி, வாலி ஷிரா, வால்ட் கன்னிங்ஹாம்.

2. விண்வெளிக் கப்பலிலிருந்தபடி இவர்கள் எடுக்கும் டெலிவிஷன் காட்சிகளை உடனுக்குடன் அமெரிக்க மக்கள் தங்கள் இல்லங்களில் கண்டு வருகிறார்கள். இதற்கு உபயோகப்படும் சிறிய நூதனமான காமிராவை அமெரிக்க ரேடியோ கார்ப்பொரேஷனைச் சேர்ந்த டிக் டன்பி தயாரித்தார். அவரும் அவர் தயாரித்த காமிராவும்.

3. 1969 தொடக்கத்தில் பூமத்திய ரேகைக்கு நேராக விண்வெளியில் உலகைச் சுற்றி வரப்போகிற செயற்கைச் சந்திரன் இது. செய்தி ஒலி பரப்புக்கு இது மிகவும் பயன்படும். இரண்டு மாடிக் கட்டிடம் அளவுக்கு உயரமானது. யுத்த காலத்தில் முப்படையினரும் செய்தித் தொடர்பு கொள்ள துணை புரியும். வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பப்பட்டால் செய்தி ஒலி பரப்புக்கு உதவும் உலகின் மிகப் பெரிய செயற்கைச் சந்திரன் இதுவாகத்தான் இருக்கும்.

4. பாவை தன் கரத்தில் எழிலாக ஏந்தியிருப்பது வெறும் கைத்தடி அல்ல; தாக்க வருபவர்களைத் தடுமாறிக் கீழே விழ வைக்கும் பயங்கர ஆயுதம். மேற்கு ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கைத்தடி, பொத்தானை அழுத்தியதும் மின்சாரத்தைக் கக்கும் ஆற்றல் வாய்ந்தது. கிளர்ச்சிக்காரர்களைச் சமாளிக்க இந்த மின்சாரம் கக்கும் கைத்தடி போலீசாருக்குப் பெரிதும் பயன்படும். ஆனால் உயிரைப் பறிக்கும் அளவுக்கு மின்சாரத்தைப் பாய்ச்சாது.








திருமணம்

ஊருகண்டி ஸ்ரீ J. R. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குமாரர் சிரஞ்சீவி K பஞ்சாப கேசன், B.Sc. (கன்ட்ரோலர் ஆப் இன் வென்டரி, கமானி குரூப் ஆப் இண்டஸ் ட்ரீஸ்)க்கும், எர்ரமில்லி ஸ்ரீ G. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் குமாரத்தி சௌபாக் கியவ) E. சுப்பலக்ஷ்மி, B. Sc. க்கும் ஹைதராபாத்தில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!







மாநகராட்சித் தேர்தல்

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் 'யாருக்கு வோட்டு?' என்பது பற்றி சென்னை மாநகர வாக்காளர்களுக்குச் சிறிதும் ஐயமோ குழப்பமோ இடையாது.

சென்ற பொதுத் தேர்தலில் மக்கள் எடுத்த முடிவு நல்ல முடிவு என்பதை அதன் பின் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் நிரூபித்துவிட்டன. காங்கிரஸ் இன்னும் அடக்கமும், பண்பும் அடையவில்லை. அதனால் அதற்கு மீண்டும் ஒரு தோல்வி அளிக்க வேண்டியது அவசியம்.

சுதந்திரக் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரகக் கழகம், முஸ்லிம் லீக் ஆகியவற்றின் வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதிகளில் இவர்களுக்கே வாக்குத்தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்பக்கத்தில் நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் சுதந்திரக் கட்சியின் அபேட்சகர்கள் எழுவரின் படங்களைக் காண்கிறீர்கள். 102வது வட்டத்தில் ராஜாஜியின் குமாரர் திரு ஸி. ஆர். நரசிம்மன் அவர்கள் கூட்டணியைச் சேர்ந்த சுதந்திரக் கட்சி அபேட்சகராக நிற்கிறார். அவர் வாழ்வு முழுவதும் நாட்டுப் பணிக்கே அர்ப்பணித்தவர். அப்படிப்பட்டவருக்கு வாக்களிப்பதை ஒவ்வொரு வாக்காளரும் பெறற்கரிய பேறாக கருத வேண்டும். அதேபோல்தான் மற்ற சுதந்திரக் கட்சி அபேட்சகர்களும்.

கூட்டணி வேட்பாளர்களை வெற்றியுறச் செய்து சென்னை நகரின் குடிநீர் வசதி, சாலை வசதி, ஒளி வசதி, சுகாதார வசதி விரைவில் பெருக உதவுவோம்.



மேலே : 1. திரு தேவநாதன்,
116வது வட்டம், காமராஜநகர்.
2. திரு ஸி. ஆர். நரசிம்மன்,
102வது வட்டம், கலைவாணர்நகர்
3. திரு எஸ். கே. சீனிவாசன்,
95வது வட்டம், மயிலாப்பூர்.

இடது : திரு எஸ். சுதர்சன்
18வது வட்டம், சௌகார்ப்பேட்டை.

வலது: திரு என். எஸ். ராமநாதன்,
105வது வட்டம், தியாகராயநகர்.

கீழே : 1. திரு குசால்தாஸ் செட்டியார், 6வது வட்டம், நாராயணப்ப நாயக்கர் தோட்டம்.
2. டாக்டர் பி. பாலகிருஷ்ணன்,
31வது வட்டம், குசப்பேட்டை.









அப்ஸரஸ்

வி. கோபாலன்



அழகான ஒரு பெண்ணைப் பார்த்தால், 'ஆகா.... அப்சரஸ் மாதிரி அல்லவா இருக்கிறாள்!' என்று ரசனையோடு சொல்கிறோம். யார் இந்த அப்சரஸ்?

அப்சரஸ்கள் அழகின் தலைவியர்; அழகுக் கலைகளின் நாயகியர்; அழகு உலகின் ராணியர்; அழகின் தெய்வங்கள்!

தேவர் உலகின் நடன சுந்தரிகளான அப்சரஸ் மங்கைகள் விண்ணுலகில் மட்டுமின்றி, மண்ணுலகிலும் பெயரும் புகழும் கொண்டிருக்கின்றனர் தம் அழகாலே. அழகு என்னும்போது அந்தக் காந்தச் சொல்லின் மொத்த வடிவமாகக் காட்சி தருபவள் பெண்தான். கலைக்கும், கல்விக்கும், செல்வத்துக்கும் நாயகிகளாகப் பெண்களை — பெண் தெய்வங்களைப் போற்றுகின்ற உள்ளங்கள், வாழ்த்துகின்ற உதடுகள், வணங்குகின்ற கரங்கள் அழகின் நாயகியாகவும் ஒரு பெண் தெய்வத்தைப் போற்றி வாழ்த்தி வணங்கித்தானே ஆக வேண்டும்? அந்தப் பெண் தெய்வம்தான் அப்சரஸ்!

அழகுர்க்குத்தான் எத்தனை சக்தி! அழகின் அழகிலே மயங்கும் கவிஞன், 'அழகெனும் தெய்வந்தான்...' என்று அந்த அழகிலே தெய்வத்தையே கண்டுவிடுகிறான். அழகின் ஒரு வடிவை — தெய்வ வடிவை தன் வார்த்தைகளிலே அரங்கேற்றிப் பார்த்ததும் அவன் திருப்தி அடைந்து விடுகிறான். இப்படி வார்த்தையிலே திருப்தி காணக் கலைஞனால் முடியாது. அவன், தான் காணும் அழகை, தன்னைப் பரவசப்படுத்தும் லாவண்யத்தைத் தன் கையாலேயே ஓர் உருவம் கொடுத்து சமைக்கிறான். ஆ! என்ன அற்புத வடிவமாக அது அமைந்து விடுகிறது! தான் படைத்த அந்தச் சுந்தரச் சிற்பத்தின் அழகிலே — எழில் வதனத்திலே சௌந்தர்யப் பார்வையிலே தெய்வத்தையே காண்கிறான் கலைஞன். அழகு தரிசனம் செய்வதில் கலைஞனும் கவிஞனும் மாறுபட்ட மார்க்கங்களிலே நடை போட்டாலும் காண்கின்ற காட்சி ஒன்றுதான். அதுவே அழகின் தெய்வத் தன்மை போலும்!



அந்த அழகின் தெய்வத் தன்மையின் வடிவங்களாகத் திகழ்பவர்களே அப்சரஸ் மங்கையர். இம்மங்கையர் மேனி அழகை மட்டுமின்றி, அறிவழகையையும் கொண்டிருப்பவர்கள். தேவ சபையில் நாட்டியம் என்றால் இவர்களது சலங்கை ஒலிக்கும். ஒரு கான நிகழ்ச்சி என்றால் காற்றினிலே வரும் கீதம். அப்சரஸ் மங்கையரின் கலைத்திறன் அங்கே அரங்கிலே ஆடும். கின்னரர், கந்தர்வர்கள் புடைசூழ, தேவசபையில் விதவிதமான இசைகளுடன் நிகழ்ச்சிகள் மூலம் நித்தம் ஒரு கலைமலர் படைப்பவர்களே அப்சரஸ் அழகிகள்.

அப்சரஸ் மங்கையர்களைப் பற்றிய பல செய்திகளை மகா கவி காளிதாசனின் காவியங்களிலும், வேறு பல இலக்கிய, புராணங்களிலும் காணலாம். அவை அனைத்தும் அப்சரஸ் மங்கையர் அழகிலும், அழகுக் கலைகளிலும் ஈடு இணையற்றவர்கள் என்பதையே கூறுகின்றன.

அப்சரஸ் மங்கைகளின் தோற்றம், லட்சணம், பணிகள் குறித்து ''சில்பரத்தினம்'', ''காசியப சில்ப சாஸ்திரம்'' போன்ற சில்ப சாஸ்திர நூல்கள் சில சுவையான செய்திகளைத் தெரிவிக்கின்றன. காசியப முனிவர் இயற்றிய சில்ப சாஸ்திர நூல், அப்சரஸ்கள் மொத்தம் எழுவர் என்று கூறுகிறது. ''இவர்கள் அழகில் இணையற்றவர்கள்; எப்போதும் வெண் பட்டாடையே இவர்கள் அணிந்திருப்பர்; பத்ர பீடம் என்னும் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் அப்சரஸ்களின் வதனத்திலே எப்போதும் ஒரு புன்முறுவல்—இளஞ் சிரிப்பு நெளியும்; இவர்கள் இளைத்த இடையையும் பருத்த மார்பையும் உடையவர்கள்; அப்சரஸ்களின் உடல் அமைப்பு எப்போதும் 'ஸமபங்கம்' எனும் ஒயிலான ஒரு நிலையிலேயே இருக்கும்''-இது அந்நூல் தெரிவிக்கும் செய்தி.







எதிர்ப் பக்கத்தில் :

★ அப்சரஸ் நடனம் (லக்நோ மியூசிய சிற்பம்)

★ இந்த அழகு மங்கை தான் அப்சரஸோ?

★ கஜுராஹோ கட்டழகி.

இந்தப் பக்கத்தில் :

★ மத்தள ஓசைக்கு ஏற்ப நடனமாடுகிறாள் இந்தத் தேவ மங்கை.

★ பேலூர்ப் பதுமை.


★ குரங்கோடு சண்டை. (பேலூர் சிற்பம்)

★ கந்தர்வ கானத்துக்கு அப்சரஸ் நடனம். (ஹம்பி)

★ வீணை மீட்டும் அழகி.







அப்சரஸ் எழுவர் - டில்லி தேசியக் கலைக்கூடம்

ஆலயச் சிற்பங்களில் எழில் மங்கையரின் எண்ணற்ற கோலங்களைக் காண்கிறோம். தெய்வ மாளிகையில் அழகுப் பதுமைகளை காணும்போது அழகைத் தெய்வமாகக் கண்ட கலைஞனின் ரசனையை அனுபவிக்கவே செய்கிறோம். தெய்வ மாளிகையில் அப்சரஸ் மங்கையரின் சிலம்பு ஒலிக்க வேண்டும்; கீதம் கேட்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே அந்த எழிற் சிற்பங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

எத்தனையோ ஆலயங்களில் அப்சரஸ் மங்கையரின் சிற்பங்கள் இருப்பினும், மிக மிகச் சிறப்பான சிற்பக் கோலங்கள் புகழ் பெற்ற கஜுராஹோ ஆலயங்களில்தான் இருக்கின்றன. கஜுராஹோ ஆலயம் அழகு உலகம்; அங்கு காண்பதெல்லாம் எழிற் சிற்பங்களே! அழகின் தலைவியரான அப்சரஸ்கள் அங்கு தனியிடம் பெற்று விளங்குவதில் வியப்பில்லை அல்லவா?

சில சிற்பங்கள் கண்ணுக்கு மை தீட்டிக் கொள்வது, கண்ணாடி பார்ப்பது போன்ற ஒப்பனைகளில் ஈடுபட்டுள்ளது போன்று சித்திரிக்கப்பட்டுக் காண்கின்றன. இவற்றில் சிலவற்றை ''கர சுந்தரிகள்'' என்றும் கூறுவர்; அவர்களும் அழகு மங்கையர்களே.

தென்னகத்தில் உள்ள ஆலயங்கள் பலவற்றிலும் அப்சரஸ் வடிவங்களும், அழகு மங்கையர் சிற்பங்களும், நிறைந்து காண்கின்றன. பேலூர் சென்னகேசர் ஆலயத்திலும், ஹளேபீடு ஆலயத்திலும் இவ்வகைச் சிற்பங்களுக்கு மிகச் சிறப்பான இடமளிக்கப்பட்டிருக்கின்றன.

ஹொய்சள வேந்தன் விஷ்ணுவர்த்தனனால் கட்டப்பட்ட பேலூர் ஆலயம் ஓர் இணையற்ற கலைக் கூடமாகவே திகழ்கிறது. இவ்வாலயத்தில் மண்டபங்களின் மேல் நீட்டிக் கொண்டிருக்கும் விளிம்புகளை அற்புதமான வேலைப்பாடு அமைந்த மதனிகா எனப்படும் கவர்ச்சி மிக்க பெண் உருவங்கள் தாங்கி நிற்கின்றன. இப்பெண் உருவங்கள் அப்சரஸ்களைப் போன்ற எழிலும் தனித் தோற்றமும் நாகரிகச் சாயலும் கொண்டிருக்கின்றன.

பேலூர் அழகிச் சிற்பம் ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்லும்.

அவள் ஆடை உடுத்திக் கொள்ளும் வேளையில், பூஜை வேளையில் கரடி நுழைந்த கதையைப் போன்று குரங்கு ஒன்று வந்து அவள் ஆடையைப் பற்றி இழுக்கிறது. அவள் முகத்தில் நாணம் பாதி; கோபம் பாதி. கையிலிருக்கும் மலர்ச் செண்டால் அந்தக் குரங்கை விரட்டுகிறாள் அவள். குரங்கு அவள் ஆடையை விடுகிறதாகக் காணோம்; விட்டு விட்டால், இந்தச் சிற்பத்தின் சிறப்பு போய் விடும் என்பது அந்தக் குரங்குக்குத் தெரியுமோ, என்னவோ !

இந்தச் சிற்பப் பெண்ணின் சங்கதி இப்படி என்றால், ஏறக்குறைய இதே நிலையில் இன்னொரு கல் நங்கையும் காணப்படுகிறாள். அவள் ஆடையிலே தேள் ! பரபரப்புடன் ஆடையை உதறி நிற்கிறாள் அவள்.

ஹளேபீடு ஆலயத்திலும் அழகு நங்கையர் சிற்பங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் வீணை மீட்டியவாறு காட்சி தரும் ஓர் எழில் மங்கையின் வடிவம் சிறப்பானது.

ஹம்பி சிற்பங்களில் நடனம் புரியும் அப்சரஸ் மங்கையர்களின் எழிற் சிற்பங்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

சோழர் படைத்த தஞ்சைப் பெரிய கோவிலில் அப்சரஸ் சிற்பங்களும் நடன மாதர் கோலங்களும் காணப்படுகின்றன. மதுரை மீனாட்சி ஆலயத்தில் நடன மாதர் சிற்பங்களும் அழகிகளின் வடிவங்களும் ஏராளமாக உள்ளன. இவை யாவும் நாயக்க மன்னர்கள் உருவாக்கியவை. அநேகமாக எல்லா ஆலயங்களிலும் அப்சர அழகு மங்கையர் சிற்பக் கோலங்களைக் காணலாம்.

அப்சரஸ் மங்கையர் அழகின் அரசியர். அழகுக் கலைகள் அம்மங்கைகளுக்குச் சிறப்பான இடம் கொடுத்திருப்பதில் வியப்பில்லை.

அட்டைப்பட விளக்கம்

துன்பம் துடைத்த துறவி

காந்தி மகாத்மாவின் மனம் கவர்ந்த 'வைஷ்ணவ ஜனதோ' பாடலை இயற்றிய நரஸி மேதா, வைஷ்ணவனின் முதல் இலட்சணமாக, பிறர் துயரைத் தனதாகக் கருதும் பாங்கைக் குறிப்பிடுகிறார். இப்பாங்கின் உருவம் புத்தர் பெருமான். வறுமை, மூப்பு, பிணி இவற்றின் துயரத்தைத் துடைப்பதெப்படி என்று மகத்தான ஐசுவரியமும், இளமையும், ஆரோக்கியமும் படைத்த அரசிளங்குமரன் சித்தார்த்தன் மனமார ஆழ்ந்து சிந்தித்தது ஓர் உலக அதிசயம். தனது சகலத்தையும் தியாகம் செய்து, துறவியாகி, துன்பம் தீர்க்கும் உபாயம் கண்டான் சித்தார்த்தன். ஆசையை அறுப்பதே துன்பத்தைத் தீர்க்க வழி என்று கண்டபின் சித்தார்த்தன் புத்தரானார். விஷ்ணுவின் அவதாரமாகவே மதிக்கப்படும் அவரை, வைஷ்ணவர்களில் முதல்வராகத் தீட்டியிருக்கிறார் ஓவியர் கனுதேசாய்.











செய்திப் படங்கள்

''அண்ணாவுக்கு அறுபது'' என்ற புத்தகத்தைக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வெளியிடுகிறார். திரு முத்தையா செட்டியார் முதல் புத்தகத்தைப் பெற்றுக்கொள்கிறார்.

கல்கத்தா — அவுராவில் இயங்கி வரும் வங்கத் தமிழர் சங்கம் சென்ற செப்டம்பர் 13உ. நாடாளு மன்ற உறுப்பினர்களான திரு எஸ். எஸ். மாரிசாமி அவர்கட்கும் திரு வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கட்கும் அவுராவில் சிறப்பான வரவேற்பு அளித்தது.

சென்னை இந்து தர்ம மன்றம் சார்பில், சென்னை சர்வ கலா சாலையின் பட்டமளிப்பு விழாவில் மாணவ — மாணவிகளுக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் அருள் வாக்குகள் அடங்கிய ''வாய்ஸ் ஆப் ஜகத் குரு'' என்ற சிறிய ஆங்கில நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

திருவல்லிக்கேணி மாட வீதியில் சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாக, ஒவ்வொரு சனிக் கிழமையும் மதுரை, திருப்புகழ் ஸ்ரீமதி லட்சுமியம்மாள் கோஷ்டியினரால் பஜனை நடத்தப்பட்டு வந்ததையொட்டி சென்ற செப்டம்பர் 21ந் தேதி பன்னிரண்டாவது ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.


அழகு சாதனங்கள் தயாரிக்கும் பியர்லேன் பாரிஸ் ஸ்தாபனத்தார் சென்ற செப்டம்பர் 14ந் தேதி பம்பாயில் இனிய சங்கீத கேளிக்கை விழா நடத்தி, பியர்லேன் — ராஜா ராணியைத் தேர்ந்தெடுத்து கிரீடங்களும் பரிசுகளும் வழங்கினர்.

தேர்தல் எப்படி?


உங்கள் ஓட்டு எனக்கே!
உங்கள் ஓட்டு கிளிப்
சாமா
உங்கள் ஓட்டு கிளிப் பெட்டிக்கே!
உங்கள் ஓட்டு புலிப் பெட்டிக்கே!
புலிப் பெட்டிக்கே உங்கள் ஓட்டு!
உங்கள் ஓட்டு கிளிப் பெட்டிக்கே



தயாரிப்பு:
வாண்டுமாமா



முடியாது, முடியவே முடியாது!

ஆடாத விரல்


படம் ஒன்றில் காட்டியுள்ளபடி இரண்டு கைவிரல்களையும் கோத்துக் கொள்ளச் சொல்லுங்கள், உங்கள் தோழியை. பிறகு கோத்தபடியே அந்தக் கையைப் படம் இரண்டில் காட்டியுள்ளபடி மேலே கொண்டு வரச் சொல்லுங்கள். இந்த நிலையில் அவளுடைய விரல்களில் ஏதோ ஒன்றைச் சுட்டிக் காட்டி ஆட்டும்படி கூறுங்கள். அவளுடைய விரல்களில் ஏதோ ஒன்று ஆடும். ஆனால், நீங்கள் காட்டிய விரல் ஆடாது. மறுபடியும் வேறொரு விரலைக் காட்டி ஆட்டச் சொல்லுங்கள். அப்போதும் இதே நிலைதான். உங்களுக்குச் சிரிப்பு, அவளுக்கு வியப்பு. ரொம்பத் தமாஷாக இருக்கும்.




2

கூடத்திலே கால்ஃப்


உங்கள் வீட்டுக் கூடத்திலேயே 'கால்ஃப்' விளையாடலாம் வாருங்கள். பெரிய கூடமானால் பன்னிரண்டு, சிறிய கூடமானால் ஆறு அட்டைப் பெட்டிகளை எடுத்துக் கொள்ளுங்கள். அவைகளின் மேல் மூடியைப் பிய்த்து விடுங்கள். பெட்டிகளை அவைகளின் பக்கவாட்டில் தரையில் அரைவட்டமாகப் படத்தில் காட்டியபடி இடை வெளி விட்டு அடுக்குங்கள். அரை வட்டத்தின் நடுவில் விளையாடுபவர் நிற்க வேண்டும். அவரிடம் பொம்மை கால்ஃப் மட்டையோ அல்லது அதுபோன்றதொரு குச்சியோ இருக்கவேண்டும். தன்னிடமுள்ள ரப்பர் பந்தைக் கீழே வைத்துக் குச்சி மட்டையால் அடித்து முதல் அட்டைப் பெட்டியின் உள்ளே அதைச் செலுத்த வேணும். வெற்றி பெற்றால் அடுத்த பெட்டியினுள். அதை அடுத்து மூன்றாவதில். இப்படியாகக் குறி பார்த்துப் பந்து பெட்டியினுள் போகும்படி அடிக்க வேண்டும். குறி தவறிப் பந்து திசை மாறிப் போனால் அடுத்த ஆட்டக்காரர் ஆட ஆரம்பிக்க வேண்டும். முதலில் ஆடியவருக்கு அடுத்த முறை வரும்போது அவர் எந்தப் பெட்டிக்குள் பந்தைச் செலுத்த முடியாமல் ஆட்டம் இழந்தாரோ அதிலிருந்து தொடர வேண்டும். எல்லாரும் எல்லாப் பெட்டிக்குள்ளும் பந்தைச் செலுத்தி முடிக்கும்வரை இப்படியே தொடர்ந்து ஆடலாம். யார் முதலில் எல்லாப் பெட்டிகளிலும் பந்தைச் செலுத்துகிறார்களோ, அவரே வெற்றி பெற்றவர்.






சரியும் கோபுரம்

அட்டைப் பெட்டிகள் தயாரா? அதில் பத்துப் பெட்டிகளைப் படத்தில் காட்டியபடி முக்கோண வடிவில் அடுக்கி நிறுத்தி வையுங்கள். அதிலிருந்து பத்தடி தள்ளி நின்று கொள்ள வேண்டும். உங்கள் விளையாட்டு ரப்பர் பந்தைத் தரையில் வைத்து அட்டைப் பெட்டி கோபுரத்தை நோக்கி வேகமாக உருட்டுங்கள். பந்தை நீங்கள் உருட்டும் வேகத்தில் அட்டைப் பெட்டிகள் சிதறிக் கவிழும். ஒரே உருட்டலில் எல்லாப் பெட்டிகளும் கவிழுமானால் உங்களுக்கு இருபது பாயிண்ட். கவிழும் ஒவ்வொரு தனிப் பெட்டியும் இரு பாயிண்ட்களைத் தரும். ஓர் ஆட்டக்காரர் தம் பந்தை மூன்று முறை உருட்டியானதும், பெட்டிகளை மறுபடியும் அடுக்கி நிறுத்துங்கள். அடுத்தவர் பந்தை உருட்டலாம். நூறு எண்ணிக்கை எடுத்தவர் வெற்றி பெற்றவராவார்.



வெட்டுண்ட கயிறு ஒட்டுண்ட மாயம்!

நீதான் மந்திரவாதியாயிற்றே. மேடை மீது தோன்றுகிறாய். உன் கையில் இரண்டடி நீளமுள்ள கயிறு ஒன்று இருக்கிறது. அதை இரு கைகளாலும் இழுத்துப் பிடித்துக் கொண்டு என்னிடம் நீட்டி நடுவில் கத்திரிக் கோலால் வெட்டச் சொல்லுகிறாய். கயிறு இரு துண்டாகிறது. அதைத் தூக்கிக் காட்டுகிறாய். பிறகு துண்டான கயிற்றை ஒட்ட வைக்க ஏதோ மந்திரம் ஜபிக்கிறாய். இப்போது கயிற்றின் ஒரு முனையைப் பிடித்து என்னை இழுக்கச் சொல்லுகிறாய். இழுக்கிறேன். என்ன ஆச்சரியம். துண்டுபட்ட கயிறு ஒன்றுபட்டு ஒரே கயிறாக உன் கைக்குள்ளிருந்து வெளிவருகிறது. வெட்டுண்ட கவடே இல்லை. 'ஜய், ஜக்கம்மா! எப்படி என் மாயாஜால வேலை?' என்று கேட்கிறாய் நீ. நான் சிரிக்கிறேன். எனக்குத் தெரியாதா உன் வேலைத்தனம்! உன் தந்திரத்தை விளக்கட்டுமா? மூன்றடி நீளமுள்ள கயிற்றை எடுத்துக் கொண்டாய். ஒரு முனையிலிருந்து ஆறு அங்குலம் விட்டு மீதமுள்ள இரண்டரை அடிக் கயிற்றில் ஓர் அடி நீளத்தைக் கச்சிதமாய்ச் சுருட்டினாய். (படம் A) கயிற்றின் நீளம் இப்போது இரண்டடி. சுருட்டிய கயிற்று வளையத்தின் நடுவில் ஒரு மிக மிக மெல்லிய நூலினால் இலேசாக மூடி போட்டு வைத்துக் கொண்டாய். கொஞ்சம் இழுத்தாலும் இந்த நூல் கட்டு அறுந்து போகும். இப்படித் தயார் செய்ததை உன் டிராயரின் இடப் பக்கப் பையில் — சுருள் வளையம் மேலே உள்ளபடி — (படம் B) போட்டுக் கொண்டு மேடைக்கு வந்தாய். சுருட்டி வைத்துள்ள கயிற்றுப் பக்கத்தை லாகவமாக மறைத்தபடி இடக் கரத்தால் கயிற்றை வெளியில் எடுத்தாய். சுருண்ட கயிற்றின் சிறிய மறு முனை உன் இடக்கரத்தின் முஷ்டிக்கு மேலாகத் தொங்கிற்று. சுருட்டிய கயிற்றுப் பகுதி உன் கட்டை விரலுக்கும் முதல் விரலுக்கும் இடையே கச்சிதமாக ஒளிந்து கொண்டிருந்தது. கயிற்றின் நீண்ட பகுதி கீழே தொங்க அதை நீ உன் வலக்கரத்தால் பிடித்துக் கொண்டு என்னிடம் வந்து நடுவில் வெட்டும்படி கூறினாய். (படம் 1) நானும் வெட்டினேன். நீ உன் இரு கைகளையும் தூக்கி வெட்டுண்ட துண்டுகளைக் காட்டினாய். (படம் 2) பிறகு வலக் கரத்திலுள்ள கயிற்றின் கீழ் முனையோடு சேர்த்து முடி போடுவது போல் அபிநயித்து (படம் 3) ஏதோ முணு முணுத்தபடி கயிறு முழுவதையும் இரு முஷ்டிகளுக்குள் திணித்துக் கொண்டாய். (படம் 4) கயிறு முழுதும் உன்னுடைய மூடிய இடக் கரத்தினுள் இருக்க நீ அதில் மந்திரோச்சாடனம் செய்து ஊதினாய். இடக்கை முஷ்டியின் அடியிலிருந்து கயிற்றின் ஒரு முனையைப் பற்றி இழுக்கலானாய். (படம் 5) மெள்ள மெள்ளக் கயிறு உன் மூடிய கையிலிருந்து விடுபடலாயிற்று. (படம் 6) கையைவிட இப்போது நீ கயிற்றையே உன்னிப்பாகக் கவனித்தாய். இடக்கையை அழுத்தி மூடிக் கொண்டாய். சுருட்டி வைத்துள்ள கயிற்றை முடி போட்டு வைத்தாயே நூல்; அது அறுந்துவிடச் சுருள் பிரிய வேண்டுமே அதற்காகத்தான். இட்ட மிட்டபடி நூல் அறுந்தது. சுருள் பிரிந்து கொடுத்தது. உன் வலது கையும் உயர்ந்து கொண்டே போயிற்று. உன் இடது கை தாழ்ந்தது (படம் 7) இப்போது நீ இடக்கரத்தைக் கவனிக்கவில்லை. வலக்கரத்தில் நீண்டு தொங்கும் கயிற்றை வந்து சோதித்துக்கொள்ளும்படி நீ சவால் விட்ட அதே நேரத்தில் உன் இடக்கரம் உன் பாண்ட் பைக்குள் நுழைந்தது. (படம் 8) அதன் ரகசியம் எனக்குத் தெரியும். அறுபட்ட சிறு துண்டு அந்தக் கையில்தானே அப்படியே இருக்கிறது. ஒட்டிக் கொண்ட கயிற்றை நான் பரிசீலனை செய்து கொண்டிருக்கும் போதே நீ அந்தத் துண்டுக் கயிற்றைப் பைக்குள் போட்டுவிட்டுக் கயிற்றின் மறுமுனையையும் பிடித்துக் கொண்டு, "பார், பார்! வெட்டிய கயிறு ஒட்டிக் கொண்ட விந்தையைப் பார்!" என்று குதிக்கலானாய். நான் கூறுவது 'கரெக்ட்' தானே?




நீங்கள் அருகே காணும் படம் பம்பாய் நகரில் உள்ள பொழுதுபோக்கு ஸ்தலமான விஹார் ஏரிக் கரையிலுள்ள காட்சியாகும். படத்தில் காணும் காட்சி, குழந்தைகளுக்கென்று "சறுக்கல்" வசதி செய்துள்ள இடமாகும். மனிதன் முகம்போல் தெரிவது வெறும் கட்டடம்தான். மூக்குக்குக் கீழே வாய் உள்ளது. அதன் வழியாகக் குழந்தைகள் (ஏன் — பெரியவர்கள்கூட) சறுக்கி வருவது விசித்திரமான காட்சியாயிருக்கும். உங்கள் ஊரில் இப்படி ஏதாவது இடமிருந்தால் போட்டோ பிடித்து அனுப்புங்களேன்.

இதைப் படம் எடுத்து அனுப்பியவர்:

ஏ. ஜி. ராமசுப்பிரமணியன்

சிங்கார்
குங்குமம்



உங்கள் மேனி வண்ணத்திற்கும், சேலைக் கலர்களுக்கும் இசைவான பல நிறச்சாயல்களில் கிடைக்கும் சிங்கார் குங்குமம், உங்கள் எழிலுக்கு எழில் கூட்டி முகத்திற்குப் பொலிவைத் தருகிறது.

அது எடுப்பான ப்ளாஸ்டிக் குப்பிகளில் அல்லது ட்யூபுகளில் கிடைக்கிறது.



Bottle design Registered
Patent No: 128338

PIPIS PRODUCTS



விசாரணைகளுக்கு எழுதவும்: பேரமவுண்ட் பிராடக்ட்ஸ்

A - 30 - ஸ்ரீ ராம் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், G. D. அம்பேத்கார் ரோடு, பம்பாய்-31. DD.



பொன்னியின் செல்வன்

அமரர் **கல்கி**



இருபத்தேழாம் அத்தியாயம்

ஆஸ்தான புலவர்கள்

பராக்! பராக்! இதோ வருகிறார்கள் புலவர் பெருமக்கள்! கவிஞர் சிகாமணிகள்! தமிழ்ப் பெருங்கடலின் கரை கண்டவர்கள்! அகத்தியனாரின் வழி வந்தவர்கள்! தொல்காப்பியம் முதலிய சங்க நூல்களைக் கரைத்துக் குடித்தவர்கள்! சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெருங் காவியங்களைத் தலைகீழாகப் படித்தவர்கள்! தெய்வத்தமிழ் மறையான திருக்குறளையும் ஒரு கை பார்த்தவர்கள்! இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் அறிந்தவர்கள்! இலக்கணம் கூறியதற்கு இலக்கியம் தெரிந்தவர்கள்! தாங்களே சுயமாகவும் கவி பாட வல்லவர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் எழுதிய கவிகள் அடங்கிய ஏட்டுச் சுவடிகள் கோடானு கோடி கரையான்களுக்குப் பல்லாண்டு உயிர் வாழ்வதற்கு உணவாகும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

புலவர் பெருமக்கள் அவ்வளவு பெரும் கும்பலாகச் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் சந்நிதானத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

''வாழ்க! வாழ்க! ஏழுலகமும் ஒரு குடையின் கீழ் ஆளும் சுந்தர சோழமகா சக்கரவர்த்தி வாழ்க! பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள் வாழ்க! புலவர்களைப் புரக்

கும் பெருமான் வாழ்க! கவிஞர் களின் கதியான கருணை வள்ளல் வாழ்க! பண்டித வத்ஸலராகிய பராந்தக சக்கரவர்த்தியின் திருப் பேரர் நீடூழி வாழ்க!'' என்று வாழ்த்தினார்கள்.

இந்தக் கோஷங்களையும் கூச்சல் களையும் சுந்தர சோழர் அவ்வள வாக விரும்பவில்லை. எனினும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், தமது நோயையும் மறந்து, வந்த வர்களை வரவேற்பதற்காக எழுந் திருக்க முயன்றார்.

உடனே, சின்னப் பழுவேட்டரை யர் முன் வந்து, ''பிரபு! புல வர்கள் தங்களைத் தரிசித்து மரி யாதை செலுத்தி விட்டுப் போக வந்திருக்கிறார்களே யன்றித் தங்க ளுக்குச் சிரமம் கொடுக்க வர வில்லை. ஆகையால் தயவுசெய்து தங்களைச் சிரமப்படுத்திக் கொள்ளக் கூடாது!'' என்றார்.

''ஆம், ஆம்! அரசர்க்கரசே! சக்கர வர்த்திப் பெருமானே! தங்களுக்குச் சிறி தும் சிரமம் கொடுக்க நாங்கள் வந்தோ மில்லை!'' என்றார் புலவர்களின் தலைவரா கிய நல்லன் சாத்தனார்.

''உங்களை யெல்லாம் நெடுநாளைக்குப் பிறகு பார்ப்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. அனைவரும் அமர வேண்டும். சில பாடல்கள் சொல்லி விட்டுப் போக வேண்டும்!'' என் றார் தமிழன்பரான சக்கரவர்த்தி.



தரையில் விரித்திருந்த ரத்தின ஜமக்காளத்தில் எல்லோரும் உட்கார்ந்தார்கள். அதுதான் சமயமென்று நமது வீரன் வல்லவரையனும் புலவர் கூட்டத்துடன் கலந்து உட்கார்ந்து கொண்டான். தான் சொல்ல விரும்பியதை முழுதும் சக்கரவர்த்தியிடம் சொல்லாமல் போக அவனுக்கு மனம் இல்லை. சந்தர்ப்பம் ஒரு வேளை மறுபடி கிடைத்தால் சொல்லி விட்டுப் போகலாம் என்று எண்ணி உட்கார்ந்தான்.

இதைச் சின்னப் பழுவேட்டரையர் கவனித்தார். அவருடைய மீசை துடித்தது. முதலில் அவனை வெளியில் அனுப்பிவிடலாமா என்று நினைத்தார். பிறகு, அவன் அங்கே தம்முடைய கண்காணிப்பில் இருப்பதே நலம் என்று தீர்மானித்தார். எனவே, அவனைப் பார்த்தும் பார்க்காதது போல் இருந்தார். இந்தப் புலவர்கள் சென்ற பிறகு அவனை வெளியே அழைத்துச் சென்று அவன் மகாராஜாவிடத்தில் சொன்ன செய்தி என்னவென்பதை நன்கு தெரிந்து கொள்ள விரும்பினார். "அபாயம்! அபாயம்!" என்ற அவனுடைய குரல் அவர் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டே இருந்தது.

ஃ ஃ ஃ

"புலவர்களே! தமிழ்ப் பாடல்கள் கேட்டு அதிக காலமாயிற்று. என் செவிகள் தமிழ்ப் பாடலுக்குப் பசித்திருக்கின்றன. உங்களில் எவரேனும் புதிய பாடல் ஏதேனும் கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்று சக்கரவர்த்தி சுந்தர சோழர் கேட்டார்.

உடனே ஒரு புலவர் சிகாமணி எழுந்து நின்று, "பிரபு! உலக புரத்தில் தங்கள் திருப் பெயரால் விளங்கும் சுந்தர சோழப் பெரும் பள்ளியிலிருந்து அடியேன் வந்தேன். சிவநேசச் செல்வராகிய தாங்கள் பௌத்த மடாலயத்துக்கு நிவந்தம் அளித்து உதவியதை இந்தத் தமிழகமெங்கும் உள்ள பௌத்தர்கள் பாராட்டிப் போற்றுகிறார்கள். தாங்கள் உடல் நோயுற்றிருப்பது அறிந்தது முதல் பிக்ஷுக்கள் மிக்கக் கவலை கொண்டு தங்கள் உடல் நலத்துக்காகப் பிரார்த்தனை நடத்தி வருகிறார்கள். அந்தப் பிரார்த்தனைப் பாடலை இவ்விடம் சொல்ல அருள் கூர்ந்து அனுமதி தர வேண்டும்" என்றார்.

"அப்படியே சொல்ல வேணும்; கேட்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றார் சக்கரவர்த்தி.

புலவர் பின்வரும் பாடலை இசையுடன் பாடினார்.

"போதியந் திருநிழல் புனித! நிற்பரவுதும்
மேதகு நந்திபுரி* மன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையும் உலகிற் சிறந்துவாழ்கெனவே!"

பாடலைக் கேட்டதும் புலவர்கள் அத்தனை பேரும் "நன்று! நன்று!" என்று கூறித் தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்தார்கள்.

"புத்தர்கள் இவ்வளவு நன்றியுடையவர்களா யிருப்பது வியப்பு, வியப்பு!" என்றார் ஒரு வீர சைவக் கவிராயர்.

"ஆம்; அது வியப்பான காரியம் தான். உலகபுரம் புத்த மடத்துக்கு நான் செய்த சேவை மிக அற்பம். அதற்கு இவ்வளவு பாராட்டு வேண்டுமா?" என்றார் மன்னர்.

"சக்கரவர்த்தியின் வண்மைத் திறத்தை அநுபவித்தவர்கள் யார்தான் என்றென்றைக்கும் நன்றி செலுத்திப் பாராட்டாதிருக்க முடியும்? இந்திரனும் சூரியனும் சிவபெருமானும் கூடத் தங்களுடைய வண்மையின் பயனை அநுபவித்திருக்கிறார்கள்" என்றார் மற்றோர் புலவர் சிரோமணி.

சுந்தர சோழர் முகத்தில் புன்னகை தவழ, "அது என்ன? இந்திரனும் சூரியனுமா? சிவபெருமான் கூடவா? அவர்கள் எதற்காக என்னிடம் நன்றி செலுத்த வேண்டுமாம்?" என்று கேட்டார்.

"ஒரு பாடல் சொல்ல அநுமதி தர வேண்டும்!" என்றார் அப்புலவர்.

"அப்படியே நடக்கட்டும்!" என்றார் மன்னர்.

புலவர் கையில் கொண்டு வந்திருந்த ஓலையைப் பிரித்துப் படிக்கலுற்றார்:

"இந்திரன் ஏறக் கரி அளித்தார்,—
பரிஏழ் அளித்தார்
செந்திரு மேனித் தினகரர்க்கு,—
சிவனார் மணத்துப்
பைந்துகில் ஏறப் பல்லக்களித்தார்,—
பழையாறை நகர்ச்
சுந்தரச்சோழரை யாவரொப்பார்கள் இத்
தொன்னிலத்தே !"

பாடலைப் புலவர் படித்து முடித்ததும் சபையிலிருந்த மற்ற புலவர்கள் எல்லாரும் சிரக்கம்பம் கரக்கம்பம் செய்தும் 'ஆஹாகாரம்' செய்தும், "நன்று!

---

* அந்நாளில் பழையாறை நகருக்கு நந்திபுரி என்னும் பெயரும் உண்டு. சில காலத்துக்கு முன்பு சோழ மண்டலம் பல்லவர் ஆட்சியின் கீழ் இருந்த போது நந்திபுரி என்னும் பெயர் பிரபலமாய் விளங்கியது. ஆகையினாலேயே இந்தப் பழம் பாடலில் நந்திபுரி மன்னர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நன்று!'' என்று கூறியும் தங்கள் குதூகலத்தை வெளியிட்டார்கள்.

சுந்தர சோழர் முக மலர்ச்சியுடன் ''இந்தப் பாடலின் பொருள் இன்னதென்பதை யாராவது விளக்கிச் சொல்ல முடியுமா ?'' என்றார்.

ஒரே சமயத்தில் பலர் எழுந்து நின்றார்கள். பிறகு நல்லன் சாத்தனாரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் உட்கார்ந்தார்கள். நல்லன் சாத்தனார் பாடலுக்குப் பொருள் கூறினார்:—

''ஒரு சமயம் தேவேந்திரனுக்கும் விருத்திராசுரனுக்கும் போர் நடந்தது. அதில் இந்திரனுடைய ஐராவதம் இறந்து போய் விட்டது. அதற்கு இணையான வேறொரு யானை எங்கே கிடைக்கும் என்று இந்திரன் பார்த்துக் கொண்டிருந்தான். கடைசியில் பழையாறை நகரில் வாழ்ந்த சுந்தரசோழ சக்கரவர்த்தியிடம் அவன் வந்து 'ஐராவதத்துக்கு நிகரான ஒரு யானை வேண்டும்' என்று யாசித்தான். 'ஐராவதத்துக்கு நிகரான யானை என்னிடம் இல்லை. அதை விடச் சிறந்த யானைகள்தான் இருக்கின்றன!' என்று இந்திரனைத் தமது யானைக் கொட்டாரத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே குன்றங்களைப் போல் நின்ற ஆயிரக்கணக்கான யானைகளைத் தேவேந்திரன் பார்த்துவிட்டு 'எதைக் கேட்பது?' என்று தெரியாமல் திகைத்து நின்றான். அவனுடைய திகைப்பைக் கண்ட சுந்தர சோழர் தாமே ஒரு யானையைப் பொறுக்கி இந்திரனுக்கு அளித்தார். 'அந்த யானையை எப்படி அடக்கி ஆளப் போகிறோம் ? நம் வஜ்ராயுதத்தினால் கூட முடியாதே !' என்ற பீதி இந்திரனுக்கு உண்டாகி விட்டதைக் கவனித்து, வஜ்ராயுதத்தை விட வலிமை வாய்ந்த ஓர் அங்குசத்தையும் அளித்தார்.....

''பின்னர் ஒரு காலத்தில், செங்கதிர் பரப்பி உலகுக்கெல்லாம் ஒளிதரும் சூரிய பகவானுக்கும் ராகு என்னும் அரக்கனுக்கும் பெரும் போர் மூண்டது. ராகு தினகரனை விழுங்கப் பார்த்தான். முடியவில்லை! தினகரனுடைய ஒளி அவ்விதம் ராகுவைத் தகித்து விட்டது. ஆனால் சூரியனுடைய தேரில் பூட்டிய குதிரைகள் ஏழும் ராகுவின் காலகோடி விஷத்தினால் தாக்கப்பட்டு இறந்தன. சூரியன் தன் பிரயாணத்தை எப்படித் தொடங்குவது என்று திகைத்து நிற்கையில், அவனுடைய இக்கட்டான நிலையைக் கண்ட சுந்தர சோழர் ஏழு புதிய குதிரைகளுடன் சூரிய பகவானை அனுப்பி 'ரதத்தில் இந்தக் குதிரைகளைப் பூட்டிக் கொண்டு சென்று உலகத்தை உய்விக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். தன் குலத்தில் வந்த ஒரு சோழ சக்கரவர்த்தி இவ்விதம் சமயத்தில் செய்த உதவியைச் சூரியனும் மிக மெச்சினான்.

''பின்னர், சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் கைலயங்கிரியில் திருமணம் நடந்தது. பெண் வீட்டார் கலியாண சீர்வரிசைகளுடன் வந்திருந்தார்கள். ஆனால் பல்லக்குக் கொண்டு வரத் தவறி விட்டார்கள். ஊர்வலம் நடத்துவதற்கு எருது மாட்டைத் தவிர வேறு வாகனம் இல்லையே என்று கவலையுடன் பேசிக் கொண்டார்கள். இதை அறிந்த சுந்தர சோழ சக்கரவர்த்தி உடனே பழையாறை அரண்மனையிலிருந்து தமது முத்துப் பல்லக்கைக் கொண்டு வரச் சொன்னார். பயபக்தியுடன் சிவபெருமான் திருமணத்துக்குத் தம் காணிக்



கையாக அப்பல்லக்கை அளித்தார். அப்படிப்பட்ட சுந்தர சோழ சக்கரவர்த்திக்கு உவமை சொல்லக் கூடியவர்கள் இந்த விரிந்து பரந்த அலை கடல் சூழ்ந்த பெரிய உலகத்தில் வேறு யார் இருக்கிறார்கள்?....''

இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சுந்தர சோழ சக்கரவர்த்தி 'கலீர்' என்று சிரித்தார். நோயின் வேதனையினால் நெடுநாள் சிரித்தறியாத சக்கரவர்த்தியின் சிரிப்பு அவருடைய இணை பிரியாப் பத்தினியான மலையமான் மகள் வானவன்மாதேவிக்கும் தாதியர்களுக்கும் அரண்மனை வைத்தியருக்கும்கூடச் சிறிது உற்சாகத்தை அளித்தது.

கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையர் இத்தனை நேரமும் நின்று கொண்டே யிருந்தவர், சக்கரவர்த்தியைக் கைகூப்பி வணங்கி, ''பிரபு! நான் பெரிய தவறு செய்து விட்டேன்; பிழை பொறுத்து மன்னிக்க வேண்டும் !'' என்றார்.

"ஆ! தளபதியா பேசுகிறது? நீர் என்ன பிழை செய்தீர்? எதற்காக மன்னிப்பு? ஒரு வேளை இந்திரனுக்கு நான் அளித்த வெள்ளை யானையையும் சூரியனுக்கு அளித்த குதிரைகளையும் திரும்பப் பறித்துக் கொண்டு வந்து விட்டீரோ? சிவபெருமானிடமிருந்து சிவிகையையும் பிடுங்கிக் கொண்டு வந்து விட்டீரோ? செய்யக் கூடியவர் தான் நீர்!" என்று சுந்தர சோழர் சொல்லி மீண்டும் சிரித்ததும், சக்கரவர்த்தியுடன் சேர்ந்து புலவர்களும் சிரித்தார்கள். எல்லோரையும் காட்டிலும் அதிகமாக வந்தியத்தேவன் சிரித்தான். அதைச் சின்னப் பழுவேட்டரையர் கவனித்து அவனை நோக்கிக் கடுமையாக ஒரு பார்வை பார்த்தார். உடனே, சக்கரவர்த்தியின் பக்கம் திரும்பிப் பார்த்துக் கூறினார்:

"அரசர்க்கரசே! நான் செய்த பிழை இதுதான். இத்தனை காலமும் நான் இவர்களைப் போன்ற புலவர் சிகாமணிகளைத் தங்களிடம் வரவொட்டாமல் தடை செய்து வைத்திருந்தேன். அரண்மனை மருத்துவர் சொற்படி செய்தேன். ஆனால் இப்போது அது பிழை என்று உணர்கிறேன். இந்தப் புலவர்களின் வரவினால் தங்கள் முகம் மலர்ந்தது. இவர்களுடைய பேச்சைக் கேட்டுத் தாங்கள் வாய்விட்டுச் சிரித்தீர்கள். அந்தக் குதூகலச் சிரிப்பின் ஒலியைக் கேட்டு ***உடைய பிராட்டி**யின் முகமும் தாதியரின் முகங்களும் மலர்ந்தன. நானும் மகிழ்ந்தேன். இவ்வளவு குதூகலம் தங்களுக்கு அளிக்கக் கூடியவர்களை இத்தனை நாள் தங்கள் சந்நிதானத்துக்கு வரவொட்டாமல் தடுத்தது என்னுடைய பெரும் பிழை தானே?...." என்றார்.

"நன்று சொன்னீர், தளபதி! இப்போதாவது இதை நீர் உணர்ந்தீர், அல்லவா? 'வைத்தியர் சொல்லுவதைக் கேட்க வேண்டாம்; புலவர்கள் வருவதைத் தடுக்க வேண்டாம்' என்று உமக்கு நான் அடிக்கடி சொன்னதன் காரணம் தெரிகிறது அல்லவா?" என்றார் சக்கரவர்த்தி.

அரண்மனை வைத்தியர் எழுந்து கைகட்டி வாய் புதைத்து ஏதோ சொல்லத் தொடங்கினார். அதைச் சுந்தர சோழர் சட்டை செய்யாமல் புலவர்களைப் பார்த்து, "இந்த அருமையான பாடலைப் பாடிய புலவர் யார் என்று உங்களில் யாருக்காவது தெரியுமா? தெரிந்தால் சொல்ல வேணும்!" என்றார்.

நல்லன் சாத்தனார், "அரசர்க்கரசே! அதுதான் தெரியவில்லை! நாங்களும் அதைக் கண்டு பிடிக்க முயன்று கொண்டுதானிருக்கிறோம். கண்டு பிடித்து அந்த மாபெரும் புலவருக்குக் 'கவிச் சக்கரவர்த்தி' என்று பட்டம் சூட்டவும் சிவிகையில் ஏற்றி அவரை நாங்கள் சுமந்து செல்லவும் சித்தமாயிருக்கிறோம். இதுகாறும் எங்கள் முயற்சி பலன் அளிக்கவில்லை!" என்று சொன்னார்.

"அதில் வியப்பொன்றுமில்லை. நாலு வரி கொண்ட பாடலில் இவ்வளவு பெரும் பொய்களை அடக்கக்கூடிய மகா கவிஞர் தமது பெயரை வெளிப்படுத்திக் கொண்டு முன்வர விரும்ப மாட்டார்தானே?" என்று மகாராஜா கூறியதும், புலவர்களின் திருமுகங்களைப் பார்க்க வேண்டுமே! ஒருவர் முகத்திலாவது ஈ ஆடவில்லை. என்ன மறுமொழி சொல்லுவது என்றும் அவர்களுக்குத் தெரியவில்லை.

இந்த நிலைமையில் நமது வந்தியத்தேவன் துணிச்சலாக எழுந்து, "பிரபு! அப்படி ஒரே அடியாகப் பொய் என்று தள்ளிவிடக் கூடாது. இல்லாத விஷயத்தைச் சாதாரண பாமர மக்கள் சொன்னால் அது பொய்; இராஜாங்க நிர்வாகத்தில் ஈடுபட்டவர்கள் அவ்விதம் சொன்னால், அது இராஜதந்திர சாணக்கியம்; கவிகள் அவ்வாறு கூறினால் அது கற்பனை, அணி அலங்காரம், இல்பொருள் உவமை...." என்றான்.

புலவர்கள் அத்தனை பேரும் அவன் பக்கமாகப் பார்த்து, "நன்று! நன்று!" என்று உற்சாகத்துடன் ஆர்ப்பரித்தார்கள்.

சக்கரவர்த்தியும் வந்தியத்தேவனை உற்று நோக்கி, "ஓ! நீ காஞ்சியிலிருந்து ஓலை கொண்டு வந்தவன் அல்லவா? கெட்டிக்காரப் பிள்ளை! நன்றாக என்னை மடக்கி விட்டாய்!" என்றார். பிறகு சபையைப் பார்த்து, "புலவர்களே! பாடல் மிக அருமையான பாடலாக இருந்தாலும், அதைப் பாடியவரைக் கண்டு பிடிக்க வேண்டிய சிரமமும், அவருக்குக் கவிச் சக்கரவர்த்தி என்னும் பட்டம் சூட்ட வேண்டிய அவசியமும் இல்லை. இதைப் பாடிய புலவரை எனக்குத் தெரியும். ஏற்கனவே அவருடைய சிரஸின் பேரில் தூக்க முடியாத கனமுடைய சோழ சாம்ராஜ்ய மணிமகுடம் உட்கார்ந்து அழுத்திக் கொண்டிருக்கிறது. 'புவிச் சக்கரவர்த்தி', 'திரி

* பட்டத்து அரசியை 'உடைய பிராட்டி' என்று குறிப்பிடுவது அக்காலத்து மரபு.

புவன சக்கரவர்த்தி', 'ஏழுலகச் சக்கரவர்த்தி' என்னும் பட்டங்களையும் அந்தக் கவிராயர் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருக்கிறார்!'' என்றார் சுந்தர சோழர்.

இதைக் கேட்ட புலவர்கள் அத்தனை பேரும் ஆச்சரியக் கடலில் முழுகித் தத்தளித்தார்கள் என்று கூறினால், அதை வாசகர்கள் பொய் என்று தள்ளிவிடக் கூடாது! ஆசிரியரின் கற்பனை, அணி அலங்காரம், இல்பொருள் உவமை — என்று இவ்விதம் ஏதாவது ஒருவகை இலக்கணம் கூறி ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்!

இருபத்தெட்டாம் அத்தியாயம்

இரும்புப் பிடி

திடீரென்று பொங்கிய புதுவெள்ளம் போன்ற ஆச்சரியத்தின் வேகம் சிறிது குறைந்ததும், புலவர் தலைவரான நல்லன் சாத்தனார், ''பிரபு! அப்படியானால் இந்தப் பாடலை இயற்றிய கவி....'' என்று தயங்கினார்.

''உங்கள் முன்னால், கால்களின் சுவாதீனத்தை இழந்து, நோய்ப் படுக்கையில் படுத்திருக்கும் புவிச் சக்கரவர்த்திதான்!'' என்றார் சுந்தரசோழர்.

புலவர்களிடையே பலவித வியப் பொலிகளும் 'ஆஹா'காரமும் எழுந்தன. சிலர் தங்களுடைய மனோ நிலையை எவ்விதம் வெளியிடுவது என்று தெரியாமல் தலையையும் உடம்பையும் அசைத்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் தங்களுடைய மனோ நிலை இன்னதென்று தங்களுக்கே தெரியாமல் கல்லாய்ச் சமைந்திருந்தார்கள்!

சுந்தரசோழர் கூறினார்: ''புலவர் பெருமக்களே! ஒரு சமயம் பழையாறையில் புலவர்களும் கவிஞர்களும் என்னைப் பார்க்க வந்தார்கள். அந்தக் கூட்டத்தில் உங்களில் சிலரும் இருந்திருக்கலாம். ஒவ்வொருவரும் சோழ குலத்தின் வள்ளல் தன்மையைக் குறித்து ஒவ்வொரு பாடல் சொன்னார்கள். என்னைப் பற்றியும் பாடினார்கள். நான் 'இவருக்கு அதைக் கொடுத்தேன்', 'அவருக்கு இதை அளித்தேன்' என்றெல்லாம் பாடினார்கள். அச்சமயம் இளையபிராட்டி குந்தவையும் என் அருகில் இருந்தாள். புலவர்கள் பரிசில்கள் பெற்றுச் சென்றபிறகு அவர்கள் பாடிய பாடலை அரசிளங்குமரி புகழ்ந்து பாராட்டினாள். குந்தவையிடம் நான் 'புலவர்களையெல்லாம்விட என்னால் நன்றாகப் பாட முடியும்' என்று சபதம் கூறினேன். பிறகுதான் வேடிக்கையாக இந்தப் பாடலைப் பாடினேன். 'எனக்குப் பரிசு கொடு!' என்று கேட்டேன். குழந்தை என் முதுகின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு, 'இந்தாருங்கள் பரிசு!' என்று கன்னத்துக்கு இரண்டு அறை கொடுத்தாள்! அது நேற்று நடந்தது போல் எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஆனால் ஆண்டு எட்டுக்கு மேல் ஆகிறது!....'' என்றார்.

''விந்தை! விந்தை!'' என்றும், ''அற்புதம்! அற்புதம்!'' என்றும் புலவர்கள் கூறி மகிழ்ந்தார்கள்.

குந்தவை என்ற பெயரைக் கேட்டதுமே வந்தியத்தேவனுக்கு மெய் சிலிர்த்தது. சோழ குலத்தில் பிறந்த அந்த இணையில்லாப் பெண்ணரசியின் எழிலையும் புலமையையும் அறிவுத் திறனையும் பற்றி அவன் எவ்வளவோ கேள்விப்பட்டதுண்டு. அத்தகைய அதிசய அரச குமாரியைப் பெற்றெடுத்த பாக்கியசாலியான தந்தை இவர்; தாய் அதோ பக்கத்தில் அமர்ந்திருக்கும் மூதாட்டி. சுந்தர சோழர் தம் செல்வப் புதல்வியைக் குறித்துப் பேசும் போது எவ்வளவு பெருமிதத்துடன் பேசுகிறார்? அவர் குரல் எப்படித் தழுதழுத்து உருக்கம் பெறுகிறது?....

வந்தியத்தேவனுடைய வலக்கரம் அவனுடைய இடையைச் சுற்றிக் கட்டியிருந்த பட்டுத் துணிச் சுருளைத் தடவிப் பார்த்தது. ஏனெனில், குந்தவைப் பிராட்டிக்கு அவன் கொண்டு வந்திருந்த ஓலை அச்சுருளுக்குள் இருந்தது. தடவிப் பார்த்த கை திகைப்படைந்து செயலிழந்து நின்றது; அவனுடைய உள்ளம் திக்பிரமை கொண்டது. 'ஐயோ! இது என்ன? ஓலையைக் காணோமே? எங்கே போயிற்று? எங்கேயாவது விழுந்து விட்டதோ? சக்கரவர்த்தியின் ஓலையை எடுத்த போது அதுவும் தவறி விழுந்திருக்குமோ? எங்கே விழுந்திருக்கும்? ஒரு வேளை ஆஸ்தான மண்டபத்தில் விழுந்திருக்குமோ? அப்படியானால் சின்னப் பழுவேட்டரையரின் கையில் சிக்கிவிடுமோ? சிக்கி விட்டால் அதிலிருந்து ஏதாவது

அபாயம் முளைக்குமோ? அடடா? என்ன பிசகு! எத்தனை பெரிய தவறு! இதை எப்படிச் சமாளிப்பது?'

குந்தவை தேவிக்குக் கொணர்ந்த ஓலை தவறி விட்டது என்று அறிந்த பிறகு வந்தியத்தேவனுக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. மேலே நடந்த பேச்சுவார்த்தைகளும் அவன் காதில் சரியாக விழவில்லை; விழுந்ததும் மனத்தில் நன்கு பதியவில்லை.

சுந்தர சோழர் வியப்புக் கடலில் மூழ்கியிருந்த புலவர் கூட்டத்தைப் பார்த்து மேலும் கூறினார்:—

''நான் விளையாட்டாகச் செய்த பாடலைக் குந்தவை யாரிடமாவது சொல்லியிருக்க வேண்டும். ஒருவேளை பழையாறை திருமேற்றளி ஆலயத்தின் ஈசான்ய பட்டாச்சாரியாரிடம் சொல்லி யிருக்கலாம். அவர் இப்பாடலை நாடெங்கும் பரவும்படி செய்து என்னை உலகம் பரிகசிப்பதற்கு வழி செய்து விட்டார்!....''

''பிரபு! தாங்களே பாடியிருந்தால் என்ன? பாடல் அற்புதமான பாடல்தான்! சந்தேகமேயில்லை. தாங்கள் 'புவிச் சக்கரவர்த்தி'யாயிருப்பதோடு 'கவிச் சக்கரவர்த்தி'யும் ஆவீர்கள்!'' என்றார் நல்லன் சாத்தனார்.

''ஆயினும், இச் சமயம் அதே பாடலை நான் பாடியிருந்தால் இன்னொரு கொடையையும் சேர்த்திருப்பேன். இந்திரனுக்கு யானையும், சூரியனுக்குக் குதிரைகளும், சிவனுக்குப் பல்லக்கும் கொடுத்ததோடு நிறுத்தியிருக்கமாட்டேன். மார்க்கண்டனுக்காக மறலியைச் சிவபெருமான் உதைத்தார் அல்லவா? அந்த உதைக்கு யமன் தப்பித்துக் கொண்டான். ஆனால் அவனுடைய எருமைக் கடா வாகனம் சிவபெருமான் கோபத்தைத் தாங்காமல் அங்கேயே விழுந்து செத்து விட்டது. வாகனமில்லாமல் யமன் திண்டாடிக் கொண்டிருந்ததை யறிந்து பழையாறைச் சுந்தர சோழர் யமனுக்கு எருமைக்கடா வாகனம் ஒன்றை அனுப்பினார்!.... இப்படி ஒரு கற்பனையும் சேர்த்திருப்பேன். அந்த எருமைக் கடாவின் பேரில் ஏறிக் கொண்டுதான் யமன் இப்போது ஜாம் ஜாம் என்று என்னைத் தேடி வந்து கொண்டிருக்கிறான். நமது தஞ்சைக் கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரால்கூட யமதர்ம ராஜனையும் அவனுடைய எருமைக் கடா வாகனத்தையும் தடுத்து நிறுத்திவிட முடியாது அல்லவா?''

இப்படிச் சுந்தர சோழர் சொன்னபோது அவர் அருகில் வீற்றிருந்த உடைய பிராட்டி வானவன்மா தேவியின் கண்களில் நீர் அருவி பெருகிற்று. அங்கிருந்த புலவர்களில் பலர் விம்மி அழத் தொடங்கி விட்டார்கள்.

சின்னப் பழுவேட்டரையர் மட்டுமே மனோ திடத்துடன் இருந்தார்.

''பிரபு! தங்களுடைய சேவையில் யமனுடன் போர் தொடுக்கவும் நான் சித்தமா யிருப்பேன்!'' என்றார்.

''அதற்கு ஐயமில்லை, தளபதி! ஆயினும் யமனுடன் போர் தொடுக்கும் சக்தி மானிடர் யாருக்கும் இல்லை. யமனைக் கண்டு அஞ்சாமலிருக்கத்தான் நாம் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். புலவர்களே! 'நமனை அஞ்சோம்' என்று தமிழகத்தின் தவப் புதல்வர் ஒருவர் பாடினார் அல்லவா?'' என்றார் சக்கரவர்த்தி.

ஒரு புலவர் எழுந்து அப்பாடலைப் பாடினார்:—

''நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
நடலையல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் ...''

சக்கரவர்த்தி இந்த இடத்தில் குறுக்கிட்டு, ''ஆகா! இறைவனைப் பிரத்தியட்சமாகத் தரிசித்த மகானைத் தவிர வேறு யாரால் இவ்வளவு துணிச்சலாகப் பாட முடியும்? அப்பர் சுவாமிகளுக்குக் கொடிய சூலை நோய் இருந்தது. இறைவன் அருளால் நோய் நீங்கிற்று. எனவே 'பிணியறியோம்' என்று பாடியிருக்கிறார்! புலவர்களே! என்னைப் பற்றியும் என் கொடைகளைப் பற்றியும் பாடுவதை நிறுத்தி விட்டு இனி இத்தகைய அருள்வாக்கைப் பாடுங்கள்! அப்பரும், சம்பந்தரும், சுந்தரமூர்த்தியும் இதுபோல் ஆயிரக்கணக்கான பக்திமயமான தீந்தமிழ்ப் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். அப்பாடல்கள் எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? படித்தும் பாடியும் பரவசம் அடைவதற்கு ஓர் ஆயுட் காலம் போதாது அல்லவா?'' என்றார்.

''அரசர்க்கரசே! தாங்கள் அநுமதித்தால் அந்தத் திருப்பணியை இப்போதே தொடங்குகிறோம்!''

''இல்லை; என்னுடைய காலத்தில் நடக்கக்கூடிய திருப்பணி அல்ல அது. எனக்குப் பின்னால்....'' இவ்விதம் கூறித் தயங்கி நின்ற சுந்தர சோழர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

அரண்மனை மருத்துவர், சின்னப்பழுவேட்டரையரின் அருகில் வந்து அவர் காதில் ஏதோ சொன்னார்.

அதைக் கவனித்த சுந்தர சோழர் தூக்கிவாரிப் போட்டவரைப் போல் கண்ணை நன்கு விழித்துச் சபையோரைப் பார்த்தார். வேறொரு உலகத்திலிருந்து, மரணத்தின் வாசலிலிருந்து, யமனுலகக் காட்சியிலிருந்து, திடீரென்று திரும்பி வந்தவரைப் போல் சக்கரவர்த்தி தோன்றினார்.

"பிரபு! சங்கப் பாடல் ஒன்றைக் கேட்க வேண்டும் என்று தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தீர்கள். அதை மட்டும் சொல்லி விட்டு இவர்கள் போகலாமல்லவா?" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

"ஆம், ஆம்; மறந்து விட்டேன். என்னுடைய உடல் மட்டும் அல்ல; உள்ளமும் சுவாதீனத்தை இழந்து வருகிறது. எங்கே? சங்கப் பாடலைச் சொல்லட்டும்!" என்றார் மன்னர்.

சின்னப் பழுவேட்டரையர் நல்லன் சாத்தனாருக்குச் சமிக்ஞை செய்தார். புலவர் தலைவர் எழுந்து கூறினார் :

"அரசே! தங்களுடைய முன்னோர்களில் மிகப் பிரபலமானவர் கரிகால் பெருவளத்தார். இமய மலையில் புலிக் கொடியைப் பொறித்த மாவீரர். அவருடைய ஆட்சிக் காலத்தில் பூம்புகார்—காவேரிப்பட்டினம் — சோழ மகாராஜ்யத்தின் தலைநகரமாயிருந்தது. பற்பல வெளி நாடுகளிலிருந்தும் பற்பல பொருள்கள் மரக்கலங்களில் வந்து இறங்கியவண்ணமிருந்தன. பூம்புகாரின் செல்வப் பெருக்கையும் வளத்தையும் வர்ணிக்கும் சங்கப் புலவர் ஒருவர் இன்னின்ன நாட்டிலிருந்து இன்னின்ன பொருள்கள் வந்தன என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அந்தப் பாடல் பகுதி இது :—

"வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத் தாக்கமும்..."

பாடலில் இந்த இடம் வந்தபோது சுந்தர சோழர் கையினால் சமிக்ஞை செய்யவே, புலவர் நிறுத்தினார்.

"தளபதி! கரிகால் வளவர் காலத்தில் ஈழநாட்டிலிருந்து தமிழகத்துக்கு உணவுப் பொருள் வந்து கொண்டிருந்தது என்று இப்பாடல் சொல்கிறது. அதை நான் அறிவதற்காகத்தானே இப்புலவர்களை அழைத்து வந்தீர்?"

"ஆம், அரசே!" என்று கோட்டைத் தளபதி கூறியது சிறிது ஈனஸ்வரத்தில் கேட்டது.

"அறிந்து கொண்டேன். இனி இப்புலவர்களைப் பரிசில்கள் கொடுத்து அனுப்பிவிடலாம்!" என்றார் மன்னர்.

"புலவர்களே! நீங்கள் இப்போது விடை பெற்றுக் கொள்ளலாம்!" என்றார் கோட்டைத் தளபதி.

புலவர்கள் மன்னருக்கு, "வாழி!" கூறிக் கோஷித்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள்.

குந்தவை தேவிக்குக் கொண்டு வந்த ஓலையைக் காணாததால் மனக் கலக்கம் அடைந்திருந்த வல்லவரையன், அப்புலவர்களுடனே தானும் நழுவிவிடலாம் என்று எண்ணி எழுந்து கூட்டத்தின் நடுவில் நடந்து சென்றான்.


ஆனால், அவன் எண்ணம் நிறைவேறவில்லை. வாசற்படியை நெருங்கியபோது ஒரு வலிய இரும்புக் கை அவனுடைய கையின் மணிக்கட்டை இறுகப் பிடித்தது. வல்லவரையன் நல்ல பலசாலிதான்! ஆயினும் அந்த வஜ்ரப் பிடியின் வேகம் அவன் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் ஒரு குலுக்குக் குலுக்கி அவனைச் செயலிழந்து நிற்கும்படிச் செய்துவிட்டது.

அவ்விதம் பிடித்த இரும்புக் கரம் சின்னப் பழுவேட்டரையரின் கரந்தான் என்பதை நிமிர்ந்து பார்த்துத் தெரிந்து கொண்டான்.

புலவர்கள் தரிசன மண்டபத்திலிருந்து வெளியேறினார்கள். **(தொடரும்)**

காந்தி சதாப்தி ஆண்டினையொட்டி இளைஞர்களுக்கு நாவலரின் செய்தி:

காந்தியக் கருத்துக்களைக் கற்க
கற்றபின் நிற்க அதற்குத் தக.




பெரிய அளவிலே சமையலா ?
அவசரமான சமையலா ?
சிக்கனமான சமையலா ?

எவ்வகைச் சமையலையும் எளிதாக்குகிறது

கால்காஸ்

கால்காஸ் - சமையலுக்கான நவீன எரிபொருள்-
ஓட்டல்கள், மருத்துவ மனைகள், உணவு விடுதிகள்
எதற்கும் இன்றியமையாதது. ஏனெனில், கால்காஸ்-
உடனடியாக சூடுபிடித்து விரைவிலே நன்கு
சமைக்க உதவுகிறது-நேரத்தையும், பணத்தையும்
மிச்சமாக்குகிறது-உபயோகிக்கவோ எளிதானது-
தேவைக்கேற்ப ஏற்றலாம்,அணைக்கலாம்-
சுத்தமும், சிக்கனமும்கூட. சமையல்
நேரத்தை மணிக்கணக்கில் குறைக்கிறது-
கால்காஸ் பாதுகாப்பானது....கால்காஸ்
பாதுகாப்பான எஃகு சிலிண்டர்களில் வருகிறது.



வீட்டிலே டெலிவரி கொடுக்கப் படுகிறது !

ஏகபோக விநியோகஸ்தர்கள் : **ஈஸ்ட் கோஸ்ட் காஸ் கோ.**
48-9-5, கோ-ஆபரேடிவ் காலனி, துவாரகாநகர், விசாகப்பட்டணம்-4.
டெலி : 3516. கன்னிமாரா அனெக்ஸ் மவுண்ட் ரோடு, மதராஸ்-2.
டெலி: 83428.

ஏஜெண்டுகள் : மதராஸ், காக்கிநாடா, விசாகப்பட்டணம், விஜயவாடா,
ஏலூரு, குண்டூர், பாலகோல், ராஜமுண்டிரி, நெல்லூர், விஜயநகரம்,
மசூலிப்பட்டணம், சேலம், காட்பாடி, ஓங்கோல், வாரங்கல், பாண்டிச்சேரி,
காஞ்சிபுரம், கர்நூல், சித்தூர், திருப்பதி, பொப்பிலி, பார்வதிபுரம், ராமசந்திர
புரம், சோம்பேட்டா, பெர்ஹாம்பூர், நரசராவ்பேட், ஸ்ரீகாகுளம், கூடூர்,
ஜெய்பூர், கம்மம், ஈரோடு.

கால்டெக்ஸ் தயாரிப்பு

C-GAS-G-5-69 TM.



திரு ரா. கி. ரங்கராஜன்

ஒரு பெண்ணை இருவர் காதலித்தால் அதை காதல் 'முக்கோணம்' என்பார்கள். ஆனால் இந்தப் 'படகு வீடு' நாவல் மூலம், கதாநாயகி சத்யாவை மூவர் விரும்ப, அந்த மூவரில் முக்கியமான ராதா வேறொரு பெண்ணையும் காதலித்திருக்க மொத்தம் ஒரு புதுமையான 'ஐங்கோணக் காதலை' ஆசிரியர் திரு ரா. கி. ரங்கராஜன் விவரிக்கிறார்.

பெரிய போலீஸ் அதிகாரி சாரங்கபாணியின் ஒரே புதல்வி சத்யா. அவளுடைய மாமா பிள்ளை ராதாகிருஷ்ணன். காஷ்மீரில் உல்லாசப் பிரயாணம் செய்து விட்டு வந்ததும், சத்யா எம். பி. பி. எஸ்.ஸைத் திருமணம் செய்து கொண்டிருக்க வேண்டியவன். ஆனால் ராதாகிருஷ்ணன் சன்னியாசி ராதானந்தராகத் திரும்புகிறார்! முறை மாப்பிள்ளையைக் கிருஹஸ்தாச்ரமத்துக்கு இழுக்க சத்யாவும் அவள் பெற்றோரும் பலவித சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள். சத்யா ராதா மீதே கண்ணாக இருக்கும்போது, சத்யா மீது அவளோடு பணிபுரியும் டாக்டர் சம்பத்துக்குக் காதல்! இது போதாதென்று சாரங்கபாணியின் அந்தரங்கக் குமாஸ்தா மணிக்கும் சத்யா மீது ஒரு கண்!

ராதா காஷ்மீரில் ஒரு கொலை செய்துவிட்டு அதை மறைக்கவே காஷாயம் பூண்டு சென்னை திரும்பி விருப்பதாகத் தகவல் கிடைக்கிறது! ராதா செய்த கொலை பற்றிய ரகசியத்தைக் கடைசியாகத் தெரிந்து கொள்கிறவர் போலீஸ் அஸிஸ்டெண்ட் கமிஷனர் சாரங்கபாணிதான்!

நாவலின் – 'க்ளைமாக்ஸ்' கட்டம் எண்ணூர் உப்பங்கழியின் கரையிலுள்ள நரஸிம்மலுபேட்டை குக்கிராமத்தில் நடைபெறுகிறது! அங்கு சத்யாவின் கழுத்தில் ராதா(னந்தர்) திடீர்த் தாலி ஒன்றைக் கட்ட முயலும் முகூர்த்தம், மணி எதிர்பார்த்தபடி வந்து ராதாவின் கையில் சுட்டுவிட்டுப் பிடிபடுகிறான்! டாக்டர்கள் சத்யாவும், சம்பத்தும் ஒருவித வசதியும் இல்லாத நிலையிலேயே ராதாவுக்கு அறுவைச் சிகிச்சை செய்து, குண்டை வெளியில் எடுத்து, ரத்தப் போக்கை நிறுத்தி, உடைந்த தோள் எலும்பைச் சீராக்கிக் கட்டுப்போட்டு ராதாவைக் குணப்படுத்துகிறார்கள். ராதாவின் குற்றம் பற்றி விசாரணை செய்ய மணியினால் அனுப்பப்பட்ட ராணி மூலம், ராதா செய்த (அல்லது செய்யாத?) கொலையின் மர்மம் வெளிப்படுகிறது. சுவாமி ராதானந்தர், நாவலின் முதல் அத்தியாயத்தில் எங்கிருந்து வந்தாரோ அதே டில்லி பவானி மடத்துக்கு, அதே விமானத்தில் சென்னையிலிருந்து புறப்பட்டுப் போகிறார்! டாக்டர் சம்பத்தும், டாக்டர் சத்யாவும் தோளோடு தோள் இடித்தவாறு விமானம், மீனம்பாக்கம் நிலையத்தை விட்டு மேலே எழும்புவதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள்!

'படகு வீடு' என்ற பெயரைப் படித்ததும், 'முழுக்க முழுக்க காஷ்மீர் பின்னணியில், படகு வீடுகளில் நடக்கும் சம்பவங்களைக் கொண்ட நாவலாக இருக்கும்' என்று நினைக்கும் வாசகர்கள் ஏமாறுவார்கள். காதலனும், காதலியும் சேர்ந்து காஷ்மீர் டால் ஏரியில் 'தோணிகள் ஓட்டி விளையாடும்' சொகுசு நாவலாக இதை அமைக்காமல், புது மாதிரியில் எழுதியுள்ளார் ஆசிரியர்.

காஷ்மீரின் இயற்கை யழகு பற்றிய வர்ணனை எதிர்பார்த்த அளவுக்கு இந்த நூலில் காணப்படவில்லை.

ராதாவின் குண சித்திரம் இந்த நாவலுக்கே ஜீவநாடி.

ராதா, திடீரென்று பிறந்த ஓர் உத்வேகத்தில் காஷ்மீரில், பார்வை இழந்த ஆஷாவுக்குத் தீங்கு இழைத்து விடுகிறான். இது அவன் நெஞ்சைச் சுட்டு வேதனை அளிக்கிறது. தான் ஒரு சன்னியாசி என்று ஆஷாவிடம் பொய்யாகக் கூறிக் கொண்டதை நிஜமாக்கி விட்டால் செய்த தவறுகளுக்குக்

எழுத்தில் புதுமை

படகு வீடு



கழுவாய் கிடைத்துவிடும் என்று நம்புகிறான். சந்நியாசி கோலம் அவனுடைய படிப்பு, அந்தஸ்து, நடை யுடை பாவனைகள், மனப் பக்குவம் எல்லாவற்றிற்குமே மாறுபட்டது. ஆனால் ராதா தான் வலுவில் ஏற்ற பாகத்தைக் கூடியவரையில் கண்ணியமாகவே ஒப்பேற்றி யிருக்கிறான்.

சத்யா முதல் அத்தியாயத்தில் வாசகர்களின் அனுதாபத்துக்குப் பாத்திரமானவன், மேலும் மேலும் அனுதாபங்களுக்குரியவனாகி நாவலின் இறுதியில் தன்னுடைய அலைப்புண்ட வாழ்வு நிலை நிறுத்தப்படுவதைக் காண்கிறான். சத்யாவை அடையும் யோக்கியதை ராதாவுக்குக் கிடையாது என்பது ருசுப்படுத்தப்பட்ட பிறகு, ராதாவின் சந்நியாசாச்ரமம் உறுதிப்பட்டு விட்டது!

சின்ன சாமியார் பாத்திரம் நாவலுக்கே ஒரு வலுவையும், கண்ணியத்தையும் ஊட்டுகிறது. இவருடைய உலக அனுபவமும், பெருந்தன்மையும், கண்டிப்பும் இல்லாவிட்டால் ராதானந்தரின் சாயம் தொடக்கத்திலேயே வெளுத்துவிட்டிருக்கும்!

ஆஷாவின் உடலுக்குத் தீ மூட்டப்பட்டதும், ''ஆஷா என்ற ஓவியம் நிக்கிரையாகிறது. ஆஷா என்ற கவிதை கிழித்தெறியப்படுகிறது. ஆஷா என்ற கனவு கலைகிறது. ஆஷா என்ற நறுமணம் காற்றில் கரைகிறது. ஆஷா என்ற பூவிதழ் அரைபடுகிறது. ஆஷா என்ற சுடர் அணைகிறது'' என்ற திகுதிகுக்கும் சிதை வர்ணனை குறிப்பிடக்கூடிய ஒன்று.

''தாயை மடியச் செய்துவிட்டுப் பிறக்கும் சிசுவைப் போல, பகலின் மரணத்தில் இரவு ஜனித்திருந்தது.

''இருட்டைப் போல் மென்மையான, மதுரமான போர்வை கிடையாது. அதனுள்ளே ஆயிரம் ரகசியங்களைப் பரிமாறிக் கொள்ளலாம். பத்தாயிரம் அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.'' போன்ற வர்ணனைகள் நாவலின் தீவிரத் தன்மைக்குச் சான்று.

கும்பகோணத்தில், சம்ஸ்கிருதப் பேராசிரியராக இருந்த மகா மகோபாத்யாய கிருஷ்ணமாச்சாரியாருக்கு 5—10—1927ல் பிறந்து, பேராசிரியர் அ. சீ. ராவின் சிபாரிசுடன் வை. கோவிந்தனின் 'சக்தி'யிலும், பிறகு 'நார'வின் 'காலச் சக்கர'த்திலும் உதவி ஆசிரியராகப் பணி புரிந்து 1950ல் 'குமுதத்'தில் சேர்ந்து இப்போது அதன் துணை ஆசிரியராக இருக்கும் திரு ரா. கி. ரங்கராஜன் எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பிய முதல் விஷயம் ஒரு ஹாஸ்யத் துணுக்கு! அதை அப்போது வெளியிட்டு சன்மானமாக ரூ. 10 அனுப்பியது 'கல்கி' பத்திரிகை தான்! ''இந்த இனிய முதல் அனுபவத்தை நான் எப்போதும் மறக்க மாட்டேன்'' என்றார் ரா. கி. ர. ''பேராசிரியர் 'கல்கி' அவர்களின் எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் சிறு வயதிலிருந்தே எனக்கு ஈடுபாடு. மாயவரம் அல்லது தஞ்சாவூர் பக்கம் எங்காவது அவர் வந்திருக்கும் தகவல் கிடைத்தால், கும்பகோணத்திலிருந்து ஓடிப்போய் அவரைப் பார்த்துவிட்டு வருவேன். என் இளம் உள்ளத்தில் பேராசிரியர் கல்கிதான் இலக்கிய விதையை ஊன்றியவர். அந்த விதை முளை விட்டதும், களை எடுத்து, உரம் சேர்த்து, நீர் பாய்ச்சி, பழ மரமாகச் செய்து வருபவர் 'குமுதம்' ஆசிரியர் திரு எஸ்.ஏ.பி. அண்ணாமலை அவர்கள்'' என்றார் அவர்.

'சூர்யா' 'அவிட்டம்' என்றும் மற்றும் பல புனை பெயர்களிலும் ஐந்நூறுக்கு மேற்பட்ட சிறுகதைகளும், ஹாஸ்யச் சித்திரங்களும் கவிதைகளும் எழுதியுள்ள ரா. கி. ரங்கராஜன், தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் ''தேவன்'' தலைவராக இருந்தபோது, 'பல்லக்கு' என்ற சிறுகதைக்குத் தங்கப் பதக்கம் பரிசு பெற்றவர். 15 நாவல்களும், இரண்டு சிறுகதைத் தொகுதிகளும் புத்தக உருவில் வெளியாகி யிருக்கின்றன. இவருடைய 'இது சத்தியம்', 'சுமை தாங்கி' இரண்டும் திரைப்படங்களாக வெளி வந்துள்ளன.

இந்தப் 'படகு வீடு' நாவல் எழுத நேர்ந்த அனுபவங்களை விவரிக்கும்படி ஆசிரியரைக் கேட்டேன். ''ஜம்மு காஷ்மீர் சர்க்கார் செய்து தந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு வாரம் காஷ்மீர் டால் ஏரிப் படகு வீட்டில் தங்கியிருந்த அனுபவத்தை கதையில் அமைத்து எழுத ஆசைப்பட்டேன். அத்துடன் ஒரு சந்நியாசியைக் கதாநாயகனாக வைத்து இதுவரை தமிழில் யாரும் நாவல் எழுதினதாகத் தெரியவில்லை. அந்தப் புதுமையையும் செய்து பார்த்துவிடுவோம் என்ற ஆவல்'' என்றார்.

''மயக்க மருந்து கொடுக்கப்படாமல், நவீன ஆயுத வசதி யின்றி, சாதாரண கத்தியைப் பழுக்கக் காய்ச்சி, சாதாரண ஊசி, பட்டு நூல் உதவி கொண்டு ராதானந்தருக்கு டாக்டர்கள் சம்பத்தும், சத்யாவும் செய்த அறுவை பற்றிய விவரம்...? ஒரு புதுமைக் கதைக்காக அல்லாமல் நிஜமாகவே இப்படிச் செய்ய முடியுமா?''

''முடியும். இது சம்பந்தமாக மூன்று பிரபல டாக்டர்களைக் கலந்தாலோசித்தேன். வைத்தியக் கல்லூரி மாணவர்கள் பலர், 'எப்படி இவ்வளவு சரியாக எழுதினீர்கள்?' என்று பாராட்டினார்கள்'' என்றார் ரா. கி. ர.

''வேறு ரசமான கடிதங்கள் வந்தனவா?''

''வந்தன. 'ஓர் இந்து சன்னியாசியைப் பற்றி எழுதுகிறீர்கள். மதாபிமானமுள்ளவர்கள் மனம் புண்படும் தகவலோ, சொல்லோ வராமல் எச்சரிக்கையோடு எழுதுங்கள்!' என்று வாசகர்கள் சிலர் எனக்கு வேலி கட்டிக் காப்பாற்றினார்கள்.''

''உங்களுடைய முன்னுரை கூட ஏதோ புது மாதிரியில் அமைந்திருக்கிறதே!''

''ஒரு சன்னியாசி பற்றிய கதைக்கு முன்னுரை எழுதுகிறோம் என்ற நினைப்பில் 'நான்' 'எனது' என்ற அகங்கார, மமகாரச் சொற்களை நீக்கி அந்த முன்னுரையை எழுதியிருக்கிறேன்! அதைத்தானே சொல்கிறீர்கள்?''


''ஆமாம், இவ்வளவு எழுதியிருக்கிறீர்களே! எந்த ஒரு லட்சிய அடிப்படையில் இத்தனை கதைகளையும், நாவல்களையும் உங்களால் எழுத முடிந்தது?'' என்று கேட்டேன்.

'' 'போர்' அடிக்கக் கூடாது என்ற நோக்கத்தோடுதான் எப்போதும் எழுதுகிறேன். இந்த 600 பக்க நாவலை எழுதும் போது இந்த எச்சரிக்கையை அதிகமாகவே மனத்தில் கொண்டு எழுதினேன்'' என்றார் ரா.கி. ரங்கராஜன்.

— மகரம்

விற்பனை உரிமை: மீனாட்சி புத்தக நிலையம், மதுரை —1; விலை: 12—50.

உங்கள் மகனின் கனவை நனவாக்குங்கள்



இவன் பெரியவனானதும் யாராகவிருப்பான்? என்ஜினியரா? கட்டடக் கலைஞரா? டாக்டரா? அல்லது வக்கீலா? இவர்களில் யாராகவிருக்க இவன் விரும்பினாலும், அதற்கு, பணம் செலவாகும் — ஏராளமாகத்தான். இவனது வருங்கால வாழ்வு வளம் பெறுவதற்காக நீங்கள் பணம் சேமித்து வருகிறீர்களா? வட்டி பெற்று பணம் பெருகிக்கொண்டே வரும் யுகோ பாங்கில் சேமித்து வாருங்கள்.


தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

நீங்கள் பணம் சேமிக்கலாம், யுகோ பாங்க் உங்களுக்கு உதவி செய்ய முடியும்.

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

ASP/UCO 9/68


கோடுபோட்ட மற்றும் கட்டம் போட்டக்ஷேர்ட்டிங்,
வெண்ணிற மற்றும் சாயம் தோய்த்த பாப்லின்களும்,
டாப்பி பாப்லின்களும்.
வெண்ணிற மற்றும் சாயம் தோய்த்த
பிரிண்டெட் லான்கள், பிரிண்டெட்
வாயில்கள்.
கண்கவர் விசேஷங்களில் 2x2
ஃபுல் வாயில்கள்.
புட்டாக்கள் மற்றும் புடவைகள்
ஸாப்ஃபைன் வேஷ்டிகள்
காம்பிரிக் கோட்டிங்.
அழகுத் தேவதையோ
என வியக்கத்தக்க
இந்த ஆரணங்கு அணிந்திருப்பது
ராய்ப் பூர்
தரத்தில் சிறந்த துணிவகைகள்
ராய்ப்பூர் மில்ஸ், அகமதாபாத்
SANFORIZED
LALBHAI GROUP



மகாபாரதம்

ராஜாஜி

61. ருக்மிணி

விதர்ப்ப தேசாதிபதி பீஷ்மகனுக்கு ஐந்து குமாரர்களுடன் ஒரே ஒரு பெண் இருந்தாள். அழகிலும் குணத்திலும் ஒப்பற்ற இந்தப் பெண்ணின் பெயர் ருக்மிணி. கிருஷ்ணனைப் பற்றி உலகமெல்லாம் புகழ்ந்ததைக் கேட்டு ருக்மிணிக்கு அந்த வீரனை மணந்து இல்லறம் நடத்த வேண்டும் என்ற ஆவல் வளர்ந்தது. பந்துக்கள் அனைவரும் இந்த எண்ணத்தையே ஆமோதித்தார்கள். ஆனால் பீஷ்மகனுடைய மூத்த குமாரனும் இளவரசனுமான ருக்மன் என்பவன் கண்ணனைத் துவேஷித்தான். அவன் ருக்மிணியைத் துவாரகாபதிக்குக் கொடுக்கக் கூடாது. அவளைச் சேதி தேசத்து ராஜனை சிசுபாலனுக்கு விவாகம் செய்து முடிக்க வேண்டும் என்று தகப்பனாரை வற்புறுத்தி வந்தான். தகப்பனார் வயதானவரான படியால் இளவரசன் பேச்சே வலுத்தது. சிசுபாலனுக்கே ருக்மிணியைக் கொடுத்து விவாகம் முடியும் போல் இருந்தது.

கண்ணனை விரும்பினவளும் தேவியின் அவதாரமுமான ருக்மிணி அசுர குணம் படைத்த சிசுபாலனை எவ்வாறு ஒப்புக் கொள்வாள்? தகப்பனுர் தன்னைக் காப்பாற்ற மாட்டார். பிடிவாதக்காரனுன ருக்மனின் உபதேசமே வெற்றியடையும் என்று அவள் பயந்து மிக்க துயரப்பட்டாள்.

பிறகு ஒரு நாள் ருக்மிணி தைரியம் செய்து கொண்டு தன் துயரத்தினின்று மீள்வதற்கு ஒரு வழி எப்படியாவது தேட வேண்டும் என்று தீர்மானித்தாள். அதைப் பற்றி ஒரு பிராமணனுடன் ஆலோசனை செய்தாள். இயற்கைக் கூச்சத்தை விட்டு விட்டுக் கிருஷ்ணனிடம் அந்தப் பிராமணனைத் தூது அனுப்பினுள். போய்த் தன் நிலைமையைச் சொல்லி எப்படியாவது தன்னைக் காப்பாற்றும் படியாக அவனை வேண்டிக் கொள்ளச் சொல்லி அனுப்பினுள்.

பிராமணன் துவாரகைக்குப் போய்க் கண்ணபிரானைக் கண்டு ருக்மிணியின் பரிதாபத்தையும் வேண்டுகோளையும் அவனுக்குத் தெரிவித்து ருக்மிணி அனுப்பிய கடிதத்தையும் பகவானிடம் தந்தான்.

''உன்னை நான் வரித்தேன். என் உள்ளம் உன்னுடைய சொத்தாகி விட்டது. உனக்குச் சொந்தமாகச் சேர்ந்துவிட்ட பொருளைச் சிசுபாலன் கவர்ந்து கொள்வதற்கு முன்னமே நீ இவ்விடம் வந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். நாளைய தினமே இவ்விடம் வரவேண்டும். சிசுபாலனுடைய படைகளையும் ஜராசந்தனுடைய படைகளையும் எதிர்த்துச் சிதற அடித்து என்னை நீ பெற வேண்டியதாயிருக்கிறது. வீரனுக என்னை அடைவாய். சிசுபாலனுக்கு என்னை விவாகம் செய்துவிடுவதாக அண்ணன் தீர்மானித்திருக்கிறுன். விவாகச் சடங்குக்காகச் செய்ய வேண்டிய பூஜைக்காக அம்மன் கோயிலுக்கு என் பரிவாரத்துடன் போவேன். நீ அப்போது வந்து என்னை மீட்கலாம். இல்லையேல் நான் உயிரை மாய்த்துக் கொள்வேன். மறு பிறப்பிலாவது உன்னை அடைவேன் அல்லவா!'' இந்தக் கடிதத்தைப் படித்தவுடனே கண்ணன் தேரில் ஏறினுன்.

விதர்ப்ப தேசத்தின் ராஜதானியான குண்டினபுரம் அலங்கரிக்கப்பட்டு ருக்மிணியின் விவாகத்திற்கு வேண்டியதெல்லாம் பீஷ்மகராஜனுடைய கட்டளைப்படி தயார் செய்யப்பட்டது. சிசுபாலனும் அவனைச் சேர்ந்தவர்களும் வந்து சேர்ந்து விட்டார்கள். அனைவரும் கிருஷ்ணனுடைய பரம விரோதிகள்.

கண்ணன் தனியாகத் தேர் ஏறிச் சென்ற செய்தி பலராமனுக்குத் தெரிந்தது. இது விதர்ப்பராஜனுடைய மகளைப் பற்றியதாகவே இருக்கலாம்; தம்பி கண்ணன் அவ்விடம் போய் ஜன்ம விரோதிகளால் சூழப்பட்டு அபாயத்தில் சிக்கிக் கொள்வான் என்று பலதேவன் கவலைப்பட்டு, உடனே பெருஞ் சேனையை அவசரமாகத் திரட்டிக் கொண்டு குண்டினபுரத்துக்கு விரைவாகச் சென்ருன்.

ருக்மிணி அந்தப்புரத்தை விட்டுப் புறப்பட்டாள். பரிவாரமும் படையுமாகப் பெருங்கூட்டம் அவளுடன் சென்றது. கோயிலுக்குப் போய் விவாகத்துக்காகத் தேவி பூஜை நடத்தினுர்கள். ''தேவி! உன்னை வணங்குகிறேன். நான் இவ்வளவு நாளாக உன்னைப் பணிந்து வந்திருக்கிறேன். கண்ணன் என்னை அடைய வேண்டும். எனக்கு நீ இந்த வரம் தர வேண்டும்'' என்று உள்ளம் கரைந்து தேவியின் சந்நிதியில் முறையிட்டாள்.

ஃ ஃ ஃ

ஆலயத்திலிருந்து ருக்மிணி வெளியே வந்ததும் கண்ணனுடைய தேரைக் கண்டாள். கண்டதும் காந்தத்தினுல் இழுக்கப்பட்ட ஊசியைப் போல் ஒன்றும் பேசாமல் தேராகப் போய் அந்தத் தேரில் ஏறினுள். பகைவர்கள் பார்த்துக் கொண்டிருக்க, கண்ணன் அவளை ஏற்றிக் கொண்டு தேரை ஓட்டினுன்.

இளவரசனுன ருக்மனிடம் சேவகர்கள் ஓடிச் சென்று நடந்ததைச் சொன்னுர்கள்.

''கிருஷ்ணனைக் கொல்லாமல் திரும்ப மாட்டேன்'' என்று அவன் சபதம் செய்து பெருஞ் சேனையுடன் கிருஷ்ணனைத் துரத்திக் கொண்டு சென்ருன். இதற்குள் பலராமனும் சேனையுடன் வந்து சேர்ந்தான். இரு கட்சியினருக்கும் பெரும் யுத்தம் நடந்தது. பலராமனும் கண்ணனும் பகைவர்களைச் சிதற அடித்து வெற்றியுடன் துவாரகைக்குச் சென்றுர்கள். அங்கே ருக்மிணியின் விவாகம் முறைப்படி நடந்தது.

தோல்வியை அடைந்த ருக்மன் வெட்கத்தால் பீடிக்கப்பட்டுக் குண்டினபுரத்துக்குத் திரும்பிப் போகாமல், கிருஷ்ணனுக்கும் தனக்கும் யுத்தம்

நடந்த இடத்திலேயே தன் சேனையை நிறுத்தி, அவ்விடத்தில் போஜகடம் என்கிற புதிய நகரத்தை நிர்மாணம் செய்து அங்கேயே அரசு நடத்தி வந்தான்.

ஃ ஃ ஃ

குருக்ஷேத்திரத்தில் யுத்தம் நடைபெறப் போகிறது என்று அறிந்து ருக்மராஜன் ஓர் அக்குரோணி சேனையுடன் அவ்விடம் வந்தான். வாசுதேவனுடைய நட்பை இப்போது அடையலாம் என்று எண்ணிப் பாண்டவர்களிடம் சென்றான். தனஞ்சயனைப் பார்த்து, ''பாண்டவனே! உன்னுடைய எதிரிகளின் சேனை பெரிதாக இருக்கிறது. உனக்குச் சகாயம் செய்ய வந்திருக்கிறேன். எதிரிகளுடைய படையில் எந்தப் பாகத்தைத் தாக்க வேண்டுமென்று விரும்புகிறாயோ, அதை நான் தாக்குவேன். துரோணர், கிருபர் அல்லது பீஷ்மரையும் தாக்க நான் சக்தியுள்ளவனாக இருக்கிறேன். உனக்கு வெற்றியைச் சம்பாதித்துத் தருவேன். உன் விருப்பம் என்ன?'' என்று கேட்டான்.

ருக்மனுடைய பேச்சைக் கேட்ட தனஞ்சயன் வாசுதேவனைப் பார்த்துச் சிரித்துப் பதில் சொன்னான்.

''போஜகடாதிபதியே! எதிரிகளின் பெரிய சேனையைக் கண்டு நான் பயப்படவில்லை. உன்னுடைய சகாயத்தை நான் விரும்பவில்லை. நீ போகலாம், அல்லது இருக்கலாம்'' என்றான்.

கோபமும் வெட்கமும் அடைந்த ருக்மன் தன் சேனையைத் திருப்பிக் கொண்டு உடனே துரியோதனனிடம் போனான்.

''பாண்டவர்கள் என்னை மறுத்தார்கள். உனக்குச் சகாயம் செய்வேன்'' என்று துரியோதனனிடம் சொன்னான்.

''பாண்டவர்கள் வேண்டாம் என்று சொன்னபின் அல்லவா என்னிடம் வந்தாய்? அவர்கள் நீக்கிவிட்ட பண்டத்தை எடுத்துக் கொள்ளும்படியான அவசியம் எனக்கு நேரவில்லை'' என்று துரியோதனனும் சொல்லி விட்டான்! இரு தரப்பிலும் அவமானப்பட்ட ருக்மன் யுத்தத்தில் சேராமல் பின் தன் நாட்டுக்குத் திரும்பினான்.

யுத்தத்தில் சேராமலிருப்பதிலும் பல விதம் உண்டு. சாத்விக காரணங்களாகவும் இருக்கலாம். ரஜோ குணங்கள் - அதாவது அகம்பாவம், சுயநலம் முதலிய காரணங்களாகவும் இருக்கலாம். சோம்பல், பயம் முதலிய காரணங்களாகவும் இருக்கலாம். பலராமன் பாரத யுத்தத்தில் சேராத காரணம் சாத்விகம். ருக்மன் சேராததற்குக் காரணமோ அவனுடைய ரஜோகுணம். தருமத்தை ஆராய்ந்து எது செய்ய வேண்டும் என்று தோன்றுகிறதோ, அதைச் செய்யாமல் தன் பெருமையையே லட்சியமாகக்கொண்டு ருக்மன் அவமானப்பட்டான்.

62. ஒத்துழையாமை

யுத்தம் ஆரம்பிப்பதற்கு முதல் நாள் பீஷ்மர் துரியோதனனுக்குத் தைரியம் சொல்லிக் கொண்டிருந்தார். அவனுக்காகப் போர் செய்யப் போகும் வீரர்களுடைய திறமையையும் குணங்களையும் எடுத்துக்காட்டித் துரியோதனனுக்கு உற்சாகம் ஊட்டி வந்தார். கர்ணனைப் பற்றிப் பேச்சு வந்தது.

''உன்னுடைய பிரியத்தைச் சம்பாதித்தவனும், உனக்குப் பாண்டவர்கள் பேரில் பகையை வளர்த்து வருபவனும், தன்னைப் புகழ்ந்து கொண்டிருப்பதிலேயே சந்தோஷப்படுகிறவனும், அகங்காரத்திற்கு வரம்பு தெரியாதவனுமான கர்ணனை நான் அதிகமாக மதிக்கவில்லை. இவனை நான் அதிரதர்கள் கணக்கில் சேர்க்கமாட்டேன். இவன் பிறரை நிந்திக்கும் சுபாவம் கொண்டவன். தவிர இவன் தன்னுடைய பிறவிச் சம்பத்தான கவச குண்டலங்களை இழந்துவிட்டிருக்கிறபடியால் நம்முடைய யுத்தத்தில் அதிகமாக உதவச் சக்தியற்றவன். பரசுராமருடைய சாபத்தினால் அபத்து காலத்தில் இவன் நினைவை இழந்து விட்டுப் பரிதவிப்பான். அருச்சுனனோடு செய்யப் போகும் யுத்தத்தில் இவன் உயிருடன் மீளமாட்டான்.'' இவ்வாறு பீஷ்மர் உள்ளதை உள்ளது போல் துரியோதனனுக்கும் கர்ணனுக்கும் மிகவும் அப்பிரியமான வார்த்தைகளைச் சொன்னார்.

துரோணரும் அதையே ஆமோதித்து, ''இவன் கர்வம் கொண்டவன். விஷயங்களைக் கவனிக்கமாட்டான். அஜாக்கிரதையால் தோல்வி அடைவான்'' என்றார்.

கடுமையான இந்தச் சொற்களைக் கேட்டுக் கொண்டு வந்த கர்ணன்

கோபம் கொண்டு கண்கள் சிவந்து பீஷ்மரைப் பார்த்துப் பேசலானான்:

''பிதாமகரே! ஒரு குற்றமும் செய்யாத என்னை நீர் எப்போதும் அவமதித்து வருகிறீர். துவேஷத்தினாலும் பொறாமையினாலும் சொல்லம்புகளினாலும் அடிக்கடி இவ்விதம் என்னைக் குத்துகிறீர். துரியோதனனுக்காக அவற்றை யெல்லாம் பொறுத்து வந்தேன். யுத்தத்தில் நான் அதிகமாக உதவமாட்டேன் என்று சொன்னீர். என்னுடைய நிச்சயமான அபிப்பிராயத்தைக் கேளும். நீர்தான் உதவமாட்டீர். பொய் சொல்ல வேண்டாம். உங்களுக்குக் கௌரவர்கள் மேல் அன்பு கிடையாது. அரசனுக்கு இது தெரியாது. உம்முடைய துவேஷத்தினால் துரியோதனனுக்கு என் மேல் உண்டாயிருக்கும் பிரியத்தைக் கெடுக்கப் பார்க்கிறீர். நண்பர்களுக்குள் பேதத்தை உண்டாக்குவதற்காக என்னுடைய உண்மையான பராக்கிரமத்தைக் குறைத்துச் சொல்லியும் நிந்தித்தும் வருகிறீர். உம்மைப் போல் எவனும் இவ்வித அக்கிரமத்தைச் செய்ய மாட்டான். க்ஷத்திரியர்களுக்கு முதுமையால் மட்டும் கௌரவம் இல்லை. பலத்தினால்தான் மதிப்பு உண்டாகும். துரியோதனனுக்கும் எனக்கும் உள்ள சிநேகிதத்தைக் கெடுக்க முயற்சி செய்ய வேண்டாம்.'' இவ்வாறு பீஷ்மரை நிந்தித்துத் தாக்கினான்.

பிறகு துரியோதனனைப் பார்த்து, ''வீரனே! நன்றாக ஆலோசித்து உன் நன்மையைத் தேடிக் கொள். இந்தப் பீஷ்மரை நீ நம்பாதே! நம்முடைய போர் வீரர்களுக்குள் பேதம் விளைவிக்க இவர் பார்க்கிறார். என்னைப்பற்றி இவர் சொன்னது உன்னுடைய காரியத்துக்கு இடையூறு விளைவிக்கும். தேஜோ பங்கம் செய்து என்னுடைய உற்சாகத்தை அழித்துவிடப் பார்க்கிறார். இவருடைய மூளை வயதினால் தளர்ந்து விட்டிருக்கிறது. இவர் இறக்கும் தருணம் வந்து விட்டது. இவருக்கு அகம்பாவம் அதிகம். உலகத்தில் வேறு ஒருவரையும் இவர் மதிக்கிறதில்லை. முதியோர்களுடைய ஆலோசனையை அவசியம் கேட்க வேண்டியதுதான். ஆனால் சாஸ்திரத்தின்படி முதுமைக்கும் ஒரு வரம்பு உண்டு. மறுபடியும் இரண்டாம் பாலபருவம் அடைந்து விட்ட இத்தகைய முதுமை ஒன்றுக்கும் உதவ மாட்டாது. இவரைச் சேனாபதியாகச் செய்தாய். மற்றவர்கள் செய்யும் வீரச் செயல்களைக் கொண்டு இவர் புகழ் சம்பாதிப்பார். நான் இவருடைய தலைமையில் நடக்கும் யுத்தத்தில் ஆயுதப் பிரயோகம் செய்யமாட்டேன். பீஷ்மர் விழ்ந்த பின்னரே நான் ஆயுத மெடுப்பேன்'' என்றான்.

அகம்பாவம் கொண்ட மனிதனுக்குத் தன் அகம்பாவம் தனக்குத் தெரியாது. அதை எடுத்துச் சொல்லும் மனிதனை அகம்பாவம் கொண்டவனாகக் கருதுவான். குற்றத்தை எடுத்துக் காட்டுவதே பெருங் குற்றமாக அவனுக்குத் தோன்றும். இந்த கர்ண — பீஷ்ம சம்பாஷணையில் இது நன்றாக எடுத்துக் காட்டப்படுகிறது.

பீஷ்மர், ''சூதபுத்திரனே! மிக்க நெருக்கடியான காலமாக இருக்கிறபடியால் உன் தகாத வார்த்தையையும் நான் பொறுத்துக் கொள்ளுகிறேன். அதனால் நீ உயிருடன் இருக்கிறாய். துவேஷ புத்தி கொண்ட உன்னைக் கௌரவர்கள் அடைந்த படியால் அவர்களுக்கு இந்தப் பெரிய கஷ்டம் நேரிட்டது'' என்று சொல்லி விட்டுத் தம் கோபத்தை அடக்கிக் கொண்டார்.

துரியோதனன், ''காங்கேயரே! உங்களிருவரிடமும் நான் உதவி பெற வேண்டியவனாக இருக்கிறேன். இருவரும் பெரிய வீரச் செயல்களைச் செய்யப் போகிறீர்கள். விடிந்தவுடன் யுத்தம் நடக்கப் போகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் கலகம் வேண்டாம்'' என்றான்.

பீஷ்மர் சேனாதிபதியாக இருக்கும் வரையில் ஆயுதம் எடுக்க மாட்டேன் என்று கர்ணன் பிடிவாதமாகச் சொல்லி விட்டான். துரியோதனனும் அதை ஒப்புக்கொண்டு அவ்வாறே கர்ணனுடைய சபதம் நடைபெற்றது. இந்தக் காரணத்தினால் பாரத யுத்தத்தில், முதல் பத்து நாட்களில் நடந்த போரில் கர்ணன் சேர்ந்து கொள்ள வில்லை. தன்னுடைய சேனையை மட்டும் யுத்தத்தில் ஏவினான். பத்து நாட்கள் தீர்ந்தது. பீஷ்மர் உடம்பெல்லாம் அம்புகள் பாய்ந்து யுத்த களத்தில் வீழ்ந்த பின் அவரிடம் கர்ணன் வந்து பணிந்து தன் பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு பீஷ்மருடைய ஆசீர்வாதத்தையும் பெற்றான். பிறகு கர்ணனே பிரேரேபித்துச் சொல்லி துரோணரைச் சேனாதிபதியாக அபிஷேகம் செய்தார்கள். அப்போது கர்ணன் யுத்தத்தில் சேர்ந்து கொண்டான். துரோணரும் இறந்த பின் கர்ணன் கௌரவர்களின் சேனாதிபதியாகவே அமர்ந்து யுத்தம் நடத்தினான். **(தொடரும்)**



எல்லா சோப்புக்களுமே சுத்தமாகக் கழுவுகின்றன...
இருவகையில்
பலனளிக்கும்
சிந்தால்
ஒரு கிருமி நாசினி
மட்டுமன்றி,
உடம்பிலுள்ள
துர் நாற்றத்தையும்
அகற்றுகிறது
ஆனால், மாசற்ற மேனி எழிலைப்
பெற தேவைப் படுவது
ஜி-11 கொண்ட சிந்தால் சோப்பு தான்
சிந்தால் சோப்பிலுள்ள ஜி-11 (ஹெக்ஸாக்குளோரோஃபீன்)
சருமக் களங்கங்களை உண்டுபண்ணும் கொடிய
கிருமிகளை அழித்து விடுகிறது. நறுமணமளிக்கும்
ஜி-11 கொண்ட சிந்தால் சோப், உங்கள் சருமத்திற்கு
மழமழப்பையும் காந்தியையும் அளிக்கிறது.
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
INTERPUB GCS 9A-TAM


007 பாலு
2
கதை: குமரன்
படம்: விஜயா
பாலு ஜேப்படித் திருடனைத் துரத்திக் கொண்டு ஓடிய அன்று சந்திராவுக்கும் ஓர் அனுபவம். பாலு வசிக்கும் வீட்டிலிருந்து நாலு தெருக்கள் தள்ளிச் சந்திரா வாழ்ந்தாள். ஏழைக் குடும்பம். மாடி போர்ஷனில் வசித்தனர்.
போஸ்ட்! சந்திரா! இந்தா உனக்கு ஒரு கடிதாசு வந்திருக்கு இன்னைக்கு.
121, வஜ்ரவேல் முதலி தெருவில் சந்திக்கவும் நாளை 29.8.68 மாலை 6 மணி
இது என்ன ஒன்றும் புரியலியே? கையெழுத்துக் கூட காணோம்? ஒரு வேளை....
தபால் உறையின் விலாசத்தைப் பார்க்கிறாள்.
அடடே! இது சந்திரன் மாமாவுக்குன்னு வந்திருக்கு? 44 என்ற வீட்டு நம்பரை எந்தப் புத்திசாலியோ 66 போல எழுதியிருக்கிறான். சந்திரனுக்குப் போக வேண்டிய கடிதாசு சந்திராவிடம் வந்து விட்டது.
சில நிமிஷங்களுக்குப் பின்.....
சந்திரன் மாமா! சந்திரன் மாமா!
வேடிக்கையைப் பார்த்தீர்களா? உங்களிடம் தரவேண்டிய கடிதாசைத் தபால்காரர் என்னிடம் கொடுத்து விட்டார். நம்ம பெயர்களில் அப்படி ஒரு பொருத்தம்!


கடிதத்தைப் படித்த சந்திரன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.
தபால்காரன்தான் புத்தி கெட்டுப் போய்க் கொடுத்தானென்றால் நீ ஏன் பிரித்துப் படித்தாய்? சனியன்!
இப்போ என்ன மாமா குடி முழுகிப் போய் விட்டது? ஏன் இப்படிச் சள்ளென்று விழுகிறாய்?
உதை! ராஸ்கல்! பிறர் கடிதத்தைப் படித்து விட்டு எதிர்த்தும் பேசுகிறாயா? சீ போ, இங்கேயிருந்து!
சந்திரா வருத்தத்துடன் வீடு திரும்பினாள். அதே தினம் மாலையில் பாபு சிந்தனையில் ஆழ்ந்து வீடு திரும்பினான்.
பாபுவின் அப்பா சுந்தரேசன் கவலையுடன் காத்திருந்தார்.
ஏன்டா இவ்வளவு நேரம் பள்ளிக்கூடம் விட்டு வருவதற்கு?
பாபு நடந்தவற்றையெல்லாம் விவரித்தான்.
உன்னையார் அந்தத் திருடனைத் துரத்திக் கொண்டு ஓடச் சொன்னது? பத்து ரூபாய்தானே! போனால் போகட்டும் என்று நேரே வீட்டுக்கு வந்து சேரக் கூடாது?
ரூபாய் பெரிய விஷயமில்லை, அப்பா! ஆனால் ஓர் அக்கிரமத்தை எதிர்த்துப் போராடாமல் இருப்பவன் ஆண்மை இல்லையா?
அந்த ஆள் திருடியவுடன் மறைந்ததில் ஏதோ மர்மம் இருக்கு அப்பா?
போடா இடியட்! ஏகப்பட்ட ஜேம்ஸ் பாண்ட் நாவல்களைப் படிக்கிறதனாலே உனக்குக் கற்பனை கொடி கட்டிப் பறக்கிறது!
இந்தச் சமயத்தில் மோட்டார் சைக்கிளில் ஒருவன் வேகமாக வருகிறான்.
தொடரும்....

ஓட்டுப் பதிவுக்கு ஓர் இயந்திரம்!

பண்டைக் காலம் முதல் மக்கள் பொது விவகாரங்களில் தங்களது அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கு வாக்கெடுப்பு முறையைக் கையாண்டு வந்திருப்பதாகச் சரித்திரம் கூறுகிறது. இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கி. மு. 139ம் ஆண்டில் ரோமானியர்கள் அரசியலில் இரகசிய வாக்கெடுப்பு முறைகளைக் கையாண்டு வந்திருக்கின்றனர். கிரேக்க நாட்டின் அட்டிகா —இந்நாளைய ஏதென்ஸ் — பிராந்தியத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்குக் குரல் கொடுத்துத் தங்கள் வோட்டுக்களைப் பதிவு செய்யும் முறையைக் கையாண்டு வந்தார்கள். அவர்கள், எல்லோராலும் வெறுக்கப்பட்ட பொதுஜன விரோதி ஒருவரை தேசப் பிரஷ்டம் செய்வது பற்றிய தமது அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கு இரகசிய வாக்கெடுப்பு முறையைக் கையாள விரும்பினர். அதற்கென, அவர்கள் ஒவ்வொருவரும் தமது முடிவை ஒரு சிறு உடைந்த மண் சட்டித் துண்டின் மீது எழுதித் தெரிவித்தார்கள். கிரேக்க நாட்டு நீதி மன்றங்களில் நீதிபதிகள் தங்கள் இரகசிய வோட்டுக்களைப் பதிவு செய்வதற்குக் கற்களையும், பல வர்ணப் பந்துகளையும் குறியிடப்பட்ட கிளிஞ்சல்களையும் உபயோகித்து வந்தார்கள்.

இதுபோன்று அந்நாளைய அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் மக்கள் தேர்தல்களில் வர்ணப் பந்துகளையும் துப்பாக்கித் தோட்டாக்களையும், கோதுமை, பட்டாணி முதலிய தானிய வகைகளையும் உபயோகித்ததாகக் கூறப்படுகிறது.

முதன் முதலில் 1629ம் ஆண்டு மாஸாசூஸெட்ஸ் பகுதியில் உள்ள அமெரிக்க மக்கள் ஓர் அமைச்சரைத் தேர்ந்தெடுப்பதற்குக் காகிதத்தாலான ''வோட்டுச் சீட்டுகளை'' உபயோகித்ததாகத் தெரிகிறது. தொடர்ந்து 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தேர்தல் சமயத்தில் பல அரசியல் கட்சிகள் கண்ணைக் கவரும் பல வர்ணங்களில் வோட்டுச் சீட்டுகளைத் தயாரித்து வாக்காளர்களுக்கு விநியோகித்தனர். எளிதில் கண்டறியக் கூடிய வெவ்வேறு வர்ணமுள்ள வோட்டுச் சீட்டுக்களின் காரணமாக, வாக்கெடுப்பு இரகசிய முறையில் நடந்ததாகக் கருதப்படவில்லை.

1856ம் ஆண்டு ஆஸ்திரேலியா தேசத்தில் காகிதத்தாலான வோட்டுச் சீட்டுகள் உபயோகத்தில் கொண்டு வரப்பட்டன. இப்போதுதான் முதன்முதலாகத் தேர்தல்களில் அரசாங்கக் கண்காணிப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட வர்ணமில்லாத காகிதத்தாலான வோட்டுச் சீட்டுகள் அச்சிடப்பட்டு மக்களுக்கு அளிக்கப்பட்டன.


காகிதத்தாலான வோட்டுச் சீட்டுக்களை உபயோகிப்பதில் பலவிதக் குறைபாடுகள் உண்டு. வோட்டுச் சீட்டுக்களைத் தயாரித்து, கணக்கிட்டு, தேர்தல் விடுதிகளுக்கு விநியோகிப்பதில் உள்ள இடைஞ்சல்கள் பல. இவற்றில் தீவிரக் கண்காணிப்பு மிக அவசியம். தவிர தேர்தல் முடிந்தவுடன் அவற்றை எண்ணி, வெற்றி பெறுபவரை நிச்சயிப்பதில் ஏற்படும் கால தாமதம் யாவரும் அறிந்ததே. அதுவும் வோட்டுக்களின் எண்ணிக்கையில் ஏதேனும் சிறிது வித்தியாசமோ அல்லது சந்தேகமோ ஏற்பட்டால் தோல்வியடைந்த அபேட்சகர் மற்றுமொரு முறை அவற்றை எண்ணச் செய்வது எல்லா நாடுகளிலும் ஏற்படும் அனுபவம்தான். சில சமயம் கணக்கிடில் மோசடி நடப்பதாகக் குற்றம் சாட்டுவதும் உண்டு. இவை எல்லாவற்றையும்விடத் தேர்தலுக்குத் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கையும், பணச் செலவும் மிக அதிகம்.

ஒரே சமயத்தில் நான்கு வாக்கெடுப்பு இயந்திரங்கள் இயங்குகின்றன.


வாக்காளரின் வோட்டுப் பதிவானவுடன் தேர்தல் அதிகாரி விசையை இயக்குகிறார்.







வோட்டுப் பதிவுக்குத் தயாராகிறார் ஒரு வாக்காளர்.



வோட்டுப் பதிவாகிறது.

இதையறிந்த மேல் நாட்டினர் வோட்டுக்களைப் பதிவு செய்வதை எளிதாக்கும் முறைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாயினர்.

கடந்த 1869ம் ஆண்டு அமெரிக்க நிபுணர் தாமஸ் ஆல்வா எடிசன் ''எலக்ட்ரோகிராபிக் வோட் ரிகார்டர்'' என்ற வோட்டுப் பதிவு செய்யும் இயந்திரம் ஒன்றைக் கண்டு பிடித்து அதற்கான பிரத்தியேக உரிமைப் பத்திரத்தையும் (பேடண்ட்) பெற்றார். இந்த இயந்திரம் முதலில் அமெரிக்கச் சட்டசபைத் தீர்மானங்களில் அங்கத்தினர்கள் தமது வோட்டுக்களைப் பதிவு செய்வதற்கென உபயோகப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து மேலும் பல அமெரிக்க நிபுணர்களும் பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளரும் சில வோட்டுப் பதிவு செய்யும் இயந்திரங்களை உருவாக்கினர்.

இவ்வாறு முதலில் தோன்றிய வாக்கெடுப்பு இயந்திரங்களில் மக்கள் வோட்டுச் சீட்டுக்குப் பதிலாக பல வர்ணப் பந்துகளை அதற்கென அமைக்கப்பட்ட பிரத்தியேகப் பகுதிகளில் இட்டுத் தமது வோட்டுக்களைப் பதிவு செய்தனர். இந்த இயந்திரங்களினால் விசேஷ அனுகூலம் எதுவும் ஏற்படவில்லை. காரணம் வோட்டுக்களைப் பதிவு செய்ய இயந்திரங்களை உபயோகித்தும், தேர்தல் முடிந்தவுடன் பல்வேறு வர்ணப் பந்துகளை நீண்ட நேரம் எண்ண வேண்டியிருந்ததுதான்.

இதற்குப் பின் தோன்றிய வாக்கெடுப்பு இயந்திரங்களை உருவாக்கிய நிபுணர்கள் அவற்றில் வோட்டுக்களைக் கணக்கிட்டு விரைவாக முடிவைத் தெரிவிக்கும் விசேஷ விசைகளை அமைத்தனர். இவ்வாறு பல வசதிகளுடன் கூடிய வாக்கெடுப்பு இயந்திரங்களில் முதலாவதாகத் தோன்றிய இயந்திரம் 1892ம் ஆண்டு நியூயார்க் மாநிலத்தில் லாக்போர்ட் என்ற இடத்தில் உபயோகப் படுத்தப்பட்ட ''மெயர்ஸ் பாலட் மிஷின்'' என்பதாகும்.

தற்சமயம் உபயோகத்திலிருந்து வரும் வாக்கெடுப்பு இயந்திரங்கள் சாதாரணமாக, ஆறடி உயரமும், மூன்றரை அடி அகலமும் உள்ளன. அவை மின்சாரத்தால் இயங்குகின்றன. மின்சாரத் தடை ஏற்பட்டால் இயந்திரம் இயங்குவதற்கெனக் கையால் இயங்கும் விசைகளும் அவற்றில் உண்டு.

வருகிற நவம்பர் மாதம் அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் தேர்தலில் மக்கள் தங்கள் ஜனாதிபதி, உப ஜனாதிபதி, மற்றும் பல பார்லிமெண்ட் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க இருக்கிறார்கள். இத்தேர்தலில் சுமார் ஏழரைக் கோடி மக்கள் தங்கள் வோட்டுக்களைப் பதிவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் பெரும்பாலோர் தங்கள் வோட்டுக்களைப் பதிவு செய்ய இயந்திரங்களையே உபயோகிப்பர்.

வாக்கெடுப்பு இயந்திரம் எப்படி இயங்குகிறது பார்ப்போம். வாக்காளர் அருகில் சென்று ஒரு விசையை இயக்கியவுடன் இயந்திரத்திலுள்ள விசைத் திரை தானாகவே மூடிக் கொள்கிறது. இயந்திரத்தில் வெவ்வேறு பகுதிகளுக்குப் போட்டியிடும் அபேட்சகர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கும். வாக்காளர் தாம் விரும்பும் அபேட்சகரின் பெயருக்கெதிரேயுள்ள விசையைக் கீழ்நோக்கி இழுக்க வேண்டும். வாக்காளர் தமது விருப்பத்தை மாற்றிக் கொள்ள விரும்பினால், உடனே அவர் அந்த விசையை மறுபடி மேல் நோக்கி, நடு நிலைக்குத் தள்ளிவிட்டுத் தான் விரும்பும் அபேட்சகரின் விசையைக் கீழ் நோக்கி இழுக்க வேண்டும். இவ்வாறு பல்வேறு பதவிகளுக்குப் போட்டியிடும் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கான விசைகளைக் கீழ் நோக்கி இழுத்தவுடன் கடைசியாக மற்றொரு விசையையும் அவர் இயக்குகிறார். இதன் காரணமாக அனைவரது வோட்டுக்களும் பதிவாகின்றன. அதே சமயம் எல்லா அபேட்சகர்களின் பெயருக்கும் எதிரேயுள்ள விசைகளனைத்தும் நடுநிலைக்கு வந்துவிடுகின்றன. தவிர இயந்திர முகப்பை மூடியிருக்கும் திரை விலகி வாக்காளர் வெளியே வர இயலுகிறது.

இவ்வாறு ஒரு வாக்காளர் தமது வோட்டுக்களைப் பதிவு செய்ய மொத்தம் ஒரு நிமிடத்துக்கு மேல் பிடிப்பதில்லை.

வாக்கெடுப்பு இயந்திரங்களில் வாக்காளர் ஒரு பதவிக்கு ஒரு அபேட்சகரது விசையைத்தான் இயக்க முடியும். மற்றும் திரையிட்டிருப்பதாலும், திரை விலகியவுடன் எல்லா விசைகளும் நடுநிலைமைக்கு வந்து விடுவதன் காரணத்தாலும் வாக்கெடுப்பு இரகசிய முறையில் நடைபெற இவ்வியந்திரங்கள் வகை செய்கின்றன.

வாக்கெடுப்பு இயந்திரங்களில் ஒவ்வொரு அபேட்சகரின் பெயருக்கும் எதிரே ஒரு சிறு ''கம்ப்யூடர்'' (கணக்கிடும் சாதனம்) அமைக்கப்பட்டுள்ளது. வாக்காளர் ஒரு அபேட்சகரது விசையைத் தள்ளியவுடன் அவரது வோட்டின் எண்ணிக்கை அதில் பதிவு செய்யப்படுகிறது. ஆனால் பதிவு செய்யப்பட்டிருக்கும் வோட்டுக்களின் எண்ணிக்கை தேர்தல் முடியும்வரை மற்றவர்களுக்குத் தெரியாமல் இருக்கும் பொருட்டு ''கம்ப்யூடரை'' ஒரு சிறு உலோகத் தகடு மூடியிருக்கும். வாக்கெடுப்பு முடிந்தவுடன் தேர்தல் அதிகாரிகள் பிரத்தியேகச் சாவிகளைக் கொண்டு அந்த உலோகத் தகட்டை அகற்றி விடுகின்றனர். பின்னர் ஒவ்வொரு அபேட்சகருக்கும் கிடைத்துள்ள வோட்டுக்களின் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது.

அமெரிக்காவில் இயங்கி வரும் வாக்கெடுப்பு இயந்திரங்கள் மோசடிக்கு இடம் இல்லாதபடி அமைந்திருக்கின்றன.

தவிர தேர்தல் அதிகாரிகள் இயக்குவதற்கென்று ஒரு விசையும் இவ்வியந்திரத்தில் உள்ளது. ஒவ்வொரு வாக்காளரும் தம் வோட்டுக்களைப் பதிவு செய்த பின்னர் தேர்தல் அதிகாரி அந்த விசையை இயக்கினாலன்றி அடுத்த வாக்காளர் தம் வோட்டைப் பதிவு செய்ய இயலாது.

அமெரிக்காவில் சாதாரணமாக ஒரு வாக்கெடுப்பு முடிந்தவுடன் இந்த இயந்திரங்கள் அவை தெரிவிக்கும் முடிவுகள் அகற்றப்படாமல் 30 நாட்களுக்கு அதிகாரிகள் கண்காணிப்பில் பூட்டி வைக்கப்படுகின்றன. ஒருவேளை மற்றுமொருமுறை வோட்டுக்களை கணக்கிட வேண்டியிருந்தால் அதற்கு வகை செய்யமுடியும்என்பதுதான் இதற்குகாரணம்.

பல விசைகளுடன் கூடிய ஒவ்வொரு வாக்கெடுப்பு இயந்திரமும் 1800 டாலர்கள் (சுமார் 13500 ரூபாய்) விலை மதிப்புள்ளது. சாதாரணமாக 40 வருடகாலம் தடங்கலின்றி இயங்கும். இவற்றைப் பராமரிப்பதில் ஏற்படும் செலவும் அதிகமில்லை. தவிர தேர்தல் கூடத்தில் இரண்டு கண்காணிப்பு அதிகாரிகளும் ஒரு துணை அதிகாரியுமே தேவைப்படுகின்றனர். தேர்தல் முடிந்து சில மணி நேரத்துக்குள் முடிவுகள் வெளியாக இவை வகை செய்கின்றன.

அமெரிக்காவின் மாநில, மாவட்ட அரசாங்கங்கள் இந்த இயந்திரங்களை வாங்கி, பொதுஜனங்கள் ஈடுபடும் பலவித தேர்தல்களுக்கு உதவியாக வாடகைக்குத் தருகின்றன. இதன் காரணமாக சில ஆண்டுகளுக்குள் அவற்றின் விலை மக்களிடமிருந்தே வசூலிக்கப்பட்டு விடுகிறது.

இவ்வாறு அமெரிக்காவில் இயங்கி வரும் வாக்கெடுப்பு இயந்திரங்களின் எண்ணிக்கை ஒன்றரை லட்சத்துக்கு மேலாகும். இவற்றின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

— ஜனார்த்தனன்



தேர்தல் கோலம்.....!



★

□ சென்னை நகரசபைத் தேர்தல் நெருங்கி வருவதைப் பற்றி ஒரு டாக்டர்:

சமீபத்தில் சென்னை நகரைப் பிடித்து ஆட்டிற்று ப்ளூ ஜுரம். அது மறைந்த பின் இப்போது மீண்டும் ஒரு ஜுரம் பிடித்துக் கொண்டிருக்கிறது. அதுதான் ஐயா தேர்தல் ஜுரம்!

ஃ ஃ ஃ

□ தேர்தல் கூட்டத்தில் ஒரு வேட்பாளர் பேசிக் கொண்டிருந்தார்:

''அவையோர்களே! என்னைத் தேர்வு செய்து நகர சபைக்கு அனுப்பினால், முக்கியமாக இந்தப் பேட்டையில் தொல்லை கொடுக்கும் கொசுக்களை ஒழிப்பேன். கொசுக்களை ஒழிப்பதற்கு முதல் நடவடிக்கையாகச் சாக்கடைத் திட்டத்தைத் துரிதமாகக் கொண்டு வரப் பாடுபடுவேன். ஆகையால், என்னையே தேர்ந்தெடுக்க வேண்டும்.''

கூட்டத்தில் ஒரு குரல்: ''முடியாது!''

வேட்பாளர்: ''முடியாதா? யார் அப்படிக் குரல் கொடுப்பது?''

ஒரு குரல்: '' இது தெரியவில்லையா ? கொசுக்கள்தான்! 'முடியாது! முடியாது! எங்களை ஒழிக்க ஒருவராலும் முடியாது' என்றுதான் அவை சொல்லுகின்றன!

ஃ ஃ ஃ

□ ஒரு வேட்பாளர் சொற்பொழிவு ஆற்றத் தொடங்கிய வேளையில் அவர் நாவில் சனி புகுந்து கொண்டு விட்டது. அவர் சொன்னார்:

வாக்காளப் பெரு மக்களே! 'எனக்கே வோட்டுப் போடுங்கள்' என்று கரம் கூப்பிக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்காக நான் அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்று தேர்தல் கால வாக்குறுதிகளைத் தர நான் விரும்பவில்லை. என்னால் எதையும் பிரமாதமாகச் செய்து கிழித்துவிட முடியாது. அப்படியானால் நான் ஏன் தேர்தலுக்கு நிற்க வேண்டும் என்று கேட்கிறீர்களா? எனக்கும் இரண்டு வீடு கட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இருக்காதா? குறுக்கு வழியில் பணம் பண்ண வேண்டும் என்ற ஆசை இருக்காதா? ஆகவே, வாக்காளப் பெரு மக்களே! உங்கள் மேலான வோட்டுக்களை எனக்கே போட்டு ஆதரியுங்கள்! **— கொக்கி**



முன்னேற விரும்பும் மனிதர்களுக்கு ஒரு அரிய யோசனை
MAFATLAL GROUP
உங்களைப் பற்றி ஒரு காவியமே பாடுகிறது உங்கள் உடைகள். இதோ, உண்மையிலேயே உங்களை உயர்த்தக் கூடிய ஒரு ஷர்ட். உங்களுடைய சுவையின் உயர்வை அது உலகுக்குப் பறை சாற்றுகிறது. (தனித்தன்மையான கட்டமிட்ட 'செக்' துணிகள்.) உங்கள் தனி விருப்பத்திற்கு எடுத்துக் காட்டு. (ஷர்ட்டின் மதிப்புக் குறையாத தன்மை) உங்கள் வளமையை அது சொல்லாமல் சொல்லும். (உயர்வான அதன் செலவோ விலையைப் பற்றி ஏதுவுமே கூறாது.) யோசனை புரிகிறதா? உங்கள் ஷர்ட்டுகள் மபத்லால் க்ரூப் துணிகளால் மட்டுமே உருவாகட்டும்!
மபத்லால் க்ரூப்
பாப்லின்களும் ஷர்ட்டிங்குகளும்
காட்டன், 'டெரீன்'/ காட்டன் 2x2 'டெரீன்'/ காட்டன் பிரின்டெட், டெபிலேஸ்டு, மபினோஸ்டு & ஸ்ட்ரெட்ச் தரங்கள்
M.379 TM
நியூ ஷொராக், (ஷொராக்) அகமதாபாத் . நியூ ஷொராக், நாடியாத் . ஸ்டாண்டர்டு, பம்பாய் . ஸ்டாண்டர்ட், (நியூ சைனு) பம்பாய் . ஸ்டாண்டர்ட், தேவாஸ் . ஸாஸூன், பம்பாய் . ஸாஸூன் (நியூ யூனியன்) பம்பாய். ஸூரத்காட்டன், ஸூரத் . மபத்லால்பைன், நவ்ஸாரி . மிஹிர் டெக்ஸ்டைல்ஸ், அகமதாபாத்.

கிளிஞ்சல் கோபுரம்

அத்தியாயம் இரண்டு

கண் சுவைத்த காட்சி

சென்ட்ரல் ஸ்டேஷன் கோபுரக் கடிகாரம் ஓர் இன்னிசைக் கோலத்துடன் டங்கார ஓசையொன்றை முழக்கிவிட்டு ஓய்ந்தது.

பெங்களூர் ரயில் புறப்பட்டுச் சென்றதும் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்த முத்துசிவன் வாசல் வராந்தாவிலேயே நின்று எதிரே ஜெனரல் ஆஸ்பத்திரி பஸ் நிலையத்தைப் பார்த்தான். அவனுக்கு முன்னால் சென்றுவிட்ட தில்லைநாதனும், ஜானகியும், லதாவும் அங்கே பஸ்ஸுக்காகக் காத்து நிற்பது தெரிந்தது. அவர்கள் பஸ் கிடைத்துப் போனபின் தான் புறப்படலாம் என்று எண்ணியவனாய் ஓர் எடை காட்டும் யந்திரத்தின் அருகிலிருந்த தூண் ஒன்றில் சாய்ந்தவாறு, அங்கே கண்ணாடி ஷோ கேஸ்களில் விளம்பரத்துக்காக வைக்கப்பட்டிருந்த பொருள்களில் தன் கவனத்தைச் செலுத்தலானான். அவற்றில் ஒரு ஷோ கேஸ் அவனை வெகுவாகக் கவர்ந்தது.

ஆறடி உயரம், மூன்றடி அகலத்துக்கு நிறுத்தப்பட்டிருந்த அந்தக் கண்ணாடிப் பெட்டியில், மஞ்சளும் ஊதாவுமான வெல்வெட் திரைகளைப் பின்னணியாகக் கொண்டு எஃகிலும், செம்பிலும், பித்தளையிலும், எவர் சில்வரிலும் ஆன பலவிதப் பூட்டுக்கள், பல ரகக் கைப் பிடிகள், இராங்குகள், பாட்லாக்குகள், கீல்கள், திருகுக் குமிழ்கள், கொக்கிகள், ஸ்க்ரீன் குழாய்கள், இரும்பு கல்லாப் பெட்டிகள் முதலானவை அழகாகப் பதித்தும் நிறுத்தியும் வைக்கப்பட்டிருந்தன. மெர்க்குரி விளக்குகளின் நீல ஒளியிலே தகதகப்பாக விளங்கிய அவற்றின் நடுவில், வட்ட விசிறி

ஜெயகாந்தன்



போன்ற பளபளப்பான ரேக்குகள் பதித்த சக்கரம் ஒன்று பன்னிற வண்ணங்களை நெளியவிட்டபடி சுழன்று கொண்டிருந்தது. பெட்டியின் மேல் விளிம்பில் 'கனகா இண்டஸ்ட்ரீஸ்' என்று பொறிக்கப் பெற்றிருந்த ஆங்கில எழுத்துக்கள் நியான் லைன் விளக்குகளாக ஒளிர்ந்தன.

முத்துசிவன் அந்த ஷோ கேஸையே சற்று நேரம் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவனையும் அறியாமல் அவனுடைய வாய், 'கனகா இண்டஸ்ட்ரீஸ்... கனகசபை....' என மெல்ல முணு முணுத்தது. எதையோ நினைத்துப் புன்முறுவல் பூத்தவனாய் அங்கிருந்து தன் பார்வையைப் பெயர்த்து, ஸ்டேஷன் எதிரே கார்கள் நிறுத்துவதற்கெனச் சங்கிலி வளைய மிட்டு அமைந்த



இடத்தையும், அதைச் சுற்றி அரை வட்டமாகச் சென்ற பாதையையும் நோக்குவதில் திருப்பினன்.

ஓய்ச்சல் ஒழிவில்லாமல் விரைந்து வந்து கொண்டும், நகர்ந்து போய்க் கொண்டும் இருக்கும் வித விதமான கார்கள், டாக்சிகள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள், ஆட்டோக்கள், ரிக் ஷாக்கள், ஜட்காக்கள், ரயில்வே சிப் பந்திகளின் ட்ராலி வண்டிகள், கை வண்டிகள்; எங்கு திரும்பினலும் பெட்டிகள், படுக்கைகள், மூட்டை முடிச்சுகள், கூடைகள்; பலவிதமான மொழிகள் பேசும் பற்பல இன மக்கள், அவர்களின் பலரகமான நடைஉடை பாவனைகள், அவர்கள் முகங்களிலே நிலவும் பலதரப்பட்ட உணர்ச்சிகள்; அவர்களில் புத்தம் புதிய காதல் ஜோடிகள், புது மணத் தம்பதிகள், எல்லாம் அநுபவித்துக் கழித்துவிட்ட தால் சங்கை கெட்டுப் போன பிள்ளை குட்டிக்காரிகள், வாலிபம் கடந்த குடும்ப ஞானிகள், கேசம் நரைத் தாலும் ஆசை நரைக்காத கிழங் கெட்டுகள், வாழ்வாவது மாயம் மண் ணுவது திண்ணம் என்று க்ஷேத்திராட னம் செய்யப் புறப்பட்ட யாத்ரீ கர்கள், மெய்யாகவும், பொய்யாகவும் காவி தரித்த சாமியார்கள், தெருப் பொறுக்கிகள், சோம்பேறிகள், சிவப் புத் தலைப்பாகையும் நீலச் சொக்கா யும் அணிந்த போர்ட்டர்கள், போலீஸ் காரர்கள், வயிற்றுப்பாட்டுக்கு ஆலாய்ப் பறக்கும் கூலிகள், பிரம்மதேவன் இடது கையால் கிறுக்கிப் போட்ட கேலிச் சித்திரங்கள் போன்ற பிச்சைக் காரர்கள், பெரு நோயாளிகள் ஆகிய இவற்றுடன் — இவர்களுடன் — அந்தப் பட்டப் பகலான நேரத்தில் பார்க்க, தேவர்களும் அசுரர்களும் கூட்டுச் சேர்ந்து நடத்தும் ஓர் அபூர்வ கண் காட்சி சாலை போல் அந்த ரயில்வே நிலையம் விளங்கியது.

புத்தியையும் உணர்ச்சிகளையும் அழற் சிக்குள்ளாக்கி ஒருவித கிறுகிறுப்பை யும் புழுக்கத்தையும் ஏற்படுத்திவிட்ட அந்தக் காட்சிகளை மேலும் பார்த்துக் கொண்டிருக்கப் பிடிக்காமல் பஸ் நிலை யத்துப் பக்கம் பார்வையைச் செலுத் தினன் முத்துசிவன். அங்கே அவ னுடைய தம்பியும், தங்கையும் மைத் துனியும் பஸ் ஏறிப் போய்விட்டிருந் தார்கள்.


'சரி, நானும் புறப்பட வேண்டியது தான்' என்று எண்ணியபடி சற்றுத் தொலைவில் பூட்டி நிறுத்தி வைத் திருந்த தன் ஸ்கூட்டரை நோக்கிச் செல்லக் காலெடுத்த முத்துசிவன், ''கருணு டீச்சர் எங்கே?.... அதோ, வர்ருங்க!'' என்ற குரல் கேட்டுச் சட் டென்று திரும்பிப் பார்த்தான்.

அவன் சாய்ந்து நின்றிருந்த தூணுக் குப் பின்னலிருந்த எடை பார்க்கும் யந்திரத்தைச் சுற்றி மூன்று இளம் பெண்கள் நிற்க, டிக்கெட் கொடுக் கும் இடத்திலிருந்து அப்போதுதான் ஓர் அழகிய பெண்மணி கையில் இரண்டு டிக்கெட்டுகளுடன் வெற்றிப் புன்னகை பூத்தவளாய் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

அவளுக்கு வயது சுமார் முப்பத் திரண்டு இருக்கும். கொஞ்சம் இரட்டை நாடித் தேகமாய் இருந்தாலும் அதற் கேற்ற உயரம் அதை மிகைப்படுத்திக் காட்டவில்லை. நல்ல பத்தரை மாற்றுப் பசும் பொன் நிறம். மூக்கும், மோவா யும், நெற்றியும் செதுக்கி இழைத்தாற் போன்று எடுப்பாக அமைந்திருந்தன. நீள்வட்ட முகத்துக்கேற்ற குவிந்த உதடுகள். அதிக உப்பலோ, அதிக ஒடுக்கலோ இல்லாத — மாசுமறுவற்ற— மழமழப்பான கன்னங்கள். வகிடு எடுக்காமல் தலைவாரிச் சற்றே தூக்கிப் போட்ட சங்குமுறுக்குக் கொண்டை. அழகிய கூலிங் கிளாஸ் அணிந்திருந்த தால் அவளுடைய கண்களைப் பார்க்க இயலாது போனலும் புருவ வளைவின் அமைப்பிலிருந்து அவை கவர்ச்சிகர மாகவே இருக்குமென ஊகிக்க முடிந் தது. ஆழ்ந்த பச்சை நிறக் கொடிகள் ஓடிய ஃபுல் வாயில் புடவையும், ஹகோபா சோளியும், காதில் கற்கள் பதிக்காத பொன் ஸ்டட், கழுத்தில் பார்ட்டி செயின், கையில் ஒரொரு தங்க வளையல் ஆகியவையும் அணிந் திருந்த அவளுடைய நடையில் ஒரு கம்பீரமும் மிடுக்கும் காணப்பட் டாலும் முகத்தில் அமைதியும் பெருந் தன்மையும் இணைந்து நிலவின.

முத்துசிவன் அவளைப் பார்த்ததுமே தன்னை மீறிய பரபரப்புடன் பின்னல் நகர்ந்து தூணில் மறைந்தாற் போல் நின்று கொண்டான். அவன் உடல் குப்பென்று வியர்த்துக் கொட்டியது. தோளில் கிடந்த அங்கவஸ்திரத்தால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு அங்கிருந்து போய்விடக் காலெடுத்தான். பிறகு ஏதோ நினைத்த வனாய் தயங்கி நின்று அந்தப் பெண் ணைக் கூச்சப் புன்னகையுடன் எட்டிப் பார்த்தான்.

ஆனல் அவளோ அவனைக் கவ னித்ததாகத் தெரியவில்லை. தான் வாங்கி வந்த டிக்கெட்டுகளைத் தனது தோளில் தொங்கிய அழகிய சஞ்சியில்



உங்கள்
வீட்டிற்கு மெருகுடன்
கூடிய புத்தொளித்
தோற்றமளிக்க விரும்பினுல்...

...உங்களுக்குத் தேவைப்படுபவை

நெரோலாக்

பெயின்டுகள்

நீங்கள் நெரோலாக் பெயின்டுகளை வாங்கும்போது, பெயின்டுகளில் சிறந்தவற்றையே வாங்குகிறோம் என்ற திருப்தியுடன் வாங்கலாம். நெரோலாக் பெயின்டுகள் வருடக்கணக்கில் உங்கள் வீட்டிற்குப் புத்தொளித் தோற்றத்தைத் தருகின்றன; அவற்றில் விரிசல்கள் விழாது; அவை உரிந்து விழாமலிருக்கும். ஏனெனில் நெரோலாக் பெயின்டுகள் பொறுமை மிக்க கவனத்துடன், உயர்ந்த தரங்களுக்கேற்ப தயாரிக்கப்படுகின்றன; கடுமையான தரக்கட்டுப்பாட்டுச் சோதனைகளுக்குள்ளாகின்றன. இன்றே உங்கள் வீட்டிற்குப் புத்தொளித் தோற்றமளிக்க கிளர்ச்சியூட்டும் பற்பல நிறங்களிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்!

குட்லாஸ் நெரோலாக் பெயின்ட்ஸ் ஒப்பற்ற தரம் வாய்ந்தவை

குட்லாஸ் நெரோலாக் பெயின்ட்ஸ் லிமிடெட் த.பெ. 699, ஃபோர்பஸ் பில்டிங், ஹோம் ஸ்ட்ரீட், பம்பாய்-1.

INTERPUB/GNP/14A TM

குட்லாஸ் நெரோலாக் பெயின்ட்ஸ் லிமிடெட், 29, பெரியண்ண மேஸ்திரி தெரு, சென்னை-1

வைத்தவாறு தன் தோழிகளிடம் பேச ஆரம்பித்து விட்டாள்.

''நாம் வந்த நேரம் நல்ல நேரம். ரிஸர்வேஷன் கிடைச்சுட்டது.''

''ஆச்சரியம்தான் டீச்சர்! நாளைய சதர்ன் எக்ஸ்பிரஸுக்கு இன்று ரிஸர் வேஷன் கிடைக்கிறது ஆச்சரியமில்லையா?'' என்றாள் மூன்று இளம் பெண்களில் ஒருத்தி.

''ஆமாம்; பதினைஞ்சு நாட்களுக்கு முன்னாலே வந்தால்கூடக் கிடைக்காதுன்னு நம்ம ஹெட்மிஸ்ட்ரஸே சொன்னாங்க!'' என்றாள் மற்றொருத்தி.

'''கனகா இண்டஸ்ட்ரீஸ் ஒனருடைய டாட்டர்'னு கருணா டீச்சர் தன்னை அறிமுகப்படுத்திக்கிட்டுக் கேட்டிருப்பாங்க; அதான் கிடைச்சிருக்கு! இது தெரிஞ்சுதான் ஹெட்மிஸ்ட்ரஸும் இவங்களை அனுப்பியிருக்கிறார்!'' என்றாள் இன்னொருத்தி, அருகிலிருந்த அந்தப் பூட்டு நிறுவனத்தின் விளம்பரக் கண்ணாடிப் பெட்டியைப் புன் முறுவலுடன் பார்த்தவாறு.

அம்மூன்று பெண்களும் மாணவிகள் அல்ல, ஆசிரியைகள் என்பதற்கு அவர்களுடைய உடையும், தலை அலங்காரமும், கைக் குடையும் சாட்சி கூறின.

''அதெல்லாம் இல்லை!'' என்று சொல்லி எழில் வழியச் சிரித்தாள் கருணா என்ற அந்தப் பெண்மணி. ''நான் போன நேரத்துக்கு யாரோ ஒருவர் வந்து தாம் வாங்கியிருந்த ரிஸர்வேஷன் டிக்கெட்டைக் 'கான்ஸல்' செய்து விட்டார். அந்த இடம் எனக்குத் தரப்பட்டது. அவ்வளவுதான்.''

''அதனால்தான் நாம் வந்த நேரம் நல்ல நேரம்னு சொன்னீங்களா, டீச்சர்?''

''இல்லை; நம்ம ஹெட்மிஸ்ட்ரஸோட அதிர்ஷ்டம்னு சொல்லும்!''

''கிடையாது. நம்முடைய அதிர்ஷ்டம்னு சொல்லணும். இல்லேன்னா...''

''அந்தச் சிடுமூஞ்சிக் குண்டுக் கத்திரிக்காய் டிக்கெட் கிடைக்கலேன்னு டில்லிக்குப் போறதைத் தள்ளிப் போட்டுட்டு இன்னும் மூணு நாலு மாசத்துக்கு இங்கேயே உட்கார்ந்து விடும்னு பயப்படறியா?''

''இனிமேல் அது நடக்காதடீ! அவங்களோடே 'ஹஸ்பெண்ட்' போன வாரமே வேலை மாற்றலாகி டில்லிக்குப் புறப்பட்டுப் போயிட்டாராம். இவங்களும் எழுதிக் கொடுத்த ராஜினமாக் கடிதாசை நம்ம ஸ்கூல் 'கரஸ்பாண்டண்ட்' ஏற்றுக்கிட்டாராம்...''

''அதனாலே நம்மைப் பிடிச்சிருந்த கிரகணம் இன்னையோடே விட்டுப் போயிடும்னு சொல்றயாடீ?''

கலகலவெனச் சிரித்தனர் அந்த மூன்று பெண்களும். ''எங்கே கருணா டீச்சர்?'' என்று மெல்லக் கேட்டபடி சுற்று முற்றும் பார்த்தாள் ஒருத்தி.

நகரில் பிரபலமான பட்டு ஜவுளிக் கடையொன்றின் புதிய ரக ஜவுளிப் புடவைகள் கண்ணைப் பறிக்கும்விதமாகத் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு 'ஷோ கேஸ்' அருகில் நின்று கொண்டிருந்தாள் கருணா. அவள் அந்தக் கண்ணாடிப் பெட்டிக்குள்ளிருந்த சேலைகளைத்தான் பார்க்கிறாளா, அல்லது வேறெங்கேனும் கவனமாயிருக்கிறாளா என்பதை அறிய முடியாமல் அவளுடைய கண்களை மறைத்திருந்தது கறுப்புக் கண்ணாடி!

''அது சரி; அடுத்தபடியா ஹெட்மிஸ்ட்ரஸ் ஸீட்டிலே உட்காரப் போறது இந்தக் கருணாதானே?'' என்று இரகசியக் குரலில் கேட்டாள் மற்றொருத்தி.

''அப்படித்தான் வதந்தியாயிருக்குது. ஆனால் இவங்க இல்லே என்கிறாங்க.''

''அதை நீ நம்பறியா?''

மூன்றாமவள் ஏதோ சொல்ல வாய் எடுத்தபோது கருணா திரும்பி வரவே சட்டென்று அந்தப் பேச்சை நிறுத்திவிட்டு, ''என்ன டீச்சர், கறுப்புக் கண்ணாடி போட்டுக்கிட்டே பட்டுப் புடவைகளைப் பார்த்துட்டு வந்துட்டீங்க?'' என்றாள் விஷமச் சிரிப்புடன்.

கருணாவின் முகத்தில் நாணப் புன்னகை படர்ந்தது. ஏதோ ஒன்றை மறைக்க முயலும் சிறு பிள்ளையின் பயச் சிரிப்பாகவும் அது இருந்தது. ''இல்லே; சும்மாப் பார்த்தேன். எல்லாம் யானை விலை, குதிரை விலை'' என்று கூறிய அவள், ''சரி, போவோமா? ஸ்கூல் பெல் அடிக்க இன்னும் பதினைஞ்சு நிமிஷம்தான் இருக்கு!.... ஆனாலும் பரவாயில்லே. இப்ப நாம் இஞ்சு, பத்து நிமிஷம் லேட்டாப் போனாலும் ஹெட்மிஸ்ட்ரஸ் ஒண்ணும் கேட்கமாட்டாங்க'' என்றாள் இளநகையுடன்.

''இதோ பாருங்க, டீச்சர்! நாங்களெல்லாம் இதிலே எடை பார்த்தோம் நீங்களும் பாருங்களேன்!'' என்று கும்மாளச் சிரிப்புடன் சொல்லித் தங்கள் தங்கள் கையிலிருந்த சிறு காகிதத் துண்டைக் காட்டிக்கொண்டே கருணாவை எடை பார்க்கும் யந்திரத் தருகில் இழுத்தனர்.

''எடை மட்டும் இது காட்டலே, டீச்சர்! நம்ம அதிர்ஷ்டப் பலனையும் பார்த்துக்கலாம்!'' என்றாள் ஒருத்தி வெகு உற்சாகமான குரலில்.

''நானு ?.... வேண்டாம், வேண்டாம்! ஏதோ அபூர்வமா நல்ல நிலைமையிலே இருக்கிற இந்த மிஷின் மேலே நான் ஏறி நின்னு அப்புறம் அது பழுதாகிவிடும்! பாவம்!'' என்று குறும்பாகக் கூறிக் கொண்டே நடக்கலானாள் சுகுணா.

கிசுகிசுப் பண்ணினாற் போல் அந்த மூன்று பெண்களும் ஒருவரோடொருவர் இடித்து மோதிச் சிரித்தபடி அவளைப் பின்தொடர்ந்தனர்.

இவ்வளவையும் ரசித்துக் கேட்டுக் கொண்டு தூண் ஓரம் நின்றிருந்த முத்துசிவன், சுகுணா என்ற அந்தப் பெண்மணியை ஆவல் ததும்பப் பார்த்துக் கொண்டே அவசரமாய் ஓரடி முன்னால் வந்தான். ஆனால் அவளோ அவனைத் திரும்பிப் பார்க்காமல் ஒய்யாரமாக மேலே நடந்து விட்டாள். அவளுடைய தோழிகளும் அவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

முத்துசிவன் முகம் அசடு தட்டிப் போய் வெளிறிச் சிறுத்தது. அழகாக நடந்து செல்லும் சுகுணாவின் முதுகில் நீண்டு தொங்கி அசைந்தாடிய சேலைத் தலைப்பையே பார்த்தபடி விக்கித்து நின்றான் அவன்.

அந்நான்கு அணங்குகளும் பஸ் நிலையத்துக்குச் சென்று நின்றதுமே அவர்களுடைய பஸ்ஸும் வந்துவிட அதில் ஏறிப் போய் விட்டார்கள்.

ஏதோ ஒன்றைப் புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு ஒரு தீர்மானத்தையும் செய்து கொண்டவன் போல் புன்முறுவலுடன் தலையாட்டியபடி உற்சாகத்தோடு ஸ்கூட்டரில் ஏறிப் புறப்பட்டான் முத்துசிவன்.

வீட்டில் ஜானகி ஒருபுறமும், தில்லைநாதன் — அவனுடைய மனைவி லதா ஆகியோர் இன்னொரு பக்கமுமாக இருந்து தத்தம் பெட்டி, படுக்கை, சாமான்களை ஒழுங்குபடுத்தி அடுக்கிக் கட்டுவதில் ஈடுபட்டிருந்தனர்.

கூடத்து அறையின் மூலையில் கிடந்த பிரம்பு நாற்காலியொன்றில் குத்துக் காலிட்டு உட்கார்ந்து கண்களை மூடியவாறு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான் வலம்புரி. திடும் திடுமென்று அவன் தன் ஜேபியிலிருந்து துண்டுக் காகிதத்தை எடுத்து முழங்கால் முட்டியில் வைத்து எதையோ பரபரவென எழுதிச் சுருட்டி ஜேபியில் திணித்துக் கொண்டு மறுபடியும் கண்களை மூடிச் சிந்தனையில் ஆழ்ந்து போவதைப் பார்க்க வேடிக்கையாயிருந்தது.

அவனுடைய மனைவி சுந்தரியைக் காணோம் !

அன்னபூரணியம்மாள் வராந்தாவில் கால்களை நீட்டிப் போட்டு உட்கார்ந்தபடி சுற்றுச் சுவர் 'கேட்' பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள். கன்றை எதிர் நோக்கும் தாய்ப் பசுவின் ஏக்கம் அவள் முகத்தில் எழுதி ஒட்டி வைத்தாற்போல் இருந்தது. அவ்வப்போது தனக்குள் ஏதோ கவலையுடன் முணு



திகைக்க வேண்டாம். உண்மையே.

என்னூரில் பொதுப்பணித் துறையைச் சேர்ந்த மணல் தொழிற்சாலைக்குச் சென்றால் இந்த மணலைக் காணலாம்.

சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பரிசோதனைக்காக உபயோகிக்கப்படும் இந்தியத் தர மணல் (Indian Standard Sand) இந்தியாவிலேயே தமிழகத்தில், சென்னைக்கு அருகில் உள்ள என்னூரில் மட்டுமே கிடைக்கிறது. முன்பெல்லாம் நமது தேவைக்கு கனடாவையும், இங்கிலாந்தையும் எதிர்நோக்கி யிருந்தோம். இன்று இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகள் அத்தனைக்குமே நமது தமிழக அரசு கொடுக்கிறது.

தொழிற்சாலைக்கென மணல் எடுப்பதற்காக 200 ஏக்கருக்கு மேல் நிலம் வழங்கப்பட்டுள்ளது. அந்நிலங்களில் சுமார் ஐந்து அல்லது ஆறு அடி ஆழத்தின் கீழ் கால் அடியிலிருந்து முக்கால் அடிவரை தூய வெள்ளை நிறத்தில் இம்மணல் கிடைக்கிறது.

இம்மணலைக் கைவண்டிகள் மூலம் எடுத்துவந்து வெயிலில் உலர வைத்து, முதலில் இயந்திரச் சல்லடைகள் மூலம் சலிக்கிறார்கள். இயந்திரச் சல்லடைகள் இம்மணலை மூன்று பிரிவாகப் பிரிக்கிறது. பெரிய மணல், நடுத்தர மணல், பொடிமணல் என்று பிரிக்கப்படுகிறது. பெரிய மணலும் பொடிமணலும் கண்ணாடித் தொழிற்சாலை முதலானவற்றில் உபயோகப்படுகிறது. இத்தர மணல்களின் விலை ஒரு டன் ரூ. 25.

நடுத்தர மணல்தான் இந்தியத் தர மணல் என்று சொல்லுகிறார்கள். அம்மணலை நன்கு கழுவி சுத்தம் செய்து, வெயிலில் உலர வைக்கிறார்கள். பின்னர் அம்மணல் இரண்டாவது முறையாகச் சல்லடைகளில் கையினால் சலிக்கப்பட்டு டின்களில் அடைக்கப்படுகிறது.

ஒவ்வொரு டின் மணலும் பரிசோதனைச் சாலையில் சோதிக்கப்படுகிறது. டின்களைக் கள்ளிப் பெட்டிகளுள் வைத்து இந்திய சிமெண்ட் தொழிற்சாலைகள் அத்தனைக்கும் அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பப்படும் 40 டின் (ஒரு டன்) மணல் விலை ரூபாய் ஆயிரம்.

— தகவல்: செருவை க. பட்டாபிராமன்.

முணுத்துக் கொண்டாள். வராந்தாவின் இரு பக்கவாட்டிலும் மாமரங்கள் குளிர்ந்த நிழலைப் பரப்பியிருக்க, சில்லென்ற சிமெண்டுத் தரையில் அவள் உட்கார்ந்திருந்தாலும் வெளியே கானல் மிதவையுடன் எரித்துக்கொண்டிருந்த வெய்யிலில் தான் அகப்பட்டுக்கொண்டு பொசுங்குவது போல் அவ்வப்போது, 'அஸ் உஸ்' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

விர்ரென்று பறந்து வந்து கூட்டுக்குள் புகும் சிட்டுக் குருவி போல் கண்ணிமைக்கும் நேரத்தில் சுற்றுச் சுவர் வாயிலைக் கடந்து விட்டு வாசற்படியண்டை வந்து நின்றது ஸ்கூட்டர். சோர்வும் களைப்புமாக இறங்கினான் முத்துசிவன்.

ஆவலும் பரபரப்புமாக எழுந்தாள் அன்னபூரணியம்மாள். கவலையால் வாடியிருந்த அவள் முகம் கொஞ்சமாக மலர்ச்சியடைந்தது.

ஞானகியும் தில்லைநாதனும் செய்து கொண்டிருந்த வேலைகளை அப்படியப்படியே போட்டுவிட்டு ஓடி வந்தனர்.

"எல்லாரையும் வண்டியேற்றி அனுப்பிச்சுட்டேம்மா! வண்டியிலே இடம் தாராளமாகக் கிடைச்சுது. மைதிலி சந்தோஷமாகத்தான் போகிறாள்" என்றான் முத்துசிவன்.

"அழுதாளாமே?" என்று அடைத்த குரலில் மெல்ல இழுத்தாள் தாய்.

"புது மணப்பெண்ணோட அழுகைக்கும், தலைப் பிள்ளைப் பெற்றவளின் சிரிப்புக்கும் நேரான அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாதம்மா!"

"பிரமாதம்! பிரமாதம்!" —கூடத்து அறையின் மூலையில் யோக நிஷ்டையிலே ஆழ்ந்தவன் போல் உட்கார்ந்திருந்த வலம்புரிதான் திடீரென்று இவ்வாறு சொல்லிச் சிரித்தான்.

அவன் சிரிப்பதைக் கண்டு உற்சாகமடைந்த தில்லைநாதனும் ஞானகியும் உரக்கச் சிரித்தனர். பக்கத்து அறையில் ஒற்றை முழந்தாளிட்டு உட்கார்ந்து பெட்டியில் துணிமணிகளை அடுக்கிக் கொண்டிருந்த லதா, பாஷை புரியாத ஒரு பேதைமைப் புன்னகையுடன் திரும்பிப் பார்த்தாள்.

முத்துசிவனின் முகத்தில் மட்டும் இலேசாகக் கோபம் படர்ந்தது. வலம்புரியை நிமிர்ந்து பார்த்துவிட்டுச் சட்டென்று வேறு பக்கம் திரும்பினான்.

தில்லைநாதன் விரைந்து போய் வாசற்படியண்டை நிறுத்தி வைத்திருந்த ஸ்கூட்டரை வராந்தாவுக்குக் கொண்டு வருவதில் முனைந்தான்.

"அப்புறம் குழந்தை என்ன சொன்னாள் முத்து?" என்று கேட்டுக்கொண்டு தன் மகனைப் பின்தொடர்ந்தாள் அன்னபூரணியம்மாள்.

"அவளோட அம்மாவையும் சின்ன அண்ணனையும் நான் கவனிச்சுப் பார்த்துக் கொள்ளணுமாம். இதைத்தான் திரும்பத் திரும்பச் சொன்னாள்."

புன்முறுவல் பூத்துக் கொண்டாள் அன்னபூரணி. "அது சரி; சம்பந்தி வீட்டாருக்கு எல்லாம் திருப்திதானே?"

"எல்லாருக்கும் எல்லா விஷயங்களிலும் பரம திருப்தி. இதை அவர்கள் வாய் விட்டுச் சொல்லாவிட்டாலும் என்னிடம் நடந்துகிட்ட முறையிலிருந்து தெரிஞ்சுக்கிட்டேன்."

நிம்மதிப் பெருமூச்சுவிட்ட அன்னபூரணியம்மாள், "மாப்பிள்ளை எதனாச்சும் சொன்னாரா?" என்றாள்.

"அவன் ஒன்றும் சொல்லலேம்மா!... ஆனால் ஒரு காரியம் பண்ணினான்!" என்றான் முத்துசிவன் மெல்லச் சிரித்துக் கொண்டே.

"என்ன, முத்து?" என்று அவசரமாகக் கேட்டவாறு அருகில் வந்தாள் அன்னபூரணி.

அவ்விஷயத்தைச் சொல்ல விருப்பப்படாதவன் போல் ஓர் அலட்சியச் சிரிப்புச் சிரித்துக் கொண்ட முத்துசிவன், சற்று தயங்கிவிட்டுச் சொன்னான்: "வண்டி புறப்பட மூணு நிமிஷம் இருக்கும் போது உள்ளே உட்கார்ந்திருந்த மாப்பிள்ளை திடுதிப்பென்று கீழே இறங்கி வந்து என் காலிலே தடால் என்று விழுந்து கும்பிட்டான். பிறகு எழுந்திருச்சு என் கையைப் பிடிச்சுக்கிட்டு, 'முகஸ்துதிக்காகச் சொல்லலே அத்தான்! பெண் பார்க்க வந்தப்பவே உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டேன். இப்ப கடந்த மூணு நாளா உங்கக்கூட இருந்தும் பார்த்தேன். உண்மையில் நீங்க லட்சத்திலே ஒருவர்! நூத்திலே, ஆயிரத்திலே ஒருவர் இல்லே; லட்சத்திலே ஒருவர். அப்படிப்பட்ட உங்களின் தங்கச்சிக்கு மாலையிட்டதன் மூலம் உங்களை அத்தானாக அடைஞ்சது என் பூர்வ ஜன்மப் புண்ணியம்னே நினைக்கிறேன்'ன்னு.... இன்னும் என்னென்னவோ சொன்னான். இதை வேடிக்கை பார்க்க பிளாட்ஃபாரத்தில் ஒரு சின்னக் கூட்டமே கூடிப் போச்சு."

"முருகா!" என்றவாறு கண்களை மூடி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் அன்னபூரணியம்மாள்.

முத்துசிவனின் பார்வை அங்குமிங்குமாகத் துழாவியது. வலம்புரியின் மனைவி சுந்தரி இருக்கிறாளா, இல்லையா என்பதை அறியவே அவன் அவ்வாறு பார்த்தான்.


(தொடரும்)

—எதிர்காலத்திற்கு

நிலையான உறுதிமொழி—

உங்கள் குழந்தைகளுக்காக நீங்கள் உழைக்கிறீர்கள் .... அவர்களுக்கு, பணநெருக்கடி அளிக்கும் சந்தேகமும் சங்கடமும் இல்லாத ஒரு எதிர்காலத்தை அவர்களுக்காக நீங்கள் திட்டம் இடுகிறீர்கள். உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க நீங்கள் இப்போதே சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிட்., மூலம் ஒரு சேவிங்ஸ் பாங்க் கணக்கை, சிறிய தொகையாகிய ரூ 5/- மூலம் ஆரம்பியுங்கள். உங்கள் பணம் பாதுகாப்பாக இருப்பதுடன் தகுந்த வட்டியும் கிடைக்கிறது.

இந்த பாங்கின் 464 கிளைகளிலும் ஒரு அன்புகரம் உங்கள் சேமிப்பு, இதர பண விஷயங்களில் துணைபுரிய கை கொடுத்து வறவேற்க எப்போதும் தயாராக இருக்கிறது.



தி சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிட்.,

தனியார் துறையில் உள்ள மிகப்பெரிய பாங்க்

பதிவு காரியாலயம்:
மகாத்மா காந்தி ரோடு,
போர்ட், பம்பாய்-1

திரு. பி.வி. பிள்ளை
பிரதம ஏஜெண்ட்
சென்னை

Mr. V. C. படேல்
சேர்மன்
பம்பாய்

SISTA'S-CB-5.7A



திருவாளர் மாயாண்டி

தபல்வி

"பூட்டைத் திறக்க வேண்டும்... ஒரே ஒரே ஒரு மணி நேரம்... ஐந்நூறு ரூபாய்" என்று தனக்குள் கூறிக் கொண்டான் பயில்வான் மாயாண்டி.

அவன் செவிகளையே அவனால் நம்ப முடியவில்லை. நாக்கிலே நீர் ஊறியது ; கைகள் பரபரத்தன; பின்னலாய் மூளை இயங்கத் தொடங்கியது.

அந்தப் பேட்டையிலே மட்டுமின்றி, சுற்றுப்புற வட்டாரங்களிலும், ஏன் சுருங்கச் சொன்னால், தமிழக மெங்கும் வெற்றிகரமாகத் தொழில் நடத்தி வரும் பயில்வான் மாயாண்டியை அறியாதார் யார் ? அந்த அளவுக்குப் 'புகழ்' பெற்றுள்ள தன்னை ஏதாவது ஒரு வம்பில் மாட்ட வைக்கும் சூழ்ச்சியாக இருக்குமா இது?

ஆசைக்கும் அச்சத்துக்கும் இடையே உள்ளம் ஊசலாட, செவ்வரியோடிய தன் விழிகளைச் சந்தேகத்துடன் உயர்த்தினான் மாயாண்டி.

தன்னுடைய பதிலை எதிர்நோக்கி எதிரில் பிரபல யானை மார்க் இரும்புப் பெட்டித் தொழிற்சாலையின் இரு பெரும் பாகஸ்தர்களான கஜகர்ணமும் கோகர்ணமும் அடக்க ஒடுக்கத்துடன், ஆண்டவன் சந்நிதானத்தில் நிற்கும் பரம பக்தர்களைப் போல் நின்ற காட்சி அவனுக்கே பரிதாபமாகவும் பெருமையாகவும்கூட இருந்தது.

"சரி, நான் இப்ப என்ன செய்யணும்?" என்றான், அவர்கள் வாக்குமூலத்தை மீண்டும் ஒரு முறை ஊர்ஜிதப்படுத்தும் தோரணையில் அவன்.

அவனுடைய அந்தக் கேள்வியில் சம்மதத்தின் சாயலை உணர்ந்த கஜகர்ணமும் ஒரு முறை அர்த்தபுஷ்டியுடன் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

பிறகு, "வேறொன்றுமில்லை...." என்று தொண்டையைக் கனைத்துக் கொண்டு ஆரம்பித்தார் கோகர்ணம். "எங்கள் யானை மார்க் இரும்புப் பெட்டிக்கு ஒரு புது மாதிரியான விளம்பரம் பண்ணத் தீர்மானித்திருக்கிறோம். அதற்கு உங்க உதவியும் ஒத்துழைப்பும் மட்டும் இருந்தால்..." என்று தயங்கினார்.

"அது சரி, அதுக்கு நான் என்ன செய்யணும்?" பொறுமை இழந்தாற்போல் மறுபடியும் கேட்டான் மாயாண்டி.

"உங்க போட்டோ ஒண்ணு....!"

"போட்டோவா ? அதுதான் பேப்பர்லே வந்திருக்குதே ஏராளமா !"

"அப்படி இல்லை ! புதிதாக ஒரு போட்டோ நாங்களே எடுப்போம். அத்துடன் உங்க ஒரு சர்டிபிகேட்டும்...."

"சர்டிபிகேட்டா....?"

"ஆமாம் ! அதாவது உங்களிடமிருந்து ஒரு நற்சாட்சிப் பத்திரம்... உலகத்திலேயே எங்க யானை மார்க் இரும்புப் பெட்டி ஒண்ணுதான் மிகவும் உறுதியானது. இலேசிலே திறக்க முடியாதது. பயில்வான் மாயாண்டியினாலேயே தகர்க்க முடியாத இரும்புப் பெட்டி ! அப்படின்னு.... அது எங்களுக்கு ஒரு பொக்கிஷமாகும் !" என்றார் கஜகர்ணம்.

"இதோ பாருங்க.... நான் தொழிலையெல்லாம் விட்டு வெலகி வெகுநாளாச்சு... தயவுசெஞ்சி நீங்க போங்க.... எனக்கு உங்க பணமும் வேணும் ; இந்த வம்பும் வேணும் !" என்று எழுந்தான் மாயாண்டி.

"நீங்க அப்படிச் சொல்லப்படாது! இதிலே உங்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது; அப்படி ஏற்பட்டாலும் அதுக்கு நாங்கதான் பொறுப்பு. வேண்டுமானால் அப்படி ஓர் ஒப்பந்தம் எழுதிக் கையெழுத்துப் போட்டு உங்களிடம் கொடுத்து விடுகிறோம்" என்றார் கோகர்ணம்.

''சரி, அதை மொதல்லே எழுதிக் குடுங்க'' என்று அரை மனதுடன் இணங்கிய மாயாண்டி, ''அப்புறம் வேறென்ன?....'' என்று கேட்டான்.

''அவ்வளவுதான் ! வேறொன்றுமில்லே.... இது உங்களாலே எங்கள் கம்பெனிக்குக் கிடைக்கிற ஒரு விளம்பரம்தான். இதிலே நீங்க செய்ய வேண்டியது, அதாவது உங்கள் பங்கு என்னவென்றால், ஆறடி அகலம், நாலடி உயரம் உள்ள எங்க யானை மார்க் இரும்புப் பெட்டியை உங்க சாமர்த்தியத்தையெல்லாம் பயன்படுத்தி, ஒரு மணி நேர அவகாசத்திற்குள் ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு நீங்கள் திறந்துவிட வேண்டும் ! அது அவ்வளவு இலேசான காரியமில்லே ; உங்களாலே திறக்கவும் முடியாது !.... அதுதான் நாங்கள் எதிர்பார்க்கிற விளம்பரம் ! அதுக்காக எங்கள் கம்பெனி உங்களுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுக்க முன்வருகிறது !''

''இதென்ன சவால் போங்க'' என்று அலட்சியமாக முறுவலித்த மாயாண்டி, ''நான் பெட்டியைத் திறந்துட்டா?....'' என்று கிண்டலாகக் கேட்டு வைத்தான்.

''நீங்க அப்படித் திறந்துட்டா, இந்த ஐந்நூறு ரூபாயுடன் இன்னொரு ஐயாயிரம் ரூபாயும் கிடைக்கும். அதை அந்த இரும்புப் பெட்டியின் உள்ளே கவரிலே போட்டு வைப்போம். உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்து பெட்டியை நீங்கள் திறந்திட்டா, அந்தப் பணமும் உங்களைச் சேரும்.''

''சரி, ஒப்பந்தத்திலே அதையும் சேர்த்து எழுதிக் குடுங்க !'' என்றான் மாயாண்டி. அவன் மனக் கண்ணில் புது உலகமொன்று நிழலாடியது.

ஃ ஃ ஃ

அன்று மாலையில், 'கஜகர்ணம் அண் கோகர்ணம்' கம்பெனியின் திறந்தவெளி மாடித் தோட்டம் திமிலோகப்பட்டது. வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் ஒரு புறம் யானைப் பொம்மையும், அதன் அருகில் பெரிய யானை மார்க் இரும்புப் பெட்டியொன்றும் வைக்கப்பட்டிருந்தன.

சற்று நேரத்தில் அங்கு நடைபெற இருந்த வியாபார 'ஸ்டண்டைக்' கண்டு களிக்க அந்த விசாலமான கூடமெங்கும் பத்திரிகையாளர்களும், போட்டி இரும்புப் பெட்டி வியாபாரிகளும், பொதுஜனங்களும் நிறைந்து கலகலவென்றிருந்தது.

ஒலிபெருக்கியின் முன்னால் வந்து நின்று வரவேற்புரை நிகழ்த்திய கஜகர்ணம், அன்றைய நிகழ்ச்சியை விளக்கிக் கூறிவிட்டு, மாயாண்டியை அறிமுகப்படுத்தினார்.

''இவர்தான் திருவாளர் மாயாண்டி. இவரை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் அளவுக்குப் பைத்தியக்காரன் இல்லே நான். இவர் எங்களுக்கும், உங்களுக்கும்கூட ஏற்கனவே அறிமுகமானவர்; இவரது உடலின் வலிமை என்ன, மன வலிமை என்ன? எல்லாம் உங்களுக்குத் தெரியும். எப்பேர்ப்பட்ட இரும்புப் பெட்டியையும் திறக்கக் கூடிய வலிமை பெற்ற பயில்வான் இவர்.''

கஜகர்ணம் சற்று நிறுத்தினார். சபையில் பலத்த கரகோஷம் எழுந்தது. 'ஃப்ளாஷ்' விளக்குகள் மின்னலாய்க் கண் சிமிட்டி அணைந்தன.

பிறகு கஜகர்ணம் மாயாண்டியை நோக்கி, ''இந்தக் கவரில் ஐயாயிரம் ரூபாய் இருக்கிறது. இதை நீங்களே அந்த இரும்புப் பெட்டியிலே வைத்துப் பூட்டி, சாவியை என்னிடம் கொடுங்கள்'' என்றார்.

மாயாண்டி அதே போல் செய்த பின்னர் ''சரி, இனி உங்கள் வேலையை ஆரம்பிக்கலாம்'' என்று கூறியவர் மேடையை விட்டு இறங்கி, முதல் வரிசையிலிருந்த ஓர் ஆசனத்தில் வந்தமர்ந்தார்.

மாயாண்டி சுத்தியையும், ஸ்க்ரு டிரைவரையும் உபயோகித்து இரும்புப் பெட்டியின் கதவைத் தகர்க்க ஆரம்பித்தான். அந்தச் சத்தத்தைச் சகிக்க முடியாமல் சிலர் காதை மூடிக் கொண்டனர். போட்டி வியாபாரியான ஒருவர் கண்ணை மூடிக் கொண்டு, மாயாண்டிக்கே வெற்றி கிட்ட வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தனை செய்தார்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. சபைக்கு அலுப்புத் தட்டாமலிருக்க மைக்கில் சினிமா இசைத் தட்டுக்களின் சங்கீதம் கேட்கத் தொடங்கியது. அந்தச் சங்கீத இரைச்சலிலும், மாயாண்டி எழுப்பும் சத்தம் தெளிவாகக் கேட்காமல் இல்லே.

பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு முறை கஜகர்ணம் எழுந்து நேரத்தை நினைவுபடுத்தினார். கால்மணி, அரை மணி, முக்கால் மணி நேரமும் ஓடிவிட்டது. வேர்த்து மூச்சு வாங்க மாயாண்டி இரும்புப் பெட்டியுடன் போராடுவதை எல்லோரும் நிசப்தமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கஜகர்ணம் இசைத்தட்டுச் சங்கீதத்தை நிறுத்திவிட்டு, தம் கைக் கடிகாரத்தையே கவனித்துக் கொண்டிருந்தார். ''கொடுத்திருந்த ஒரு மணி நேர அவகாசத்தில் இன்னும் பத்து நிமிடங்கள்தான் இருக்கின்றன. திருவாளர் மாயாண்டி அவர்களால் பெட்டியைத் திறக்க இயலாவிடில் அவருடைய தோல்வியை இப்போதே ஒப்புக் கொள்ளலாம்'' என்றார் கஜகர்ணம்.

மாயாண்டிக்கு ரோஷம் தாங்கவில்லே. ஆத்திரத்தாலும் அவமானத்தாலும் உள்ளம் துடிதுடிக்க, தன் முழு பலத்தையும் பிரயோகித்துப் பெட்டியை உடைக்க ஆரம்பித்தான். தன்னுடைய தோல்வியை ஊகித்துப் பார்க்கவும் அவனால் இயலவில்லே.

'' இன்னும் நாலே நிமிஷங்கள்தான்..... மூன்று நிமிஷங்கள்.... ரெண்டு.... இன்னும் ஒரே ஒரு நிமிஷம்தான்.... முப்பது வினாடிகள். முடிந்து விட்டது !'' என்று வெற்றிக் களிப்பில் கஜகர்ணம் துள்ளிக் குதித்தார்;



நெசவு உற்பத்தியிலே 322 ஆண்டுகால மரபோடு முன்னேற்றத்தை இணைப்போர் யார்?

அது நாங்கள்

322 ஆண்டுகள் அனுபவம் என்றால் சும்மாவா! அது ஏழு நெசவாலைகளின் ஒருங்கிணைந்த அனுபவமாக இருந்தாலும் அது கொஞ்ச நஞ்சமல்ல, அபாரம். எங்களைத்தான் சொல்லு கிறோம்—லால்பாய் க்ருப். எங்கள் துணிகளோ, பழம்பெரும் பாரத மரபின் ஒரு பகுதியாகும்.

எங்கள் முதல் ஆலை உற்பத்தி தொடங்கிய ஆண்டு 1906; அதன் பின் காலம் மாறிவிட்டது. இருப்பினும் காலத்தோடு ஒட்டி வளர்ந் துள்ளவர்கள் நாங்கள். இன்று எங்கள் ஆலைகள் அதி நவீனமான உத்திகளையும் எந்திர சாதனங்களையும் பயன்படுத்தி, நேர்த்தியான எல்லாவகை செவுகளையும் உற் பத்தி செய்கின்றன. நாட்கள் பல சென்றாலும் நடைமுறையில் இருந்துவாத்தவருத துணிகள். லால்பாய் டிரேடு மார்க் இருக்கிறதா பாருங்கள். தரமான துணிகளுக்கு அதுவே உத்தரவாதம்.

INTERPUB/LG 3A TM

லால்பாய் க்ருப்

- தி அரவிந்த் மில்ஸ் லிமிடெட்.
- தி ராய்ப்பூர் மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்.
- தி அசோகா மில்ஸ் லிமிடெட்.
- தி ஸாரஸ்பூர் மில்ஸ் லிமிடெட்.
- தி அருணா மில்ஸ் லிமிடெட்.
- தி அகமதாபாத் நியூ காட்டன் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.
- தி நூதன் மில்ஸ் லிமிடெட்.

கடந்த ஒரு மணி நேர காலத்தில் அந்தப் பெட்டியுடன் ஒரு மல்யுத்தமே நடந்து விட்ட களைப்புடன் துவண்டு போய், தன் தோல்வியை மிகவும் பரிதாபகரமாக ஒப்புக் கொள்வது போல் சோர்ந்து கீழே உட்கார்ந்து விட்டான் மாயாண்டி.

மறுகணமே அவன் மீது 'ஃப்ளாஷ்' விளக்குகள் மின்னின. ''வெற்றி எங்களுடையதே!.... வெற்றி எங்கள் யானை மார்க் இரும்புப் பெட்டியினுடையதே!'' என்று மாறி மாறி கஜகர்ணனும் கோகர்ணனும் ஆனந்த முழக்கமிட்டனர்.

அந்த ஆனந்தத்தைக் கண்டு சகிக்க விரும்பாத போட்டி வர்த்தகர்கள் அங்கிருந்து எப்போதோ நழுவிப் போய்விட்டிருந்தனர்.

வந்திருந்த அனைவருக்கும் நன்றிகூறிப் பேசிய கஜகர்ணம் கடைசியில், ''பெட்டியைத் திறக்கும் பெருமுயற்சியில் மாயாண்டி அவர்கள் வெற்றி பெற்றிருந்தால் அதனுள்ளிருந்த ஐயாயிரம் ரூபாய் அவருக்குக் கிடைத்திருக்கும். வெற்றி பெறாவிடினும், அவர் இந்தப் போட்டியிலே சிரமத்தைப் பாராட்டாமல் மிகவும் உற்சாகத்துடன் கலந்து கொண்டார். அதற்காக எங்கள் கம்பெனியின் சார்பில், எங்களுடைய அன்பின் சிறு காணிக்கையாக இந்தத் தொகையை அவருக்கு அளிக்கிறோம்'' என்று கூறி ஐந்நூறு ரூபாயை மாயாண்டியிடம் கொடுத்தார்.

''ரொம்ப சந்தோஷம்'' என்று அதைப் பெற்றுக் கொண்டான் மாயாண்டி.

ஃ ஃ ஃ

''அடப்படுபாவிப் பயலே! கடைசியிலே தன் கைவரிசையை நம்மிடமே காட்டிவிட்டுப் போய்விட்டானே!'' என்று தேள் கொட்டிய திருடனைப் போல் பிரலாபித்தார் கஜகர்ணம்.

''என்ன? என்ன?'' என்று பதறிப்போய்க் கேட்டார் கோகர்ணம்.

''இந்தக் கவரிலே ஐயாயிரம் ரூபாயைப் போட்டு, பெட்டியில் வைக்கச் சொன்னோம் இல்லையா?''

''ஆமாம்! அவன் அதைப் பெட்டியில் வைத்து நன்றாகப் பூட்டிச் சாவியைக்கூட நம் கையில்தானே கொடுத்தான்?'' என்று திருப்பிக் கேட்டார் கோகர்ணம்.

''அவன் நாசமாய்ப் போனான். தோலிருக்கச் சுளை முழுங்கினமாதிரி கவருக்குள் இருந்த பணத்தை 'அபேஸ்' பண்ணி விட்டு வெறும் கவரைப் பெட்டிக்குள் வைத்திருக்கிறான்.. இப்போ அவனை என்ன பண்ணுகிறது?'' என்று வயிற்றெரிச்சலோடு கேட்டார் கஜகர்ணம்.

எதிரே இருந்த யானை மார்க் இரும்புப் பெட்டி, ''தோல்வி உங்களுடையதாக இருந்தாலும், வெற்றி என்னுடையதுதானே!'' என்பது போல் அவர்களைப் பார்த்துக் கடகடவென்று சிரித்தது;



விநோதப் பந்தயங்கள் !

எடுக்கவோ, கோக்கவோ ?

"அரை லிட்டர் பச்சரிசியை நன்றாகப் பதத்துடன் சமைத்து ஒரு எவர்சில்வர் தட்டில் கொட்டிவிட வேண்டும். அதில் உள்ள பருக்கைகளைச் சூட்டோடு சூடாக ஒவ்வொன்றாகத் துணி தைக்கும் ஊசியால் குத்தி எடுக்க வேண்டும். இதில் வெற்றியடைந்தால் ரூபாய் இருபத்தைந்து பரிசு கிடைக்கும்" என்று என் நண்பன் கூறினான்.

மறு நாள் நண்பன் வீட்டுக்குச் சென்று நான் பந்தயத்தில் கலந்து கொண்டேன். தட்டிலுள்ள அரை லிட்டர் சோற்றுப் பருக்கைகளில் பாதியை ஊசியால் குத்திக் கீழே எடுத்து வைத்து விட்டேன்.

இந்தச் சமயத்தில் என் நண்பனின் மனைவி நான் படும் அவஸ்தையைப் பார்த்து மிகவும் பரிதாபப் பட்டாள். வந்த நண்பருக்கு விருந்து படைக்காமல் இப்படி பாடாய்ப் படுத்துகிறீரே என்று எண்ணி வெங்காய சாம்பாரைக் கொண்டு வந்து தட்டில் ஊற்றி



விட்டாள். 'போதும் எண்ணியது; சாப்பிடுங்கள்' என்று உபசரித்து அப்பளத்தையும் போட்டாள்.

நானும் என் நண்பனும் விழுந்து விழுந்து சிரித்தோம். அப்பொழுதும் நான் பின்வாங்கவில்லை. சாதத்தைப் பிசையாமல் தெளிவாக வெங்காய சாம்பாரைக் குடித்து விட்டுப் பருக்கைகளை ஊசியால் குத்தி எடுத்தேன். ரூபாய் இருபத்தைந்து நண்பனிடமிருந்து பரிசாகப் பெற்ற பின்னரே விடைபெற்றேன்.

—சந்திரவாணன்

□ ■ □

பாலத்தின் மீது.....

மேட்டூர் அணைக்குப் பக்கத்தில் உள்ள வனவாசி என்ற ஊர். ஊர்க் காரியக்காரர் மகன் 25 வயது இளைஞன். அவன் பெயர் வேலன். சைக்கிள் ஓட்டுவது அவனுக்குப் பொழுது போக்கு.

அவன் அதே ஊரில் உள்ள தன் உறவுக்காரப் பெண் ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பினான். பெண்ணின் வீட்டாரும் நரச் சம்மதித்தனர். ஆனால் பெண்ணுக்கு விருப்பமில்லை. வேறு ஒருவன் மீது அவளுக்குக் காதல். ஆனால் பெரியவர்களின் சம்மதத்துடன் நிச்சயதார்த்தம் செய்யத் தேதியும் நிர்ணயம் செய்யப்பட்டது.

பெண் என்னிடம் விஷயத்தைச் சொல்லி அழுதாள். நான் யோசனை செய்தேன். வேலன் ஒரு பந்தயப் பிரியன். எங்கள் ஊரில் 150 அடி அகலம் உள்ள காவிரி வாய்க்காலில் ஒரு மரப் பாலம் உள்ளது. மூன்று பலகைகள் கொண்ட பாலம். அதில் சைக்கிள் ஓட்ட வேண்டும். அதிலும் நடுவில் உள்ள பலகையிலே மட்டும் சக்கரங்கள் உருளுகிற மாதிரிச் செலுத்திப் போய் அக்கரையில் இறங்க வேண்டும் என்று வேலனிடம் பந்தயம் கட்டினேன். இதில் தவறினால் எனக்கும் பொருள் எதுவும் அவன் தரத் தேவையில்லை என்று தெரியப்படுத்தினேன். "இப்போது நீ மணக்க நினைத்திருக்கும் பெண்ணை மணக்கக் கூடாது" என்று சொன்னேன். அவன் சம்மதித்தான். அவன் வெற்றியடைந்தால் கல்யாணச் செலவு பூராவும் என்னுடையது என்று நிபந்தனை விதித்தான். ஒப்புக் கொண்டேன்.



பந்தய நாள். வாய்க்காலில் புதுத் தண்ணீரின் வேகம் பயங்கரமாயிருந்தது. 150 அடி நீள மரப் பாலத்தில் நடுவில் உள்ள பலகையை மட்டும் விட்டு விட்டு இரு பக்கப் பலகைகளையும் அகற்றி விட்டேன்.

சைக்கிளுடன் வந்த வேலன் திடுக்கிட்டான். நடுப் பலகையில் ஏறி ஓட்டுவதாகத்தானே பந்தயம்! கீழே புது வெள்ளம் சுழித்துக் கொண்டு ஓடுவதைப் பார்க்கவே பயங்கரமாயிருந்தது. பாலத்திலோ இப்போது ஓர் ஆள் நிற்கவே இடம் போதாது! சைக்கிளை அதில் எப்படி ஓட்டுவது? வேலன் தோல்வியை ஒப்புக் கொண்டான்.


பந்தயப் பிரகாரம் வேலன் அந்தப் பெண்ணை மணக்க மறுத்துவிட்டான். பெண்ணும் பின்னால் தன் மனத்துக்கிசைந்தவனை மணந்தாள். ஒரு விநோதமான பந்தயத்தின் மூலம் அவளுக்கு வாழ்வளித்தேன்.

—கே. நடராஜன்

■ □ ■

விழாமல் விழுங்கு !

வழக்கமாக அந்தக் கடையில்தான் தேநீர் அருந்துவது வழக்கம். நானும் கடைக்காரரும் நண்பர்களானோம். ஒரு நாள் தேநீர் அருந்துவதற்குமுன், குடிப்பதற்கு ஒரு தம்ளர் தண்ணீர் கேட்டேன். அவரும் கண்ணாடித் தம்ளரில் நீரைக் கொண்டு வந்து கடையை அழகுபடுத்தும் குறுக்குச் சுவர்மீது வைத்தார். நான்



அவரிடம் ஒரு பந்தயம் கட்டினேன். அதாவது "குறுக்குச் சுவர் மீதிருக்கும் கண்ணாடித் தம்ளரிலுள்ள நீரைக் கைகளால் எடுக்காமல் தண்ணீரைக் குடிக்கிறேன். நீ என்ன பந்தயம் கட்டுகிறாய்?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "உன்னால் முடியாது. அப்படி நீ குடித்து விட்டால், உனக்கு இரண்டு ரூபாய் கொடுத்து விடுகிறேன். நீ குடிக்காவிட்டால் எனக்கு நீ இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டும்" என்றார். நானும் அதற்குச் சம்மதித்தேன்.

அந்தத் தம்ளரில் உள்ள நீரைக் குடிக்கத் தொடங்கினேன். கிட்டத்தட்ட கால் பாகம் வரை குடித்து விட்டேன். மீதித் தண்ணீரைக்

குடிக்கும் நோக்கத்தோடு, அந்தக் கண்ணாடித் தம்ளரை வாயால் தூக்கித் தலையைப் பின்புறம் சாய்த்துச் சிறிதளவு தண்ணீர் குடித்தேன். சிரிக்காமல் குடித்திருக்கக் கூடாதா? நிச்சயம் ஜெயித்து விடுவோம் என்ற நினைப்பில், என்னையும் அறியாமல் சிரித்து விட்டேன். அதன் பலனாக வாயிலிருந்து தம்ளர் கீழே விழுந்து உடைந்தது. அந்தக் கடைக்காரர் என்மீது இரக்கப்பட்டு, ''ரூபாய் வேண்டாம். கண்ணாடித் தம்ளர் வாங்க ஐம்பது காசு கொடுத்தால்போதும்'' என்றார். இந்த விநோதப் பந்தயத்தை இன்று நினைத்தாலும் எனக்குச் சிரிப்பாக இருக்கிறது.

—எம். என். சந்தானம்

■ □ ■

உலகுக்கு ஒருவர்!

சென்ற வருடம் நானும் என் நண்பர்களும் வடநாட்டில் தில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பல முக்கியமான இடங்களைப் பார்த்து வர உல்லாசப் பிரயாணம் சென்றிருந்தோம். நாங்கள் தில்லிக்குச் சென்று முக்கிய இடங்களைப் பார்த்துவிட்டு மறுநாள் தாஜ்மஹலைப் பார்க்கத் திட்டமிட்டிருந்தோம்.



அன்று இரவு தமாஷாக 'சீட்டுக் கச்சேரி' போட்டோம். அப்போது எங்களுக்குள் ஒரு பந்தயம். அதாவது தொடர்ந்து இந்த ஆட்டத்தில் பத்துத் தடவை தோற்று விட்டால் அவர் மட்டும் மறு நாள் தாஜ்மஹலுக்கு வெளியே நின்றுவிட வேண்டும். மற்றவர்கள் மட்டும் உள்ளே சென்று பார்த்து விட்டு வர வேண்டும். எல்லோரும் உற்சாகத்தோடு பந்தயத்திற்கு ஒப்புக் கொண்டார்கள்.

ஆட்டத்தில் பரிதாபமாக ஒருவர் தோற்றுவிட்டார்.

நூற்றுக்கணக்கான மைல்களைக் கடந்து வந்து உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹலைக் காண உள்ளே போகாமல் திரும்பிய நபர் அவரைத் தவிர இந்த உலகில் வேறு ஒருவர் இருக்க முடியுமா?

-- ந. ஜெயச்சந்திரன்.

□ ■ □

எண்ணித் துணிந்தது!

நானும் என் நண்பர்களும் ஆனந்தமாக ரோட்டில் நடந்து கொண்டிருந்தோம். அப்போது எங்கள் கூட்டத்தில் ஒருவர், ''ஒன்று, இரண்டு.... என்று நூறு எண்ணி முடிப்பதற்குள் ஒரு மைலை நடந்தே கடந்து விடுகிறேன். பந்தயம் என்ன கட்டுவீர்கள்?'' என்றார்.

எங்களில் எல்லோருக்கும் இது விநோதமாகத் தென்பட்டது. ''அது முடியவே முடியாது! அப்படி நீர் செய்து விட்டால் பத்து ரூபாய் கொடுக்கிறேன்'' என்று பந்தயம் கட்டி விட்டேன்.

பந்தயம் தொடங்கியது. நடக்க ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் ''ஒன்று'' என்று கூறியவர் அதற்குப் பின்பு நம்பரை எண்ணாமல் வேகமாக நடந்து கொண்டிருந்தார். எங்களுக்கு ஒன்றும் புரியாமல், ''நம்பரை எண்ணவில்லையே, ஏன்?'' என்று கேட்டோம். அவர் அதற்குப் பதில் ஒன்றும் கூறாமல் ஒரு



பர்லாங் வந்தபின் இரண்டு என்று கூறினார். இவ்வாறாக எட்டு பர்லாங்கை எட்டு வரை சொல்லிக் கடந்துவிட்டு, ''வெற்றிபெற்று விட்டேன்'' என்றார். திகைத்த எங்களுக்கு அவர் பதில் இதுதான்:

''நான் உங்களிடம் நூறு எண்ணி முடிப்பதற்குள் சென்று விடுவேன் என்றுதானே கூறினேன்? அதன்படியே நடந்து முடித்து விட்டேன். நான் விரைவாக எண்ணுவேன் என்று பந்தயம் கட்டினேன்?''

நானும் ஒரு பைசாவை அவரிடம் கொடுத்துச் சொன்னேன்: ''ஒவ்வொரு பைசாவாக மாதா மாதம் தந்து பத்து ரூபாயைக் கணக்குத் தீர்த்து விடுகிறேன். நான் மொத்தமாகப் பத்து ரூபாய் தருவதாக உங்களிடம் எங்கே கூறினேன்?'' என்றேன். நண்பரின் முகத்தில் ஈயாடவில்லை!

—இ. மகாராஜா

■ □ ■

டப்பாப் பாட்டுத் தெரியாதா?

என் நண்பர் குழுவில் ஒரு போட்டி ஏற்பட்டது. அதாவது தொடர்ந்து இடையில் சிறிதுகூடத் தயங்காமலும், நிறுத்தாமலும் ஐம்பது சினிமாப் பாடல்களைப் பாட வேண்டும். சினிமாப் பாடலின் ஆரம்ப சில வரிகளைப் பாடினால் மட்டும் போதுமானது. அப்படி ஐம்பது பாடல்களைப் பாடி முடித்தவனை மற்றவர்கள் தொடர்ச்சியாக ஐம்பது சினிமாவுக்குக் கூட்டிச் செல்ல வேண்டும். அப்படியல்லாமல் இடையில் பாடுவதை நிறுத்தி விட்டால், அவன் எத்தனை பாட்டோடு முடித்தானோ அத்தனை நண்பர்களை அவன் ஒரு சினிமாவுக்குக் கூட்டிச் செல்ல வேண்டும். இதுவரையில் ஒருவர்கூட இப்போட்டியில் வெற்றிபெறவில்லை. சில பாடல்களைப் பாடி முடித்தவுடன் தயங்கியோ, அல்லது பாடிய பாட்டையே திரும்பிப் பாடியோ தோற்றுப் போயினர். இப்போட்டியில் வெற்றி பெறுபவருக்கு, ''நவீன அம்பிகாபதி'' என்னும் பட்டம் சூட்டுவதாகவும் தீர்மானித்துள்ளோம்.



-- ச. சதாசிவம்

எனக்கு டயரி எழுதுகிற பழக்கம் உண்டு: நான் எழுதியதைச் சில சமயம் படித்துப் பார்க்கும்போது எனக்கே சிரிப்புவரும். 'இன்றைக்கு அவர் ஆபீசிலிருந்து வரும்போது. பூ வாங்கி வந்தார். குழந்தைகளுக்குக் காராபூந்திப் பொட்டலம் கொண்டு வந்தார். மிட்லண்டு தியேட்டருக்குப் போனோம். ஏர் கண்டிஷன்ட் தியேட்டர்தானே என்று பட்டுப் புடவை — ஆரஞ்சு கலர் பார்டருடன் நீலப் புடவை — கட்டிக் கொண்டு போனேன். சினிமா நன்றாகவே இல்லை'' என்று இந்த ரீதியில்தான் எழுதி வைத்திருப்பேன்.

ஆனால் என் தோழி அனுஷா இருக்கிறாளே, அவள் டயரி எழுதுவது போல் யாராலும் எழுத முடியாது! அத்தனை அழகு. ஒரு நானூறு பக்க நோட்டுப் புத்தகம்தான் அவள் டயரி: சில நாட்களில் ஒன்றுமே எழுத மாட்டாள். வேறு சில தினங்களில்



அன்றையச் சம்பவங்களையும் அதையொட்டி அவள் மனத்தில் எழும் எண்ணங்களையும் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளியிருப்பாள். இதன் காரணமாகவே அவள் வருஷ முடிவில் கடைகளில் விற்கப்படும் டயரியை வாங்குவது கிடையாது. ஒரே அளவினதான நானூறு பக்க நோட்டுப் புத்தகங்கள், 1, 2, 3 என்ற எண்கள் குறிக்கப்பட்டு அவள் அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

என் அருமைச் சிநேகிதி அனுஷா தன் டைரிகளைப் படித்துப் பார்க்குமாறு என்னைக் கேட்டுக் கொள்வாள். ''என்ன ரகசியத்தை உன்னிடமிருந்து ஒளிக்கப் போகிறேன் நான்? படித்துப் பாரேன்'' என்று வற்புறுத்துவாள். நான் படித்துவிட்டு அவள் டயரி எழுதுகிற முறையை வியந்து பாராட்டுவேன்.

சமீப காலத்தில் அவள் தன் டயரியில் எழுதி வைத்திருந்தவற்றைப் படித்தபோது சில சம்பவங்களும், அதையொட்டி அவள் மனத்தில் எழுந்த எண்ணங்களும் ஒரு சிறு கதை போலவே இருப்பதாக எனக்குத் தோன்றியது. அனுஷாவின் அனுமதி பெற்று அவற்றை இங்கு பெயர்த்து எழுதுகிறேன்.

பண்பாடே, பரிதாபமே!

ஜெயந்தி

மனிதர்களின் பெயர்களையும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களையும் மட்டும் மாற்றி இருக்கிறேன்.

ஆகஸ்டு 20, 1968

இன்றைக்கு எனக்குப் பிறந்த நாள். காலையில் சுமார் பத்து மணிக்குச் சுந்தரி அக்கா ரொம்பப் பரபரப்போடு என்னைப் பார்க்க வந்தாள். நேற்று இரவு நான் படுக்கப் போக ரொம்ப நேரமாகி விட்டபடியால் இன்று காலை நிதானமாகவேதான் எழுந்திருந்தேன். சுந்தரி அக்கா வந்தபோது நான் குளித்துக் கொண்டிருந்தேன். குளித்து முடிக்கும்வரையில் கூட அவளால் காத்திருக்க முடியவில்லை. நாலு தடவை கதவைத் தட்டிவிட்டாள்.

நான் குளியலறையை விட்டு வெளியே வந்ததும் வராததுமாக, ''அனுஷா! நேற்று நீ நைட் கிளப்புக்குப் போயிருந்தாயாமே. நிஜம்தானா?'' என்று கேட்டாள். அவள் குரலில் ஓர் ஆவல் துடிப்புத் தெரிந்தது.

நான் சிரித்தபடியே, ''ஆமாம் அக்கா, ஏதோ வேடிக்கையாக ராம்கோபால் என்னைக் கூப்பிட்டார், போனேன்!'' என்று சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னேன்.

''டேபை டுவில் 'ரவிக்' போட்டுக் கொண்டிருந்தாயாமே? டெரிலின் புடவை கட்டிக் கொண்டிருந்தாயாம். அதையும் இடுப்புக்குக் கீழே தழைத்துத்தானே உடுத்திக் கொண்டிருந்தாய்?'' சுந்தரி அக்காவின் கண்களில் அனல் தெறித்தது.

''அக்கா! திரீ ஸ்டார் கிளப்புக்குப் போகும் போது கர்நாடகமா உடை அணிந்து போக முடியுமா? கொஞ்சம் 'மாடர்னா'கத்தான் டிரஸ் செய்து கொண்டிருந்தேன். அதனால் என்ன அக்கா?''

''என், தலையையும் பாப் செய்து கொள்வதுதானே?''

''பரத நாட்டியம் ஆடுகிற நான் பாப் செய்து கொள்ள முடியுமா அக்கா? கொண்டை போட்டுக்கொண்டு போனேன்.''

''உன்னால் எப்படி இவ்வளவு அமைதியாகப் பேச முடிகிறது, அனுஷா? எனக்கு உள்ளம் கொதிக்கிறது. எல்லாம் உன் அப்பா, அம்மா கொடுக்கிற இடம்! பெற்றவர்கள் கவனிக்காதபோது நானாவது உனக்குப் புத்தி சொல்லத்தானே வேண்டும்?''

''அக்கா! ஏன் இப்படிக் குடி முழுகிப் போய்விட்டது போல் பதறுகிறீர்கள்? என்ன ஆகிவிட்டது இப்போது? ஏதோ வேடிக்கை பார்க்க வேண்டும் போலிருந்தது. ராம் கோபாலும் எனக்கு ''பர்த் டே டிரீட்'டை ஒரு நாள் முன்னதாகவே கொடுப்பதாகச் சொல்லி அழைத்துப் போனார். கொஞ்ச நேரம் டுவிஸ்ட் பண்ணினோம்.''

''ஐயோ கண்றாவியே! அது வேறேயா? மைதிலி அதைச் சொல்லவே இல்லையே, எனக்கு?''

''அவள் கிளம்பிச் சென்ற பிறகுதான் நானும் ராம் கோபாலும் டுவிஸ்ட்டில் இறங்கினோம். நான் பிரமாதமாக ஆடுவதாகச் சொல்லி எல்லோரும் பிரமித்து நின்று பார்த்தார்கள். எனக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. ஒன்பது வருடமாக பரத நாட்டியத்தை அசுர சாதகம் செய்கிற



வனுக்கு இந்த 'டுவிஸ்ட்' ஒரு பிரமாதமா? நீயே சொல்லு!''

''அனுஷா! நீ பேசுவது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. உன்னை எச்சரிக்க வேண்டியது என் கடமை. தூய பரத நாட்டியத்தை என் குருவிடம் கற்றுக் கொண்டாய். மேடையில் ஏறினாய். அப்புறம் சினிமா ஆசை உன்னைப் பற்றிக் கொண்டது. முக்காலணாப் பெறாத டான்ஸ் டைரக்டர்கள் சொல்கிறபடியெல்லாம் குதித்துக் கூத்தடிக்கிறாய். அதுவாவது வெள்ளித் திரையில் தானே, தொலையட்டும் என்றால் இப்போது நைட் கிளப்புக்கு வேறே போக ஆரம்பித்து விட்டாய். கல்யாணமாகாத ஒரு பெண், நடுநிசிக்கு மேல் ஓர் ஆடவனுடன் நைட் கிளப்பில் கூத்தடிப்பதா? பண்பாடு வேண்டாம்?'' சுந்தரி அக்காவின் குரல் கோபத்தில் கிரீச்சென்று ஒலித்தது. அவள் தேகமெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது.

நான் அக்காவை அன்புடன் அணைத்துக் கொண்டு போய் சோபாவில் அமரச் செய்தேன். ''அக்கா, நீங்கள் இப்படி அலட்டிக் கொள்ளக் கூடாது. அமைதியாக இருங்கள்!'' என்று சொன்னேன். பிரிஜ்ஜிலிருந்து ஆரஞ்சு ஜூஸ் எடுத்து வந்து கொடுத்து விட்டுப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன்.

''அக்கா! பரத நாட்டியத்தை நான் கருத்தோடு கற்றுக் கொண்டேன் என்று ஒப்புக் கொள்கிறீர்களா இல்லையா?''

''அதை யார் மறுக்கிறார்கள்? ஆனால் இப்போது...''

''அக்கா ப்ளீஸ்! கொஞ்சம் என்னைப் பேச விடுங்கள். நீங்கள் பரத நாட்டியம் ஆடுவதைப் பார்த்துவிட்டுத்தான் அந்தக் கலையில் நான் மோகம் கொண்டேன். அப்போது எனக்கு எட்டு வயது. உங்களை எனக்கு முன் பின் தெரியாத போதினும் கள்ளங் கபடமற்ற உள்ளத்துடன் நானாகவே உங்களிடம் வந்து, 'எனக்கும் ஆடச் சொல்லித் தாருங்கள், அக்கா' என்றேன். அப்போதே நீங்கள் புகழின் உச்சியில் இருந்தீர்கள். எவ்வளவு பெருந்தன்மையுடன் தங்கள் குருவையே எனக்குச் சொல்லித் தரச் சொன்னீர்கள். என் அப்பாவிடம் குரு தட்சிணை தரப் பணம் இருக்கவில்லை. ஆனால் நீங்கள் குழந்தையின் கலை ஆர்வத்தைக் கெடுக்கக் கூடாது. பணத்தைப் பற்றிக் கவலை வேண்டாம், நான் கவனித்துக் கொள்கிறேன் என்றீர்கள்....''

''அதெல்லாம் இப்போது எதுக்கு இழுக்கிறாய் அனுஷா? நான் சொல்ல வந்தது, நீ இன்னும் அடக்கமாக இருக்க வேண்டும் என்றுதான். தொன்மையான இந்தப் பாரதத்தின் பண்பாடும் கலாசாரமும் உன்னால் மேலும் சிறக்க வேண்டும். அப்படி இன்றி அதைக் குழி தோண்டிப் புதைக்கிற மாதிரியான காரியத்தை நீ செய்யக் கூடாது!''

''இப்போ எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது அக்கா! ஆனால் சிரித்தால் நீங்கள் தவறாக எடுத்துக் கொள்வீர்களோ என்று எனக்குப் பயமாகவும் இருக்கிறது. நான் கற்றிருக்கிற பரதக் கலை நீங்கள் போட்ட பிச்சை! பரத நாட்டியத்தை நான் கருத்தோடு கடந்த ஒன்பது வருடங்களாகக் கற்றுக் கொண்டு வருகிறேன் என்பதை நீங்களே ஒப்புக் கொள்கிறீர்கள். அக்கா, பாரதப் பண்பாட்டை சரியாகப் புரிந்து கொள்ளாத ஒருத்தி பரதக் கலையில் சிறந்து நல்ல பெயர் எடுக்க முடியுமா?''

''முடியாது அனுஷா, முடியவே முடியாது. பரதக் கலையே பாரதப் பண்பாட்டின் ஓர் உன்னதமான வடிவம்தான். இதனை நீ நன்றாகப் புரிந்து கொண்டிருந்தும் இப்படியெல்லாம் நடந்து கொள்வதுதான் என் வேதனையை அதிகரிக்கிறது. மைதிலி எனக்கு நேற்று ராத்திரியே ஃபோன் செய்துவிட்டாள். உன்னைப் பற்றிச் சொல்லி என் மனத்தைப் புண்படுத்திக் களிப்பதற்காகவே அவசரம் அவசரமாகக் கிளப்பிலிருந்து கிளம்பி வீடு திரும்பியிருக்கிறாள். தூங்கிக் கொண்டிருந்த என்னை டெலிபோன் மணி அடித்து எழுப்பியது. மைதிலி எப்படி மாய்மாலமாகப் பேசினாள்? 'உங்களிடம் சொல்ல வேண்டாம் என்று நினைத்தாலும் மனசு கேட்கலை' என்ற பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்து எவ்வளவு ரசித்து ரசித்து என் மனத்தில் வேதனையைப் பாய்ச்சினாள், தெரியுமா?''

இதைக் கேட்டபோது எனக்குக் கண்ணீரே வந்துவிட்டது. ''அக்கா, உங்கள் மனத்தை இவ்வளவு மென்மையானதாக வைத்துக் கொள்ளக் கூடாது. மைதிலி ஏதோ சொன்னாள் என்றால் அதனால் என்னைப் பற்றித் தவறான முடிவுக்கு வந்து விடாதீர்கள். இனிமேல் நைட் கிளப்புக்கு நான் போகக் கூடாது என்று நீங்கள் சொல்லவே வேண்டாம். ஏனென்றால் எனக்கு மறுபடியும் அங்கே போகிற உத்தேசமே இல்லை. முதல் தடவை ஏதோ ஓர் ஆவல் குறுகுறுப்புடன் போனேன். ஏதோ தமாஷ். அவ்வளவுதான். எனக்கு அந்தச் சூழ்நிலை ஒன்றும் பிடிக்கவே இல்லை.''

சுந்தரி அக்கா இன்னும் ஈரம் காயாத என் தலையைக் கோதிவிட்டாள். ''அதுதான் சமர்த்து. நீ பயிலுகிற பரத நாட்டியம் ஒரு தெய்வீகக் கலை; அதற்கு அபசாரம் செய்யாதே'' என்றாள்.

''அபசாரமாவது, ஒண்ணாவது அக்கா! அதையெல்லாம் என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. சினிமாவில் ஷேக் நடனம் ஆடுவதாலும் நைட் கிளப்பில் நான் டுவிஸ்ட் ஆடுவதாலும் பரத நாட்டியத்துக்கு என்ன அபசாரத்தைச் செய்து விட்டேன்? இதனால் எல்லாம் பாரதப் பண்பாட்டை நான் குழி தோண்டிப் புதைத்துவிட்டதாக ஆகிவிடுமா? பண்பாட்டை நினைத்துப் பரிதாபப்படுவதை விடுங்கள், அக்கா! அது ஒன்றும் அவ்வளவு சுலபமாகச் செத்துப்போய்விடாது. என்னைப் போல இன்னும் ஆயிரமாயிரம் அனுஷாக்கள் வந்தாலும் எத்தனையோ நூற்றாண்டுகளாக இங்கு வேரூன்றி இருக்கும் கலாசாரத்தை அசைக்க முடியாது! அதற்கு ஓர் ஆபத்தும் வந்துவிடவில்லை.''

சுந்தரி அக்காவுக்குத் திடீரென்று எப்படித்தான் அவ்வளவு கோபம் வந்ததோ? அவள் எழுந்த வேகத்தில் எதிரே இருந்த மேஜை அதிர்ந்து கண்ணாடி டம்ளர் கீழே விழுந்து நொறுங்கியது. அதில் பாக்கி இருந்த ஆரஞ்சு ஜூஸ் சிதறியது. ''நீ

எதிர்த்துப் பேசக் கற்றுக் கொண்டுவிட்டாய். நீ உருப் படப் போவதில்லை. நான் நல்ல எண்ணத்துடன் உனக்குப் புத்தி சொல்ல வந்தேன். இப்போது மனசு கசந்து போய்த் திரும்புகிறேன். எப்படியாவது தொலைந்துபோ!'' என்று கூறிவிட்டு விடுவிடு வென்று வாசல் வரை நடந்து விட்டாள்.

நான் அவளைப் பின்னாலேயே துரத்திக் கொண்டு ஓடினேன். வாசல் நிலைப்படியண்டை அவள் கரத்தைப் பிடித்து என் கண்களில் ஒற்றிக் கொண்டேன்.

'' அக்கா ! என் மனத்தில் தோன்றியதை ஒளிவு மறைவில்லாமல் சொன்னேன். தவறானால் மன்னியுங்கள். எந்தச் சபாவிலிருந்து அழைப்பு வந்தாலும் நான் மறுப்பதில்லை என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். பக்தி சிரத்தையுடன் அரங்கேறி, பரத நாட்டியம் ஆடி விட்டுத்தான் வருகிறேன். அதிலேதான் என் மனம் ஆனந்தப் பரவசமடைகிறது. உண்மையாகவே தெய்வ சன்னிதானத்தில் இருப்பது போன்ற உணர்வு எனக்கு அப்போது ஏற்படுவதுண்டு. சினிமாவில் நான் நடிப்பதும் ஆடுவதும் பணம் பண்ணுவதற்காகத்தான். அதிலே எனக்கு லயிப்பும் இல்லை; பிரியமுமில்லை.''



'' பின்னாலே பேசுகிறவர் களைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை.''

'' ஆமாம் ! எனக்குக்கூட பிடிப்பதில்லை. சங்கீதக் கச்சேரியிலும் சினிமாக் கொட்டகையிலும் நமக்குப் பின்னால் உட்கார்ந்துண்டு சள சளன்னு பேசுவதே சில பேருக்கு ஜோலி !''

சுந்தரி அக்கா வெடுக்கென்று தன் கரத்தை விடுவித்துக் கொண்டாள். ''சே! உன்னைப் போன்றவர்கள் ஆடுவதால் பரதக் கலைக்கே இழுக்கு! பரத முனிவர் இன்று உயிருடன் இருந்து உன் நடத்தையையெல்லாம் பார்த்தால் தற்கொலையே செய்து கொண்டு விடுவார்!'' இப்படிச் சொல்லி விட்டுச் சுந்தரி அக்கா வேகமாகச் சென்று வாசலில் காத்திருந்த டாக்ஸியில் ஏறிப் போய்விட்டாள்.

ஆகஸ்டு, 23, 1968

இரண்டு நாட்களாக எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. ஏதோ பிறந்த நாளன்று வந்த விருந்தினர்களுக்காகவும், புகைப்படக்காரர்களுக்காகவும் செயற்கைப் புன்னகை பூத்த முகத்துடன் நின்றேன். ஆனால் மனமெல்லாம் ஒரே வேதனையில் ஆழ்ந்து கிடக்கிறது.

சுந்தரி அக்கா எவ்வளவு காரமாகப் பேசி விட்டாள்! ஏன் அப்படி அவள் நடந்துகொண்டாள்? யோசித்து யோசித்துப் பார்த்தால் ஒரே ஒரு முடிவுக்குத்தான் வர முடிகிறது.

'அவளுக்கு என்மேல் பொறாமை!'

அக்கா புகழ் ஏணியின் உச்சியில்தான் இன்னும் இருக்கிறாள். பரதக் கலையில் ஓர் 'அதாரிட்டி' என்று இன்றைக்கும் சுந்தரி அக்காவை மதித்துப் போற்றுகிறவர்கள் ஏராளம். ஆனால் அவளை ஆடச் சொல்லி அழைக்கும் சபாக்கள் இல்லை; ஆடினால் பார்ப்பதற்கு ஆட்களும் இல்லை. எல்லாக் கலைஞர்களுக்குமே ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் ஏற்படுகிற கதிதானே இது? இதை உணர்ந்து இந்நிலையை ஏற்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொள்ள அக்காவுக்குச் சக்தி இல்லை. வருமானம் ஏதும் இப்போது இல்லாது போனாலும் சிரமமின்றிக் காலத்தை ஓட்டுமளவுக்கு முன்பு சேர்த்த சொத்து இருக்கிறது. சுந்தரி அக்கா கௌரவமாகக் கன்னியமாக வாழ முடியும். ஆனால் அவள் தன் வாழ்வில் இப்போது ஒரு சூன்யத்தைக் காண்கிறாள். காலா காலத்தில் கல்யாணம் என்று ஆகியிருந்தால் குடும்பப் பற்று என்றாவது ஏற்பட்டிருக்கும். ஆனால் அதெல்லாம் இல்லாத நிலையில், அவளைக் கவனிக்கவே ஆள் இல்லாத போது நான் மட்டும் மேலும் மேலும் பிராபல்யம் அடைந்து வருவதைக் கண்டு அவள் பொறாமைப்படுகிறாள். பத்திரிகைகளைப் பிரித்தால் என் பெயர், என் படம். என் வீட்டு வாசலில் எப்போதும் என் தரிசனத்துக்குக்காகக் காத்துக் கிடக்கும் நாலைந்து பேர். நகரின் மூலை முடுக்குகளிலெல்லாம் சுவர்களில் என் படத்தைத் தாங்கிய சினிமா விளம்பரங்கள்! இவையெல்லாம் 'நாம் கேட்பாரற்றுக் கிடக்கிறோமே' என்ற சுய பச்சாத்தாபத்தை அவளிடம் வளர்க்கின்றன. இதனால் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அவள் என்னைக் குற்றம் சொல்லிச் சாடுகிறாள். ஆம், சுந்தரி அக்காவுக்கு என்மீது பொறாமை!

ஆகஸ்டு 30, 1968

சுந்தரி அக்காவை நான் பார்த்துப் பத்து நாட்களாகி விட்டன. ஆனால் அவள் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் என்னைப் பற்றிப் பேசவே தவறுவதில்லை என்று அறிகிறேன். பலர் என்னிடம் வந்து அவள் என்னைப் பற்றிப் பழித்துக் கூறுவதைப் பற்றிச் சொல்கிறார்கள். ஒன்றுக்குப் பத்தாக மிகைப்படுத்தித்தான் சொல்கிறார்கள். ஆனால் ஓரளவுக்கு அவற்றில் உண்மை இல்லாமலா போகும்? பாரதத்தின் கலாசாரத்தைக் கொலை செய்கிறேனாம்; மக்களின் ரசனையையே கெடுக்கிறேனாம். இப்படி என்ன என்னவெல்லாமோ கண்ட பேர்களிடமெல்லாம் என்னைப்பற்றிப் புகார் செய்திருக்கிறாள் சுந்தரி. சினிமாவில் இரண்டு நைட் கிளப் காட்சிகளில் நான் தோன்றுவதால் தமிழ்ப் பண்பாட்டுக்கு என்ன ஆபத்து வந்துவிடும் என்று எனக்குப் புரியவே யில்லை. தமிழ்ப் பண்பாடு என்ன கிள்ளுக் கீரையா? தழைத்து வளர்ந்த ஆலமரமல்லவா அது? நினைக்க நினைக்க அக்காவின் அர்த்தமற்ற குற்றச் சாட்டு எனக்குச் சிரிப்பைத்தான் வரவழைக்

கிறது: அக்கா என்மீது இப்படிப் பொறாமைப் பட்டுச் சாடுவதால் எனக்கு அவள் மீது கோபம் இல்லை. அவளது கலைத் திறனில் நான் கொண்டிருந்த பெருமதிப்பு இம்மியும் குறையவில்லை. அவளது பொறாமையின் காரணத்தை நான் ஆராய்ந்து அறிந்திருப்பதால் எனக்கு அக்கா மீது அனுதாபம்தான் பொங்குகிறது.

செப்டம்பர் 5, 1968

சென்னையில் உள்ள பிரெஞ்சு நாட்டுப் பிரதிநிதி இன்று மாலை ஒரு விருந்து அளித்தார். அந்த விருந்தின்போது ஒரு மணி நேரம் நான் ஆட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். அயல் நாட்டவர் பலர் கலந்து கொண்ட அந்த விருந்தில் நம் நாட்டின் தொன்மையான பரதக் கலையின் சிறப்பை அவர்கள் எல்லோரும் உணரச் செய்ய ஒரு வாய்ப்புக் கிட்டியதில் எனக்கும் மகிழ்ச்சிதான்.

விருந்துக்கு சுந்தரி அக்காவும் அழைக்கப் பட்டிருந்தாள். விருந்துக்கு முன்பாக எல்லோருக்கும் பானங்கள் வழங்கப்பட்டன. மது அருந்தும் பழக்கமுடையவர்கள் மது அருந்தினார்கள். மற்றவர்கள் லேம் ஜூஸ், டொமேட்டோ ஜூஸ் என்று தங்களுக்கு விருப்பமானதை எடுத்துக் கொண்டார்கள். என் நடனமும் ஆரம்பமாகி விட்டது. அரங்கம் ஏதும் கிடையாது. அதிகக் கூட்டமும் இல்லை. அயல் நாட்டவர் சிலர் மத்தியில் அமர்ந்து சுந்தரி அக்கா என் நடனத்தின் நயங்களையும் நுணுக்கங்களையும் விவரித்துக் கொண்டிருந்தாள். அவள் என்னை, என் கால்களை, என் கரங்களை, என் முகத்தை என்று சுட்டிக் காட்டிப் பேசியதிலிருந்து இதை நான் எளிதில் ஊகித்தேன். ஆனால் இடை இடையே அவள் சிரித்தது எனக்கு வேதனை அளித்தது. என் நடனத்தை அவள் சிலாகித்துக் கூறுகிறாளா அல்லது அந்த அந்நியரிடம் என்னைப் பரிகசித்துப் பேசுகிறாளா? இது புரியாமல் மருண்டேன் நான். நேரம் செல்லச் செல்ல அக்காவின் சிரிப்பும் அதிகமாயிற்று. அதன் ஒலியும் பெரிதாயிற்று. என்னவோ ஒரு சோர்வு என் மனத்தை ஆட்கொள்ளவே நான் முதலில் நினைத்திருந்ததைக் காட்டிலும் சுருக்கமாகவே நடனத்தை முடித்துக் கொண்டுவிட்டேன். நடனம் முடிந்து விருந்து ஆரம்பிப்பதற்கு முன்னால் விருந்தினர் பலரும் தோட்டத்தில் புல் வெளியில் கையில் பானத்துடன் நின்றபடி அளவளாவிக் கொண்டிருந்தார்கள். பிரஞ்சுப் பிரதிநிதி என்னைப் பலருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

அக்காவை நெருங்கியபோது ''இவரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கத் தேவையே இல்லையல்லவா?'' என்றார்.

நான் இலேசாகச் சிரித்தேன்.

அப்போது சுந்தரி அக்கா, ''இவளை எனக்கு அறிமுகம் செய்து வைக்கத் தேவையில்லை தான். பாரதக் கலாசாரத்தை அழிக்கவே பிறந்தஇவளை எனக்குத் தெரியாதா என்ன?'' என்றாள்.

நான் அப்போது துடித்த துடிப்பு! எனக்கு வந்த கோபம்! அடைந்த வேதனை!

நான் இல்லாத சமயத்தில் என்னைப் பற்றி அக்கா சிலரிடம் இழிவாகப் பேசியது என் காதில் விழத்தானே செய்தது? ஆனால் இப்போது என் எதிரிலேயே என்னை இழிவு படுத்தி.... அதுவும் அயல் நாட்டவர் முன்... அவமானம் என்னைப் பிடுங்கித் தின்றது. அக்காவை அறைந்தே விட வேண்டும் போல் கை பரபரத்தது. ஆனால் அதே சமயம் இன்றைய என் வாழ்க்கை, செல்வம், புகழ் எல்லாம் அக்கா போட்ட பிச்சை என்ற நினைவு வந்து என்னைப் பேச வொட்டாமல் செய்து விட்டது. நான் பல்லைக் கடித்துக் கொண்டு பதில் பேசாது நின்றேன்.

பிரெஞ்சுப் பிரதிநிதி என்னிடம் பரிதாபப் பட்டோ என்னவோ, சுந்தரி அக்காவைப் பார்த்து, ''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? இன்று இவள் ஆடியது எவ்வளவு அபாரமாக இருந்தது? எனக்குப் பரதக் கலை பற்றி நிரம்பத் தெரியாதுதான். ஆனால் இவள் நடனம் மிக உயர்ந்தது என்பதில் எனக்குச் சிறிதளவும் சந்தேகம் இல்லை'' என்றார்.

''சே! இதைப் பரத நாட்டியம் என்றா சொல்கிறீர்கள்? இவள் சினிமாவில் சேர்ந்து கூத்தடித்தும் நைட் கிளப்புக்கு அடிக்கடி போய் 'ட்விஸ்ட்' நடனம் ஆடியும் பரத நாட்டியத்தின் புனிதத் தன்மையையே மறந்து விட்டாள். இவளுக்குப் பரத நாட்டியம் எப்படிவரும்? பாவம் எப்படி இவள் முகத்தில் தோன்றும்? எல்லாம் போச்சு! இவள் நன்றாக ஆடிய காலம் பழங் கனவாய் மறைந்து போச்சு! பாரதப் பண்பாட்டுக்காகப் பரிதாபப்பட்டு இனி ஒரு குரல் அழலாம்!'' என்று சொன்ன அக்கா உண்மையிலேயே விசும்பி அழுவதைப் பார்த்து, சீறிக் கொண்டு வந்த என் கோபம் மறைந்து திகைப்பு அதனிடத்தைப் பற்றிக்கொண்டது.

அப்போதுதான் நான் அவள் கரத்திலிருந்த கோப்பையை நன்றாகக் கவனித்தேன். ஒரு வேளை... ஆமாம் அப்படித்தான் இருக்க வேண்டும்! சுந்தரி அக்கா இப்படித் தாறுமாறாக நடந்து கொள்ளக் காரணம் அதுதான்! பானத்தில் மிதந்தது ஒரு எலுமிச்சம் பழத் துண்டுதான் என்றாலும் அது லேம் ஜூஸ் அல்ல, மது! ஜின்!

என் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

இதற்குள் சுந்தரி அக்கா, ''பாரதப் பண்பாடே உனக்கு உலை வைத்து விட்டார்கள்!'' என்று சொல்லியபடியே தன் கையிலிருந்த பானத்தை வானத்தை நோக்கி உயர்த்தினாள்.

அந்த விநாடியில் சுந்தரி அக்கா அடிக்கடி சொல்லி வருவது போல் பாரதப் பண்பாட்டுக்கு ஆபத்து வந்தே விட்டது என்பதை நன்றாக உணர்ந்து கொண்டேன் நான்.

சுந்தரி அக்காவின் கரம் தாழ்ந்தது. கோப்பையை வாயருகே கொண்டு போய் அருந்தினாள். அவள் தலை சுழன்றது; கால்கள் நடுங்கின; அப்படியே புல் தரையில் விழுந்து உருண்டாள்.

பாரதப் பண்பாடு சரிந்து விட்டது.

சுற்றிலும் அயல் நாட்டவர்!

வருங்காலத்தை உருவாக்குவதற்காக சேமிக்கக் கற்றுக்கொடுங்கள் அவர்களுக்கு!

அவர்களுக்குக் கவலையில்லாத வாழ்வு. நாளைக்கோ?
வருங்கால உணர்வை அவர்கள் உள்ளத்தில் புகட்டுங்கள்.
சேமிக்கக் கற்றுக் கொடுங்கள். ஆம், ஸ்டேட் பாங்கிலே.

சேவை புரிவதற்கே
ஸ்டேட் பாங்க்



டில்லிவாசிகள் ஸ்கூட்டரை அழைக்கும் செல்லப் பெயர் 'சைத்தானி கோடா'. தெருவில் போகும் சைக்கிள்களுக்கும் பாதசாரிகளுக்கும் மட்டுமா, ஸ்கூட்டர் ஓட்டிகளுக்கும் அல்லவா அது எமனாக இருக்கிறது! எருமை மாட்டை விட்டு விட்டு ஸ்கூட்டரில் வருகிறாரா எமன்? ●



எமன் வருகிறான் ஸ்கூட்டரிலே!

சுயாக பெற்ற அன்று இருந்ததைவிட இன்று எட்டு மடங்கு மோட்டார் வாகனங்கள் — 98,800 — இருக்கின்றன டில்லியில். இவற்றுள் ஸ்கூட்டரும் அதன் உறவினரும் நாற்பதாயிரம்.

ஸ்கூட்டர் அதன் பிறந்த வீடான இத்தாலி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி யிருக்கலாம். ஆனல் நமது நாட்டு நகரங்களில் அது எமதூதனுகத்தான் விளங்குகிறது. பாருங்களேன், உலகத்தில் இன்று ஆ இந்தியாவேதான் முதல் இடம் வகிக்கிறது — மோட்டார் வாகன விபத்துச் சாவுகளில்! பத்தாயிரம் வண்டிகள் இருந்தால் இந்தியாவில் விபத்துச் சாவு 80; இதே விகிதம் இங்கிலாந்தில் 10; அமெரிக்காவில் ஐந்துதான்.

போன வருஷம் டெல்லித் தெருக்களில் 8347 விபத்துக்கள் நிகழ்ந்தன. 41 வண்டி ஓட்டிகள் இறந்தனர். இதில் ஸ்கூட்டர்—மோட்டார் சைக்கிள்காரர்கள் மட்டுமே முப்பத்தைந்து பேர்!

இந்த விபத்துக்கள் பற்றித் தீவிரமாக ஆராய்ந்த மத்திய சாலை — ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த திரு என். எஸ். சீநிவாசனும் திரு பி. எம். சர்மாவும் வெளியிட்டுள்ள சில தகவல்களும் முடிவுகளும்:

ஸ்கூட்டர் போன்ற இரட்டைச் சக்கர மோட்டார் வாகனங்கள் முதலில் சாயாமல் நிமிர்ந்து நிற்பதற்கே பெரும் முயற்சி தேவை. அவற்றின் மீது அமர்ந்திருப்போருக்குப் பக்க வாட்டில் ஒன்றும் வசதியோ, மேலே கூரையோ கிடையாது. ஆகவே விபத்து நேரும்போது இவர்கள் காரில் இருப்பவரைக் காட்டிலும் விரைவிலும் எளிதிலும் அதிகமாகவும் அடிபட்டுக் கொள்கிறார்கள். வண்டி வேகமாக ஓடினல், விபத்தின்போது வீழ்ச்சியும் அதிகம்தான்!

ஒரு கசப்பான உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆராய்ந்து பார்த்த விபத்துக்களில் கிட்டத்தட்ட பாதி கேசுகளில் ஸ்கூட்டர் ஓட்டிகள் மீது தவறே இருப்பதில்லை. எதிரே வரும் வண்டிகள் மீதுதான் தவறு. ஆனல் என்ன கவனமாக ஓட்டினலும் விபத்தின் பலனை ஸ்கூட்டர் ஓட்டி அல்லவா அனுபவிக்க வேண்டியிருக்கிறது!

விபத்துக்களில் நாலில் ஒன்றுக்குக் காரணம் ஸ்கூட்டர் ஓட்டியின் மூன்று முக்கியத் தவறுகள்: கண்மூடித்தனமாக ஓட்டுவது; அதிவேகம்; சாலை விதிகளைப் புறக்கணிப்பது.

ஐந்து விபத்துக்களில் ஒன்று பாதசாரியால் ஏற்படுவதுதானும்.

பல விபத்துக்கள் சாலை முனைகளில் வலப்புறம் திரும்பும்போதே ஏற்படுகின்றனவாம்.

இன்னும் கவனித்துப் பார்த்தபோது, நேரான அகலமான பாதையில் ஏற்பட்ட விபத்துக்களிலேதான் மரணமடைந்தோர் அதிகம். மற்ற சாலை முனை விபத்துக்களில் வெறும் காயத்தோடு போயிற்று.

விபத்துக்களையும் அதனல் ஏற்படக்கூடிய பயங்கர விளைவுகளையும் குறைக்க ஆராய்ச்சிக் கழகம் கூறும் யோசனைகள்:

1. ஸ்கூட்டர் ஓட்டிகளும், பின் செல்வோரும் எஃகுத் தொப்பி அணிய வேண்டும்.

2. கார்களில் போல ஸ்கூட்டரிலும் பின்புறம் வரும் வண்டிகளைப் பார்க்க வசதியாகக் கண்ணுடி வேண்டும்.


3. விபத்தில் வண்டி சாய்ந்தால் ஓட்டியின் காலை நசுக்காமலிருக்கும் வகையில் முன்புறமும் பின்புறமும் எஃகு வளையம் பொருத்த வேண்டும்.

4. வண்டியோட்டி தவருமல் ஒழுங்காக, ஓட்டத்தைக் குறைக்கும்போதும் திரும்பும் போதும் நிற்கும்போதும் அதற்குரிய சைகைகளைக் காட்டி வரவேண்டும்.

5. டிராபிக் பிரிவும், இன்சூரன்ஸ் கம்பெனிகளும், ஸ்கூட்டர் தயாரிப்பாளரும், மோட்டார் கழகங்களும், பெட்ரோல் நிறுவனங்களும் அக்கறை எடுத்து வண்டியோட்டிகளுக்கு நல்ல பயிற்சி அளிக்கலாம்.

தகவல் : **தம்பி சீனிவாசன்**

ஆதாரம் : **டைம்ஸ் ஆப் இந்தியா**


இதோ உங்கள்
வனப்புக்குப் புதிய பூவிதழ்-மென்மை
தருவது புதிய
ஹிமாலயா
புக்கே ஸ்நோ
HIMALAYA
BOUQUET
SNOW
ரோஜா மணமுடனும்
வருகிறது இன்று

பொன்னிவனத்துப் பூங்குயில்



கொத்தமங்கலம் சுப்பு

அத்தியாயம் 45

"ஆடும் குறத்தி வந்தாள்!"

குயிலியின் அறைக்குள் கூட்டமே இல்லை. அவளும் அவளுக்கு உதவி புரிய அவளுடைய சின்னம்மாளும்தான் இருந்தார்கள். ஆனால் திரு விளக்கின் உதவியால் ஓர் அறையே ஒளி பெறுவது போல் அந்த அறை முழுவதும் குயிலியின் அழகு நிரம்பியிருந்தது.

சிறு மலரை எடுத்துச் சிலையின் காலடியில் வைத்தவுடன் அம்மலர் பெறுதற்கரிய அழகைப் பெறுகின்றது. நாலு இதழ் நந்தியாவட்டைதான். அதிலும் ஒற்றைப் பூதான். அந்த விபூதி நம் வினைகளையே தீர்க்கிறது. கலைக்காக எளிய உடையில் நின்றாள் குயிலி. ஆனால் அந்த எளிய உடையும் கலையுடன் கலந்திருந்ததால் கண்கொள்ளாத எழிலைத் தந்தது. பாவம், அவளோ ஏழை. தெருவில் பாடித் திரிபவள். பட்டுப் புடவைக்கு எங்கே போவாள் ?

அவளது அறையிலும் ஒரு முட்டை வடிவக் கண்ணாடி இருந்தது. இது அவளுக்காகக் கொடுக்கப்பட்டதல்ல. அவள் அரண்மனையில் ஆடப் போவதால் அரண்மனையின் அழகை அவள் கெடுத்து விடாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கொடுக்கப்பட்டது. கண்ணாடி முன்னே குயிலி நின்றாலும் அவள் கண்ணாடியைப் பார்க்கவில்லை. கடந்த காலத்தின் நிழலைத்தான் அவள் தன் மனக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இந்தச் சிங்கன் யார்? இது வந்து புகுந்து நம் வாழ்வையே மாற்றிவிட்டதே. அரண்மனைக்குள் ஆட வருவேன் என்று நான் கனவிலாவது நினைத்தேனா ? ஏதோ வேடிக்கையாக ஆட்டம் கற்றுக் கொண்டேன். அது என்னைப் புகழ்ந்து புகழ்ந்து என் மண்டையில் கனம் ஏற வைத்து விட்டது. திடீரென்று ஒரு நாள் சாரங்கபாணி கோயிலில் நாட்டிய பொம்மைகளைப் பார்க்கும்போது, உன் ஆட்டத்தைத் தெருவில் உள்ளவர்களா பார்ப்பது. அரண்மனையார் பார்த்தா உன்னையும் சிலை அடித்து வைப்பார்களே என்று சொல்லிச்சு. விளையாட்டுக்குத்தான் சொல்லுதாக்கும்னு நினைத்து, 'அரண்மனையிலும் மனிசங்கதானே பார்க்கப் போறாங்க? அங்கே ஆடறது மட்டும் கஷ்டமா ?'ன்னு கேட்டேன்.

இப்படி அரண்மனையிலேயே கொண்டாந்து நிறுத்திவிடும் என்று தெரியாதே? யாராவது கேட்டால் மோகன முத்துரங்கம் கத்துக் கொடுத்தார்னு சொல்லு என்று வேறே சொல்லுது.

அது யார் அந்த மோகனரங்கம்? இந்தச் சிங்கம்தான் மோகனரங்கமோ? இது பெரிய ஆளாக இருக்கும் போலே இருக்கே !

சின்னத்தம்பி எங்கே டோலக் தட்டினாலும் எனக்குத் தெரியும். சிட்டுக் குருவி எங்கே கத்தினாலும் குருவின்னு தெரியும்? ஏன்? இரண்டு பேருக்கும் ஒரு சொல்லைத் தவிர வேறே சொல் தெரியாது.

அப்படி இருந்த சின்னத் தம்பி இப்ப எப்படி வாசிக்கிறான். மத்தளத்திலே நர்த்தனமே தெரியுதே. அஞ்சு விரலிலே ஏழு சுரமும் பேசுதே. சட்டாம்பிள்ளைக்கும், முந்திரிக்கொட்டைக்கும் கூட்டுப் போட்டாலும் பாட்டு வராது. இப்ப அவங்க ரெண்டு பேரும் தாளத்திலே புலி ஆகி விட்டாங்க. இவ்வளவும் இந்தச் சிங்கனாலேதானே !

தெருவில் ஆடிக்கிட்டுத் திரிந்த நமக்கும் நம் கூட்டத்துக்கும் ஒரு பிழைப்பைக் கத்துக் குடுத்துட்டாரு. புண்ணியவான். இனி நமக்கென்ன கவலை ?

பாருவே, அதன் புத்திசாலித்தனத்தை ! அது அரமனை. குயிலி, உனக்கு ஒரு பொம்புளைத் துணை வேணும். யாராவது இருக்காங்களான்னு கேட்டுது. நான் சின்னம்மாவைச் சொன்னேன்.

எப்படியோ ஒரு காகம் ரெண்டு காகமா மிச்சம் பிடிச்சுச் சின்னம்மா கண்ணுலே பத்துக் காசைக் காட்டிக் 'குயிலி கூப்பிடுறா. ஒருத்தர்கிட்டேயும் சொல்லாமல் வா'ன்னு சொல்லிச் சின்னத் தம்பியை விட்டுக் கூட்டியாரச் சொன்னாரு.

நான்கூட அது எதுக்கு? அப்புறம் மாமன் வருவான். பஞ்சவர்ணம் படையெடுப்பான் என்று நினைச்சேன். ஆனால் இந்தச் சின்னம்மா இல்லையேயானால் யார் நமக்கு இவ்வளவு அழகாப் புடவை கட்டிவிடுவாங்க?''

ஒரு முறை குயிலி தன்னைக் கண்ணாடியில் பார்த்தாள். அந்த வண்ணச் சேலையை அழகாகக் கொசுவி இடையில் கச்சிதமாகக் கட்டியிருந்தது மிக அழகாகவே இருந்தது. ஆடும் போது எப்படி உட்கார்ந்தாலும் பார்ப்பவர் மனத்தில் காமவிகாரத்தை உண்டாக்கக் கூடியதாக இல்லை. இடைக் கச்சை மட்டுமா ? அவள் கட்டியிருந்த கச்சுமே அப்படித்தான் இருந்தது.

''அடேயப்பா, இந்தச் சிங்கம் குயிலியைக் கோயில் பொம்மையாக் கிட்டுதே !'' என்று ஒரு முறை அவனை நினைத்தாள். ''ஆட்டத்தைப் பற்றி நினைப்பதா ? அவனையே நினைத்துக் கொண்டிருப்பதா ? ஏன் இப்படி என் எண்ணம் அவனையே சுற்றிக் கொண்டிருக்கிறது?'' குயிலி சிரித்தாள். ''நான்தான் இப்படி அடிக்கடி நினைக்கிறேன்? அது என்னை நினைக்குமா ? அதிலே என்ன சந்தேகம்? அதற்கு எப்போதும் என் நினைவுதான். நாயக நாயகி பாவத்தை அது சொல்லிக் குடுத்தா நான் முழுக்கக் கேட்டுக்கிட்டிருக்கலாமே ! ஆமா, இப்ப அது எங்கே? ஏதாவது நகை வாங்கப் போயிருக்குமோ?'' என்று அவனை எண்ணிய போது கையில் ஏராளமான மாலைகளுடன் உள்ளே நுழைந்தான் சிங்கன். அவனும் அன்று ஜோராக உடுத்தியிருந்தான்.

''ஏன் அய்யா, இதெல்லாம்? இவ்வளவு பூ எதற்கு?'' என்றாள் குயிலி.

''அது ராசா வூட்டுப் பொண்ணு. ஏராளமா நகை போட்டுக்கும்.... அதோட நகையிலே போட்டி போட முடியுமா ? ஏழைக்குப் பூவுதான் நகை. இதிலே கைக்கு பாஜு பந்து, கடகம், தலைக்கு ஜடையலங்காரம் எல்லாம் இருக்குது'' என்றான் அவன்.

அவன் முகத்தில் இருந்த கவலையையும் பரபரப்பையும் கண்ட குயிலி அவனையே பார்த்தாள். தனக்காக இவ்வளவு அக்கறையுடன் பூவைச் சுமந்து கொண்டு வந்த அவனைக் கண்டு அப்பூவையின் விழி ஏதும் புரியாமல் விழித்தது.

'' சிங்கா, நீ பாடுற போது மாலை போட்டுக்கிட்டுப் பாடுவாயில்லை ?'' என்று கேட்டாள்.

''நானு? மாலையா ? ஆம்பிளைக்கு ஏது அத்தனை யோகம்? ஆடுறவதான் மாலை கீலை போட்டுக்கிட்டு ஆடுவே. நான் தாளம் போடுறவன். உன் கூடவே ஒடுவேன் !'' என்று சிரித்தான் சிங்கன்.

''அப்படியானால் இந்த ஒரு மாலையை மட்டும் இங்கேயே வைச்சுடு'' என்று உத்தரவிட்டாள் குயிலி. சிங்கனின் முகம் மலர்ந்தது. ''ஏன் குயிலி, அது எனக்கா?'' என்று அவன் அருகில் சென்றான் சிங்கன்.

அதே நேரத்தில் முத்துவும் சின்னப் பெருமாளும் உள்ளே நுழைந்தனர்.

''ஆ! பியூட்டிஃபுல்! இது அழகு!'' என்றான் முத்து.

சிங்கனும் குயிலியும் சட்டென்று திரும்பினார்கள். முத்துவையும் சின்னப் பெருமாளையும் பார்த்துத் திடுக்கிட்டார்கள். அயலார் வரவே குயிலி அவசரமாகத் தன் கைத் தழும்பை ஒரு சகலாத்துப் போர்வையால் மூடிக் கொண்டாள். போர்வையால் அழகை மூட முடியுமா ? அந்தப் பட்டு அழகை எட்டுப் பங்கு அதிகப்படுத்தியது.

''நீங்கள் யார் என்று தெரியவில்லையே ?'' என்றாள் குயிலி.

சின்னப் பெருமாள் பதிலே பேசவில்லை. அவர் குணமே அப்படித்தான். அழகைப் பார்த்தால் கொஞ்ச நேரம் அப்படியே சொக்கி விடுவார்.



குயிலியின் அழகு புதிய தாமரை போல் இயற்கைப் பொலிவுடன் இருந்ததில் அவர் மயங்கினார். அவள் ஆடவே வேண்டாம். வந்து நின்றாலே இவள்தான் ஜெயிப்பாள் என்று அவர் மனம் கூறியது.

ஏதோ அமைச்சருக்குள்ள கூரிய அறிவுத் திறன் என்று கருதிவிட வேண்டாம். எலுமிச்சம் பழத்தைக் காட்டிலும் மாதுளம் பழம் இனிப்பு என்பதைச் சொல்ல அமைச்சர் மூளையா வேண்டும்? அவர் பார்வை குயிலிக்குப் பிடிக்கவில்லை.

''என்ன, ஐயா! நீ முந்தி பிந்திப் பொம்பளையைப் பார்த்ததே இல்லையா? ஏன் இப்படிக் கடிச்சுத் தின்னுடறாப் பலே பார்க்கிறே?'' என்றாள் குயிலி.

''உஷ்! மரியாதை, மரியாதை. இவர்கள் யார் . தெரியுமில்லையா? இவர்தான் அமைச்சர் சின்னப்பெருமாள் அவர்கள்'' என்று கையை நீட்டி ஆட்டிப் பேசினான் முத்து.

''அட சும்மா இரு ஐயா! அமைச்சரே இப்படிப் பார்த்தா அரசர் எப்படிப் பார்ப்பாரோ? எனக்கு வேண்டாமய்யா, உங்க அரண்மனையிலே ஆட்டம்!'' என்று சரேலெனத் திரும்பினாள் குயிலி.

''இல்லை, குயிலி! இங்கே அரசர் கிடையாது. அரசியார்தான் இருக்கிறார்கள். நீ பயமில்லாமல் ஆடலாம்'' என்றான் சிங்கன்.

சின்னப் பெருமாளுக்கு மயக்கம் தெளிய இவ்வளவு நேரம் ஆயிற்று. அடுத்த கேள்வியாக, ''நீங்க எங்கே இறங்கியிருக்கீங்க?'' என்றார் அவர்.

'என்னடா விலாசத்தை விசாரிக்கிறானே?' என்று யோசித்தான் சிங்கன்.

''நாங்களா? அது தெரியாதா? நாங்க போட்டியிலே இறங்கியிருக்கிறோம்'' என்றாள் குயிலி.

அவள் பேச்சு அவரை மேலும் கவர்ந்தது. ''மிஸ்டர் முத்து, கொஞ்சம் வெளியே வாங்க!'' என்று அவரைக் கூட்டிக் கொண்டு வெளியே நடந்தார். வாசற்படி அருகில் சென்று சுற்றிலும் ஒரு முறை யாரும் இல்லையே என்று பார்த்து விட்டு ரகசியமாக, ''நீங்க என்ன நினைக்கிறீங்க? ரெண்டு பேரையும் பார்த்தீங்களே, இந்த ரெண்டுலே எது ஜெயிக்கும்?'' என்று கேட்டார்.

முத்து சிறிது யோசித்தான். எது ஜெயிக்கும் என்று அல்ல. எதைச் சொன்னால் நாம் ஜெயிப்போம் என்று தான் யோசித்தான். ''இதிலென்ன சந்தேகம்? மயில் தான் ஜெயிக்கும். நான் அப்பவே சொன்னேன் என்று நானே இளவரசியிடம் சொல்லுங்கள்'' என்றான்.

''மிஸ்டர் முத்து, இப்ப உங்க மனம் பேசலே. பயம் பேசுது. நிச்சயம் இந்தப் பெண்தான் ஜெயிக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆனதாலே இந்தப் போட்டியே நடக்கக் கூடாது. இந்தாங்க, இதைக் கொடுத்து அந்தப் பொண்ணை ஆட விடாமல் செய்து விடணும்'' என்று சொல்லிக் கொண்டே அவன் கையில் பத்து மோகராக்களைத் திணித்தார் சின்னப் பெருமாள்.

''இவ்வளவுதானே! இங்கேயே இருங்கள். இதோ வந்து விட்டேன்'' என்று கூறிவிட்டு உள்ளே நுழைந்தான் முத்து. அந்த அவசரத்தில் அதிலே சரி பாதியைத் தன் பையில் தள்ளிக் கொண்டு கையில் ஐந்து மோகராக்களுடன் குயிலியின் அருகில் வந்தான் முத்து.



''இந்தாம்மா !'' என்றான்.

''இங்கே பேசுங்க!'' என்று சிங்கன் குறுக்கே வரவே, எங்கே பேசினா எனக்கென்ன, இந்தாப் பாரு அய்யா. உங்க பொண்ணு போட்டியிலே தோற்கத்தான் போகுது. இப்படி ஓர் அழகு தோற்று அவமானப்படுவது எங்க மந்திரி ஐயாவுக்குப் பிடிக்கல்லே. இந்தா, உனக்கு ரெண்டு மோகரா தரகு தர்றேன். அதன் கையிலே ஒரு மோகராவை வைத்து இப்பவே நடையைக் கட்டச் சொல்லு. அரண்மனையாருக்கு நான் சமாதானம் சொல்லிக்கிறேன்'' என்று மீதம் இருந்த இரண்டு மோகராவையும் தன் பையில் போட்டுக் கொண்டான் முத்து.

சிங்கன் இந்த ஒரு சோற்றிலேயே முத்துவைப் பதம் புரிந்து கொண்டான்.

''ரொம்ப நன்றிங்க. நாங்க பணத்துக்காக ஆட வரலே. அது தெருவிலே திரியற பொண்ணுதான்..... தோற்றாலும் அங்கேதான் போகப் போகுது. அதனாலே அதுக்கு ஒண்ணும் நஷ்டமில்லே. அரண்மனைச் செல்வியை எதிர்த்தோம்கிற பேரு இருக்கில்லே?''

''அரண்மனைச் செல்வி என்றால் அவ இதுமாதிரி தாசி இல்லே. அது தான் இளவரசி !'' என்று இரைந்தான் முத்து.

''அப்படியா, அப்படியானால் இரட்டைச் சந்தோஷம். ஒரு இளவரசியை ஏழை எதிர்த்தாள் என்றால் அதுவே பெருமைங்க. போய்ட்டு வாரீங்களா ?'' என்று அவன் கையை இறுகப் பிடித்துக் கதவு வரை கொண்டு வந்து விட்டுக் கதவைப் படார் என்று சாத்தினான் சிங்கன்.

இந்தச் சத்தத்தில் சின்னப்பெருமான் திடுக்கிட்டார்.

துபாஷ் முத்து 'ஷேக் ஹாண்ட்' கொடுத்துப் பழகியவன். எந்தக் கை என்ன செய்யும் என்று அவனுக்குத் தெரியும். ஆதலால் இப்பொழுது பிடித்த கை இரும்புக் கை. இத்துடன் அதிகமாக விளையாடக்கூடாது என்று தெரிந்து கொண்டான். ஒரு கணத்தில் முகத்தை மாற்றிக்கொண்டு சின்னப்பெருமானிடம் வந்தான்.

'' என்ன ஆச்சு ? ஏதாவது சண்டையா?'' என்றார் அவர்.

''ஆமாங்க. பெரிய ஆளாக இருக்கிறான். பத்து மோகரா பத்தாதுங்கிறான். எதற்கும் அந்தப் பொண்ணுகிட்ட ரகசியமாச் சொல்லிப் பார்க்கிறேன் என்றுதான் கதவைச் சாத்தினான்'' என்று ஒரு போடு போட்டான் முத்து. பத்து மோகராவில் அவன் புத்தி பளபளப்பானதில் ஆச்சரியமில்லை.

''குயிலி, இங்கே ஏதோ மோசம் நடக்குது. உன்னை ஆட விடாமல் செய்ய நினைக்கிறாங்க'' என்றான் சிங்கன்.

''அவன் யாரவன் ? என்னைத் தடுக்கிறவன்? இனிமே நீ தடுத்தாக்கூட நான் கேட்க மாட்டேன், சிங்கா!'' என்றாள் அவள்.

''அடே, உனக்கு அத்தனை தன்னம்பிக்கையா ?''

''சிங்கா, நான் ஆடல்லே. இங்கே நம்ம தஞ்சாவூரே ஆடுது. அத்தனை கோவிலும் இங்கே போட்டிக்கு வந்திருக்குது. மேநாட்டு ஆட்டம் உயர்வு நம்ம கீழ் நாட்டு ஆட்டம் மட்டம் என்று பேச்சு வர விடக்கூடாது. நான் இங்கே என் கலையைக் காப்பாத்த ஆடல்லே. அதைக் காத்த எங்க மகாராசா பெருமையைக் காப்பாத்த ஆடறேன். சிங்கா, நீ தடுத்தாலும், என் தாய் தடுத்தாலும் நான் ஆடத்தான் போறேன்!'' என்றாள் குயிலி. அப்போது பம்பம் என்று எக்காளங்கள் முழங்கின. அதை அடுத்துத் தர்பாரிலிருந்து ஒரு அறிவிப்பு கேட்டது:

''எச்சரிக்கை ! எச்சரிக்கை !

இன்றைய ஆட்டப் போட்டிக்கு நமது மகாராணி மீனாட்சி தேவியார் அவர்கள் நீதிபதியாக அமரவில்லை. அவரது அருமை மகளார் அதில் ஒரு தரப்பினராகப் போட்டிப் போடுவதால் தாம் நீதி வழங்குவது சரியாக இராது என்று கருதி விட்டார்கள். ஆதலால் அவர்கள் சபைக்கு வரவில்லை.''

இதற்குள் கூட்டத்தில் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. ''அப்படியானால் ஆட்டம் இல்லையா ?'' என்ற குரல் எழுந்தது. அதே கேள்வி குயிலி, சிங்கன் இருவர் மனத்திலும்கூட எழுந்தது.

ராயசம் மறுமுறை திருமந்திர ஓலையைப் படித்தார்.

''ஆதலால் இந்த நாட்டியப் போட்டிக்கு நடுவராக ஆடல் பாடலில் வல்லவரும், சங்கீத சாராம்ருதம் என்ற அரிய இசை நூலை யாத்தவரும் ஆகிய நமது மதிப்புக்குரிய தஞ்சை நாட்டு மன்னர் திரு துளசி மகாராசா அவர்கள் தலைமை தாங்குவார்கள்'' என்று கூறினார். உடனே டமடமவென்று நகரா முழங்கியது.

கட்டியக்காரர்கள் பின் வருமாறு கூறினார்கள்:

ராபின் ப்ளூ
உலகத்தில் மிக
ஏராளமாக விற்பனை
யாகும் நீலம்

உலகம் முழுதும் சுத்தமான அல்
ட்ரா மரைன் ப்ளூ என்றும்,
வெண்மை தருவதில் பிரபல
மானது என்றும் புகழ்பெற்றது.
ராபின் அசல் ப்ளூ ஆனபடியால்
உங்களுக்கு இயற்கையில் கவர்ச்சி
யான வெண்மை தருகிறது. அத்
துடன் ஒரு பாக்கெட் பல சலவை
களுக்கும் பயன்படுகிறது.
மேலும் ராபின் ப்ளூ துணிகளை
கெடுக்காது என்பதையும்
நினைவில் வைத்துக்
கொள்ளுங்கள்.

போலிகள் ஜாக்கிரதை.
அசல் ராபின் ப்ளூவையே
வற்புறுத்திக்கேளுங்கள்.





ராபின் ப்ளூ உங்கள்
துணிகளுக்கு இயற்கையில்
கவர்ச்சிகரமான
வெண்மையை சேர்க்கிறது



ARBC-29 TA11

"சத்ரபதி மன்னன் வந்தான். சமர கோலாகலன் வந்தான். தஞ்சை புரியாளும் தாடாளன் வந்தான். வெஞ்சமரில் வீரன் வந்தான். வந்தான், வந்தான்!"

எக்காள வாத்தியங்கள் முழங்க அரியாசனத்தில் வந்து அமர்ந்தார் துக்கோஜி மன்னர். இந்தக் குரலைக் கேட்டு மனத்தால் கும்பிட்டாள் குயிலி. இடிவிழுந்தவன் போல் ஆனான் சிங்கன்.



"அன்பர்களே! அனைவரும் ஒரு நிமிஷம் எழுந்து நின்று நமது வட்டத்தில் நகரசபை தேர்தலுக்கு 'சுற்றும் குண்டாபுதபாணி'யின் டெபாசிட்டாவது திரும்பிவர ஆண்டவனைப் பிரார்த்தித்த பின் அமைதியாக உட்கார வேண்டுகிறேன்."

"நாட்டியப் போட்டிகளில் பதம் ஆடுவதில் போட்டி, வர்ணம் ஆடுவதில் போட்டி என்றுதான் வைப்பது வழக்கம். ஆனால் இன்று நடக்கும் போட்டி கீழ்த் திசை நடனத்திற்கும், மேல் திசை நடனத்திற்கும் நடக்கும் போட்டி ஆகும். பொதுமக்களின் ஆதரவு எதற்கு அதிகமாக இருக்கின்றதோ அந்த ஆட்டமே வென்ற ஆட்டம் என்று முடிவு செய்வது என்று ராணியாரால் தீர்மானிக்கப் பட்டது.

"நீங்கள் அத்தனை பேரும் ஆவலுடன் காத்திருக்கும் ஆடலரசி அரண்மனைச் செல்வி ஆடுமயில் அவர்களின் மேலை நாட்டியம் முதலில் ஆரம்பமாகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இளவரசியார் அவர்களே! உங்கள் அற்புதமான ஆட்டத்தை ஆரம்பிக்கலாம்" என்று சொல்லித் தம் இருக்கையில் அமர்ந்தார் தஞ்சை மன்னர். நாட்டிய சாலையின் சுவர்கள் எல்லாம் மக்களின் கரகோஷங்களை எதிரொலி செய்தன. மேல்நாட்டு வாத்தியங்களின் இசை கோடையிடி போல் துவங்கியது. அதன் எதிரொலி கட்டடத்துக்குள் அடைபட்டு மக்கள் காதுகளில் எல்லாம் நிரம்பியது. மின்னல் பூமியில் இறங்கி வந்து ஆடுவது போல் ஆடும் மயில் ஆடினாள். வைத்த கண் வாங்காமல் கூட்டத்தினர் அவளையே பார்த்தனர்.

புதுமை! இசையில் புதுமை! அவள் செய்து கொண்டிருந்த அலங்காரத்தில் புதுமை. இரு கால்களிலும் பிறந்த லயத்தில் புதுமை. ஜனங்கள் புதுமையில் மெய்மறந்தனர். அவள் ஆடும் பொழுது அடிக்கடி அவள் காலிலிருந்து கனல் பொறிகள் பறந்தன. குதியங்கால் ஜோட்டில் அடித்திருந்த லாடம் தரையில் படும்பொழுதெல்லாம் குதிரைக்காலில் இருந்து நெருப்புப் பொறி வருவது போல் பளீர் பளீரென்று தணல் பறந்தது. கனல் தெறிக்க ஆடினாள். கண் தெறிக்க மக்கள் பார்த்தனர். விசை வைத்த பொம்மை திரும்புவது போல் விர் விர் என்று திரும்பித் திரும்பி ஆடினாள். பார்ப்பவர் கண்களில் அவளது முன்புறம் மறைவதற்கு முன் அவளது பின்புறம் தெரிந்தது. பின்னழகை ரசிப்பதன் முன் பக்கவாட்டில் நின்று பரபரவென்று ஆடுவாள். எத்தனைதான் பொறுமையாகப் பார்த்தாலும் அந்த அழகை முழுவதும் பருக முடியாமல் மக்களின் விழிகள் ஏங்கின.

அவள் அழகி. அதிலும் அரசி. பார்ப்பவர்களோ அவளது பிரஜைகள். பாராட்டுக்குக் கேட்கவா வேண்டும்? மக்களின் கரகோஷம் அடிக்கடி எழுந்தது. அந்த ஆங்கில நடனத்தில் ஓர் அசுர பலம் இருந்தது. இத்தனை பலம் இளங்கொடி போன்ற ஒரு பெண்ணுக்கு இருக்குமா என்றுகூட மக்கள் வியந்தனர். லாகவம், லளிதம், நளினம் என்னும் அம்சங்கள் குறைவாகவும், உடற்கட்டை எடுத்துக்காட்டும் கவர்ச்சி அம்சம் அதிகமாகவும் அவளுடைய ஆட்டம் அமைந்திருந்தது. அவளது ஒவ்வோர் அங்க அசைவும் அவையினரின் ஆசை வெறியைத் தூண்டிவிட்டது. அவள் தரையில் மாறி மாறி உதைத்த பொழுது தரையில் அவள் கால்கள் படவில்லை. அவர்கள் மனத்தில் உதைத்தது போல் இருந்தது. அது வேதனை தரவில்லை; இன்பக் கிளுகிளுப்பைக் கொடுத்தது. அவளது நீண்ட கால்களில் பல ஆண்களின் கண்கள் நிலைத்தன. காலிலேயே இத்தனை கவர்ச்சி இருந்தது என்றால் அந்தக் கன்னிகை எவ்வளவு கவர்ந்திருப்பாள் என்பதைச் சொல்லவா வேண்டும்? சபாஷ் சபாஷ் என்ற கூக்குரல் சபை முழுவதும் நிரம்பியது.

"ஆடும் மயில்தான் அடித்தாள் பரிசை" என்றார் சின்னப் பெருமாள். அவர் வியந்ததில் ஆச்சரியம் இல்லை. பின்னணி வாசித்த வெள்ளைக்காரர்களே உள்ளம் மயங்கிக் கரகோஷம் செய்தார்கள் என்றால், அந்தக் கவர்ச்சியை எழுதி முடியுமா? ஆனால் தஞ்சை அரசர் அவளைப் பார்த்த பார்வையில் ஒரு தனித் தன்மை இருந்தது. வருங்காலத்தில் தனக்கு மருமகனாக வரப் போகும் மங்கை நல்லாளை அவர் மனம் வாழ்த்த

விரும்பியது. ஆனால் அவளுடைய ஆடலைக் கண்டு தம்மையும் அறியாமல் அவர் தலை குனிந்தார். அவள் திரும்பிய பொழுதெல்லாம் ஆடவர்களின் மனம் அவள் பக்கம் திரும்பியது. அவள் குதித்த பொழுதெல்லாம் ஆசை அவளைத் துதித்தது. மாமா சின்னப் பெருமாள் மது குடித்தவர் போல் மயங்கினார். பாவையின் ஆட்டம் நமது பண்புக்கு ஒத்து வராவிட்டாலும் இன்பச் சுவையை எங்கும் தெளித்தது. பொதுமக்களிடையே அவள் ஒரு பொது மகள் போல் தோன்றினாள். ஆசை அளவு மீறியதும் துடித்த மனங்கள் அடங்க ஆரம்பித்தன. வெறி அடங்கி மனசில் நெறி பிறந்தது. 'சீச்சி! இந்தப் பழம் புளிக்கும்' என்பது போல் ஓர் அலுப்பு அந்த ஆட்டத்தில் ஏற்படுகின்ற நேரத்தில் அவள் அற்புதமாக ஒரு வேலை செய்தாள். அரங்கத்தின் கீழ்க்கோடியிலிருந்து மேல் கோடி வரை கரகரவென்று பம்பரம் போல் சுழன்று கொண்டே உள்ளே சென்றாள். அதற்கென்றே தைத்த அந்த உடை செய்த ஜால வித்தையில் மக்கள் அனைவரும் 'ஹோ ஹோ'வென்று கூச்சலிட்டார்கள். ஆண் மனமெல்லாம் அவளோடு கூடச் சுழன்று கிறங்கின. ஆனால் தாய்க் குலத்தின் மனமோ தமிழ் நாட்டின் மானமே தலைகீழாக விழுந்ததுபோல் தவித்தது. பின்னணி இசையினர் பெருத்த கரகோஷம் செய்தார்கள். அதைத் தொடர்ந்து அவையோரிடமிருந்து ஆனந்த இரைச்சல் கேட்டது. அதுவரை அவர்களுடைய கண், காது, கை முதலிய அவயவங்களும், கருத்தும் பரபரப்பில் ஆழ்ந்திருந்தன. பரபரப்புத் தணிந்து சற்று யோசிக்க ஆரம்பித்ததும், 'சே, ஏன் இப்படி ஆடி எங்கள் உள்ளத்தைப் பந்தாட வேண்டும்?' என்ற கழிவிரக்க உணர்ச்சி எல்லோர் முகத்திலும் பிரதிபலித்தது. இதைக் கண்டார் மன்னர். இனி எவள் ஆடினால்தான் என்ன ? இதற்கு மேல் ஆசையை ஒருத்தியால் தூண்ட முடியுமா என்ற கேள்வி எல்லோர் உள்ளத்திலும் எழுந்தது. இரைச்சல் அடங்கியது. இதயங்கள் அடங்கின. அப்பொழுது சுநாதமாக, சுகமாக ஒரே ஒரு புல்லாங்குழலிலிருந்து மோகன ராகம் மிதந்து வந்தது. இரவில் சூறாவளிப் புயலில் சிக்கி அடிபட்ட மரங்களின் இடையே, நிர்மலமான வானிலிருந்து காலைச் சூரியனின் பொன்னொளி பரவுவது போல் ஐம்புலனும் ஒடுங்கிய மக்கள் மனத்தில் இந்தக் குழல் ஓசை பரவி ஒரு கதகதப்பை அளித்தது. எல்லோரும் குயிலியின் அறையை நோக்கித் திரும்பினர். அப்பொழுது கோஷ்டிகானமாக,

''அத்திமுகனே சரணம் - திரு
ஆனைக்காவில் அமர்ந்து அருள்புரியும் (அத்)

சந்திரவுமை பாலகனே
சண்முகனின் முன்னவனே
புத்திதரும் வித்தை தரும்
புத்திர சம்பத்து தரும் (அத்தி)

என்ற பாடல் ஒலித்தது. பாடல் முடியுமுன்னரே குயிலியின் சின்னம்மாள் அடக்கமாக நடந்து வந்து வித்துவான் முத்துரங்கத்தின் வீணைக்கு முன் பயபக்தியுடன் நமஸ்காரம் செய்தாள். பிறகு அந்த வீணையைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு வாசிக்க ஆரம்பித்தாள். நாட்டை ராகத்தைப் பாட்டுடன் கலந்து பரிமாறினாள்.

''ஏன் வித்துவான் வரவில்லை. அவர் எங்கே? பெண்களுடன் ஓர் ஆண் மகன் போட்டி இடுவது பெருந்தன்மை அல்ல என்ற எண்ணத்தில் தான் அவர் வரவில்லையோ என்னும் கேள்வியும், சமாதானமும் அந்தக் கூட்டத்தினிடை எழுந்தது. முதல் பாட்டும், வீணையின் நாதமும் ரசிகப் பெருமக்கள் மனத்தை உயர்த்தி மனிதப் பண்பின் உச்சியில் நிற்கும்படி செய்தன. முதலில் திருவானைக்காவுக்கு அழைத்துச் சென்று காவிரியில் நீராட்டி அகிலாண்டேச்வரியினடியினைப் பணியச் செய்து பிறகு உச்சிப் பிள்ளையாரைத் தரிசனம் செய்வித்து அவர்களைத் திரும்பவும் அவைக்கு அழைத்து வந்தது அந்தப் பாடல். இதை அடுத்து வீணை மட்டுமே ஒலித்தது. இசையின் தாயாகிய வீணை, ராஜ ராஜேச்வரியின் சந்நிதியை அலங்கரிக்கும் வீணை, அதன் மெல்லிய தந்திகளிலிருந்து துல்லியமான இசையை வழங்கியது. ஆஹா! என்ன அற்புதம் ! அத்தனை மேல்நாட்டு வாத்தியங்களின் ஓசைகளிலும் காண முடியாத ஓர் இன்பத்தை அவ்வீணாதேவி இனிய நாதத்தில் வழங்கினாள். ஆனால், அடுத்து வந்த குரல் அந்த வீணையின் நாதத்தையும் விழுங்கியது. ஆம், குயிலி முதலில் வரவில்லை. அவள் குரல் தான் முதலில் ஒலித்தது !

''ராஜ ராஜேச்வரியின் கொலுவில் திருமகள் சல்லரி வாசித்தாள். வாணி வீணை இசைத்தனள். வீணையில் அரிய கமகம் ஒன்று வெளி வந்தவுடன் ராஜ ராஜேச்வரி, ''கலைவாணியே இன்று உனது வாசிப்பு அற்புதமாக இருக்கி

றது'' என்று பாராட்ட ஆரம்பித்தாள். அன்னையின் குரல் வெளிவந்த அக்கணமே வாணி தனது பட்டாடையால் வீணைத் தந்திகளை மூடினுள். இதைக் கண்ட அன்னை ராஜராஜேஸ்வரி, ''வாணியே, ஏன் வீணையைப் போர்த்திஞய்?'' என்ருள்.

''அம்மையே, மதுரமான தங்கள் குரல் இனிமைக்குமுன் என் வீணையைப் போர்த்திக் கொள்ளாமல் என்ன செய்வது? உங்கள் குரலைக் கேட்ப தற்கே அதன் ஒலியை நிறுத்தினேன்'' என்றனள் வாணி. ஆம், இனிய சாரீரத்தின்முன் எந்த இசைக் கருவிதான் நிற்க முடியும்? குரலுக்கு முன் விரல் எழும்புமா? குயிலியின் குரல் கோலாகலமாக மண்டபம் முழுவதும் ஒலித்தது. ஒவ்வொரு செவியும் அந்தக் குரலின் சுவையைப் பருகியது.



''ஏன் சார்! கொஞ்ச நேரத்துக்கு முன்னுடி உங்க காலைத்தானே நல்லா மிதிச்சுட்டுப் போனேன்.''
''ஆமாம்...!''
''அப்படின்ஞ, இந்த வரிசையில் தான் நான் உட்கார்ந்திருந்தேன்.''

ஆடும் குறத்தி வந்தாள் அகிலாண்டநாயகி
அன்னை முன் வாயிலில் (ஆடும்)

என்று பொன்மணி நாதம் முழங்க பூவைக் குயிலி புலர்ந்த பொழுது போல ஆடி வந்தாள்.

கருந்துளசி மணக்கும் ஆறு
காவிரியென் ஆறு — அரங்கன்
கள்ளத் துயில் கொள்ளும் ஊரு
அரங்கம் எந்தன் ஊரு.
பொறந்தும் திருவாய் மொழிகள்
பொங்கி வரும் ஆறு.
பொன்னிவனக் குறத்தி நானே
சீரங்கி என் பேரு

என்று தேன்மாரி பொழிந்ததுபோன்ற குரலில் பாடிக் கொண்டே தென் மலைச் சந்தனம் மணப்பது போலக் குறத்தி வேடத்தில் குயிலி ஆடி வந்தாள்.

சின்னத்தம்பியின் மத்தளத்திற்கு ஏற்ப அவள் அன்ன நடைபோட்டு ஆடினுள். இரத்தம் வற்றிய உடலில் தன் இன ரத்தம் ஏற்றப்பட்ட நோயாளி எழுந்து துள்ளுவதுபோல சீரங்கக் குறத்தியைப் பார்த்தவுடன் திருச்சி மக்கள் குதித்து ஆடினுர்கள். சோழ மண்டலத்தின் அன்னக் கொடி ஆடி வருவது போல், மின்னற்கொடி மறையாமல் நின்று ஆடி நிலவுவதைப் போல், பொன் கொடியாகப் பூவை ஆடினுள். அவளது முகத்தில் பூத்த மலர் போல் புதுநகை தவழ்ந்தது. இடையில் கட்டியிருந்த பாவாடையில் பொருத்தப் பட்டிருந்த மணிகளும் இரு தாள்களில் கொஞ்சிய சிலம்பும் ஜணஜண என்று அவள் ஆடிய நடையில் ஆர்ப்பரித்தன. மந்திரத்தில் கட்டுண்ட மாநாகம்போல மக்கள் எல்லோரும் அவளைப் பார்த்தனர். அவளது அள்ளிச் செருகிய கொண்டை அத்தனை பேருடைய மன மலர்களையும் அள்ளிச் சொருகிக் கொண்டது. சுருண்டு தொங்கிய முன் மயிர் கற்றையின் அழகில் பல கண்கள் மருண்டு மயங்கின. அவள் நெற்றியில் இட்ட பொட்டுக்குள் பல மணங்கள் ஒட்டின. பலரது மயல் விழிகள் அவளது கயல் விழிகளில் கலந்தன. அவளது நெற்றிக் கண்ணுடியில் பலர் தங்கள் கண்களைப் பதித்துத் தங்கள் கலை உள்ளத்தைப் பார்த்தனர்.

''வள்ளிக்குச் சீதனமாய்
வயலூரைக் கொடுத்தோம் — அவள்
அள்ளிக் குடிக்கப் பொன்னி
ஆற்றை வெட்டிக் கொடுத்தோம்
துள்ளி விளையாடும் மயில்
தோகை விரித்தாட
தோப்புகளை வைத்துவிட்டோம்
துயில் அரங்கமாச்சு
திருவானைக்காவிலுரை
தேவியின் கைபார்த்து
சிவபெருமான் வருவர் என்று
திருவுளம் நான் சொன்னேன்.
ஆறு இரண்டின் நடுவே
அரங்கனைக் கும்பிட்டால்
அரிராமர் உன் குலத்தில்
அவதரிப்பார் என்றே
இக்ஷுவாகு மன்னனுக்கு
எங்களது பாட்டி
இருநாழி நெல்லுக்காக
எடுத்துரைத்தாள் குறியே
குறி சொல்ல வந்து ஆடும்
குறத்தி மகள் நானே
குணசிங்கன் மாணவி நான்
குயிலி எந்தன் பேரே''

செஞ்சுருட்டியிலே கொஞ்சினுள் குறத்தி. நெஞ்சை உருட்டியது அவள் பாட்டு. மக்கள் கருத்தை எல்லாம் சுருட்டும் அந்த ராகத்திற்கு நெஞ்சுருட்டி என்று பெயரிடாமல் செஞ்சுருட்டி என்று யார் பேரிட்டார்கள்?' என்று யோசித்தார் துக்கோஜி மன்னர். **(தொடரும்)**

1975-ல் தமிழ்ப்படம்

ஒரு திருமணம் நடக்கிறது. மாலை வரவேற்பின் பொழுது அரங்கில் ஒரு நடனம் நடைபெறுகிறது. திடீரென மணமகன் மணமகளிடம் ஏதோ ரகசியமாகக் கூறிவிட்டு வெளியேறுகிறான்; சிறிது நேரத்தில், மணமகளும் வெளியேறுகிறாள். வந்திருப்பவர்கள் ஆச்சரியத்தில் மூழ்குகிறார்கள். திடீரென அரங்கில் திரை தூக்கப்படுகிறது. பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ஏன்? குறவன் குறத்தி வேஷத்தில் மணமக்கள் நின்று கொண்டு, 'கிச்சடி, பச்சடி, மச்சடி, லச்சடி' என்று ஒரு பாடலைப் பாடிக் கொண்டு கூத்தடிக்கிறார்கள்; பின் ஆங்கில உடையில் சிறிது நேரம், அரச உடையில் சிறிது நேரம்.

நான் மேலே வர்ணித்திருப்பது வேறொன்றுமல்ல, 1975ம் வருடத்திலே தமிழ்த் திரைப் படங்களில் வெளியாகப் போகிற காட்சிகள் எப்படி இருக்குமென எண்ணிப் பார்த்தேன். அந்தச் சிந்தனையின் விளைவே இந்தக் கற்பனை.

நாகர்கோவில்
30–9–68 ந. பூதலிங்கம்

ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன் பேட்டிக் கட்டுரை தணிக்கைக் குழுவின் நிலை என்ன என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

தணிக்கை உறுப்பினர்கள் தாங்கள் தமிழ் நாட்டின் கலாசாரத்தை நிலைநிறுத்தவே நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மனத்தில் கொண்டு இயங்க வேண்டும். ஆங்கிலப் படத்தை, அல்லது இந்தி படத்தை மேற்கோளாகக் காட்டித் தமிழ்ப் பண்பாட்டைக் கெடுக்கும் காட்சிகளைச் சேர்க்கத் துணை நிற்கக் கூடாது. 22–9–68 கல்கி இதழ் தலையங்கத்தில் இராஜாஜி அவர்கள், "மற்ற நாடுகளில் காணப்படும் வழிகள் நம்மைத் தவறான பாதையில் இட்டுச் செல்வதற்கு அநுமதிக்கக் கூடாது" என்று எழுதியுள்ளார். தணிக்கைக் குழுவினர் "வேலியே பயிரைமேய்வது" போல் இயங்காமல் பாரபட்சமற்ற முறையில் ஆபாசமான காட்சிகளையும், பாடல்களையும் வெட்டியெறிய வேண்டும்.

சென்னை
20–9–68 சா. ஆனந்தன்

திரு பி. எஸ். ராமையா அவர்கள் நன்கு சிந்தித்து வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் ஒவ்வொன்றும் 'சிந்தனைக் கடலின் சத்தான முத்துக்கள்'. என்னைப் போன்ற ஆயிரக் கணக்கான வாசகர்களின் உள்ளக் குரலே ஆசிரியர் அவர்களின் கருத்துக்கள் மூலம் வெளிப்பட்டிருக்கிறது!

திருச்சிராப்பள்ளி
4–10–68 கமலா ராஜகோபாலன்

கல்கியில் "சினிமா சிந்தனை" என்ற பகுதியை வாரம் தவறாமல் படித்து வந்தவன் நான். ஒவ்வொரு கோணத்திலிருந்தும் 'சினிமா உலகம்' தரம் கெட்டுப் போனதற்கான காரணங்களை ஆராய்ந்து, அப்பகுதியில் அருமையாக விளக்கப்பட்டுள்ளது.

கேட்கச் செவி கூசும் ஆபாசப் பாடல்களைத் திரும்பத் திரும்ப ஒலிபரப்புவதை வானொலி நிலையங்கள் நிறுத்திவிடுமேயானால், அவற்றை ஒலிபரப்புவதை அரசு தடை செய்யுமானால் மூன்று மாதங்கள் ஏன்? மூன்றே வாரங்கள் போதும், தமிழ்த் திரையுலகைத் தூய்மைப் படுத்த. வானொலி நிலையத்தார் இதற்கெனத் தமிழ்ப் பெரியார்கள், அறிஞர்கள் கொண்ட குழு ஒன்றை அமைத்துத் திரைப் பாடல்களை வரையறை செய்து ஒலிபரப்ப வழி வகுக்க வேண்டும்.

சென்னை—33
10–10–68 எம். ஆர். ராஜன்

பொதுஜன சகஜ வாழ்க்கையில் நம்முடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்ளச் சங்கோசப்படும் தனித் தனி மனிதக் கூட்டங்களின் ஒரே பிரதிநிதியாக நின்று மிகப் பிரமாதமாகத் தமிழ்த் திரையுலகின் சீர்கெட்ட நிலையை விவரித்திருக்கிறார் திரு பி. எஸ். ராமையா. அவரது வேண்டுகோளைச் செயல்படுத்தும் வகையில் மதுரையிலிருந்து வெளிவரும் 'சாரநாத்' பத்திரிகை அதனுடைய தீபாவளிச் சிறப்பிதழில் 'திரையுலக அழுக்கை'ப் பற்றித் தலையங்கம் எழுதித் தன்னுடைய பங்கை நிறைவேற்றியிருக்கிறது.

மதுரை
10–10–68 பார்வதி மணாளன்

சினிமாத் தயாரிப்பாளர்கள் மக்களை மக்களாக வாழ வைக்க நெறியான, தரமுள்ள படங்களை எடுக்கட்டும். காகம் இருக்கிறது. அதற்குப் பாலுணவைப் படைத்து அருகிலேயே செத்த எலியைப் போட்டால் நல்ல பாலுணவை விடுத்து எலியைத்தான் தின்னும். பாலுணவை மட்டும் படைத்தால்? மகிழ்ச்சியுடன் அதை உண்ணும். செத்த எலிக்குச் சமமான ஆபாசப் படங்களைத் தவிர்த்துப் பாலுணவுக்கு ஒப்பான நல்ல படங்களையே தயாரிப்பாளர்கள் தயாரித்து மக்களுக்குப் படைத்துப் பார்க்கட்டும், கண்டிப்பாக அகில இந்திய ரீதியில் தமிழ்ப் படம் முன்னேறும்.

சிங்காநல்லூர்
11–10–68 ந. கு. இராமநாதன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam


தாயிடமிருந்து மகளுக்கு வரும்
உட்வர்ட்ஸ் அறிவுரை

உங்கள் குழந்தையை ஆரோக்கியமுடன் குதூகலமாக வைத்திருக்க உறுதுணை

உட்வர்ட்ஸ்

கிரைப் வாட்டர்

தலைமுறை தலைமுறையாக புத்திசாலித் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்து வருவது உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர். குடல் வலி, புளிப்பு, உப்புசம், பல்முளைப்புக் கோளாறுகள் ஆகியவற்றுக்கு உடனடி நிவாரணம் தருவது உட்வர்ட்ஸ்.



காத்துக் கொள்வீர்
கண்டிப்புடனே.
எப்போதும் ஒரு புட்டி
உங்கள் கைவசமிருக்கட்டும்



உட்வர்ஸ் கிரைப் வாட்டர்
நூறு ஆண்டுகளுக்கு மேலாக
புத்திசாலித் தாய்மார்களால்
உபயோகிக்கப் பட்டு வருகிறது.

AT. 30 TM

REGISTERED NO. M. 4382
Registered as a Newspaper in Ceylon